

சுவாமி விவேகானந்தா


# பாரதி

ஓர் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர். (பாரதி.)

ஆசிரியர்: ரா. நாராயணசுவாமி.

| மாலை 2 | உத்தமபாளையம் 1930 வரு மார்ச்சுமீ | மணி 3 |
|---|---|---|


## இந்தியாவின் இருபது கட்டளைகள்.


ரா. நாராயணசுவாமி,
ஆசிரியர், "பாரதி."


இந்தியா நமது மாதுரு தேசமென்றும் இந்தியர்கள் அனைவரும் நமது சகோதரர்களென்றும் எண்ணி, தேசிய சகோதர உணர்ச்சி கொள்ளுங்கள்.

2. சுயராஜ்யம் பெறுவதற்குத் தடைகளாயிருக்கும் தடைகள் எல்லாவற்றையும் தாண்டிச் செல்லுங்கள்.

3. நம்முள் இருக்கும் அற்பப் பிரிவினையை முன்னிட்டுத் தேசாபிவிருத்தியைத் தடை செய்யாதீர்கள்.

4. தாழ்ந்த சகோதரர்களை உயர்த்துங்கள்.

5. மதப் பெருமை பிடித்தோ ஜாதி அகம்பாவங் கொண்டோ சுயநலம் கருதியோ தேசத் துரோகம் செய்து தேசத்தைக் காட்டிக் கொடுக்காதீர்கள்.

6. கால தேச வர்த்தமானத்தை அனுசரித்தே நடங்கள்.

7. நிர்மூலத் திட்டத்தைக் காட்டிலும் நிர்மாணத் திட்டத்தைப் பின்பற்றுங்கள்.

8. இந்தியாவின் உயிர், கிராமங்களிலே இருக்கிறதென்பதைத் தெரிந்து, கிராமங்களைக் கவனிக்காதவரை நகரங்களுக்கு ஆபத்து என்பதையும் அறிந்து கிராமச் சீர்திருத்த வேலைகளைச் செய்யுங்கள்.

9. "தேச சேவையே தெய்வ சேவை" "மானிட சேவையே மகா சேவை" என்பதைத் தெரிந்து எங்கும் எப்பொழுதும் தேசாபிமானங்கொண்டு எல்லாக் காரியங்களையும் செய்யுங்கள்.

10. இந்தியாவில் பல் வேறு மதத்தினர்களும் பல் வேறு ஜாதியினர்களும் இருப்பதால், தேச விடுதலையின் பொருட்டு ஒவ்வொரு மதத்தினருடையவும் ஒவ்வொரு சமூகத்தினருடையவும் கூட்டுறவும் ஒத்துழைப்பும் அத்யாவஸ்ய மென்பதை உணர்ந்து நடங்கள்.

11. சிறிய மனஸ்தாபத்தை முன்னிட்டுப் பெருங் காரியங்களில் பிரிந்து புதிய கட்சிகளை உண்டாக்கிக் காரியக் கெடுதி செய்யாதீர்கள்.

12. அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டால் சமரசத்திற்காக விட்டுக் கொடுங்கள்.

13. எப்பொழுதும் இந்தியாவிலே செய்யப்பட்ட சாமான்களையே வாங்குங்கள்.

14. இந்தியாவிற் கிடைக்காத அயல் நாட்டுப் பொருள்கள் கட்டாயம் வேண்டியிருந்தால், தேவைக்குமட்டும் வாங்குங்கள்.

198526



15. நூதன முறையான விவசாயத்தால் இந்தியாவின் விளை பொருள்களைப் பெருக்கி, அநேக புதிய வழிகளில் பிரவேசித்து பல நவீன பண்டங்களை உண்டாக்குங்கள்.

16. இந்தியாவின் மூலப் பொருள்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாது கூடியமட்டில் முயன்று இந்தியாவில் செய்யப்பட்ட சாமான்களையே அன்னிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யுங்கள்.

17. இந்தியர்களுக்குச் சொந்தமான கப்பல்களிலேயே இந்தியச் சாமான்களை ஏற்றி, இந்தியக் கப்பற் கம்பெனிகளுக்கு உதவி செய்தும், இந்தியப் பாங்குகளிலேயே பணத்தைப் போட்டுக் கொடுக்கல் வாங்கல் செய்து இந்திய பாங்குகளுக்கு ஆதரவு அளித்தும், இலாபம் முற்றிலும் இந்தியர்களுக்கே சேரக்கூடிய இன்சூரன்ஸ் கம்பெனிகளில் இன்ஷியூர் செய்து ஆதரித்தும், இந்திய என்ஜினீயர்களுக்கும் இந்திய சாஸ்திரீய விற்பன்னர்களுக்கும் மற்ற இந்திய நிபுணர்களுக்கும் தொழில்கள் கொடுத்து ஊக்கம் உண்டாக்கியும் இந்தியாவைப் பல் வழிகளில் அபிவிருத்தி செய்யுங்கள்.

18. புத்தம் புதிய கைத்தொழில்களை நூதனமாக ஏற்படுத்திச் சாஸ்திரீய ஆராய்ச்சிகளால் ஏற்கனவே யிருக்கும் தொழில்களை விருத்தி செய்து இந்திய வர்த்தகத்தைப் பரப்புங்கள்.

19. இந்தியாவின் கைத்தொழில்—, வியாபார அபிவிருத்திக்கு இந்திய மூலதனங்களையே உபயோகியுங்கள்.

20. எங்கும் பேர்பெற்று விளங்குமாறு அவ்வளவு மேன்மையாக இந்தியச் சாமான்களை உற்பத்தி செய்ய முயலுங்கள்.

# தமிழ் நாடும் தலைவர்களும்.

## திருவாளர் S. சோமசுந்தர பாரதியார் அவர்கள், M. A., B. L.

தற்காலத் தமிழகத்தில் எல்லாரும் தலைவர்களே! யாரும் ஏவ ஒத்துழைப்பவர் எவருமில்லை. அறிவுடைமைக் கழகு ஆராய்தல். தமிழ் மக்கள் பாரத நாட்டுப் பிறமக்கள் யாவருக்கும் இளையாத அறிவுடையவர். அதனால், துணிந்தபின் எண்ணும் இழுக்கற்ற அவர் எஞ்ஞான்றும் எண்ணுவதில் விருப்புடையர். வினை மேற்கொள்ளுமுன் தொழிற் றுறைகளைச் சூழ்ந்து தெளிதல் அறிவுடையார் கடன் என்பதைத் தமிழ்ப் பெரியார் என்றும் மறவார். "பொருள் கருவி காலம் வினையிடனோடு ஐந்தும் இருள் தீர எண்ணி" யபின்னன்றோ செயல் வேண்டும். அவ்வாறு தெளியுமுன் விரைந்து வினை செயும் மடமை நம்மவர்மாட்டென்று மில்லை.

பிற பகுதிகளி லெல்லாம் ஒரு சிலரே அறிவு மேம்பாடுடையோ ராவர். தமிழ் நாட்டில் எல்லாரும் மதி நுட்பம் அதி ஒட்பம் உடையவரே. ஆனால் சிலர் சொல்லப் பலர்தாம் சூழாது சொற்கேட்கும் சிறுமை தமிழரிடத்து என்றும் ஒன்றாது.

இன்னும் எத்தகையோர் குழுவிலும் எதற்குங் கலங்காத மனத்திட்பம் தமிழ் நாட்டிற் பிறந்தவர் எல்லார்க்கும் பொதுவுடைமை. பிறிதோர் சொல், தம் சொல்லை வெல்லும் வகையின்றி, மற்றவர்க்குத் தாம் கொண்டதை உணர விரித் துரைக்கும் சொல் வன்மை தமிழகத்தில் யார் யார்க்கும் எளிய திறம். சொலல் வல்லராகவே தமிழர் எதிலும் சோர்விலர்; அவையஞ்சார்.



யாவரையும் இகல் வெல்லல் இவர்க் கெளிது. ஆதலால் மகாநாடுகளில் தமிழ்ப் பெரியார், எதனையும் கூசாது பேசுவதோடமைவதில்லை. மற்றவர் மாற்றங்களை எடுத்தெறிந்து ஏசி ஓயாது வாதிடும் ஒட்பமும் மிகவுடையர்.

ஒன்றென்ற சங்கரரும், ஒன்றெனினும் இரண்டாகுமென வுரைத்த இராமாநுஜரும், ஒன்றில்லை இரண்டேயாம் நிலைத்த பொருள் எனும் சைவ சித்தாந்தரும் ஒருங்கே புகழ் படைத்து நிலவும் பெருமையுடைய தமிழ்நாட்டார், வாதப்போரில் இலகுவில் பிறர் எவர்க்கும் இளைப்பவரா? துவைத மதம் எழுந்த பின் அத்வைதம் விலக்கப் பட்டதா? அன்றி ஒருமை மத வுண்மை தெளிந்து இருமைக்கோள் நலிவடைகின்றதா? எஞ்ஞான்றும் தமிழகத்தில் எம்மதமும் வெற்றிக் கொடி விரித்து, விடாமல் வீரப்போ ராற்றி வருவதை நன்கறிபவருக்குத் தமிழ்த் தலைவர் மகாநாடுகளில் கேவலம் தன்னுணர்வற்ற ஒருப்பாடு கருதாமல் தனித் தனியே புதுத் துறையும் புத்தப் புது முறையும் காட்டிச் சலியாத சொற்போர் மூட்டி மகிழ்வது ஒரு புதுமையாகத் தோன்ற நியாயமில்லை.

தேசிய மகா நாட்டில் அயலவர் அரசியல் திருத்தம் பேசில், ஒரு தமிழர் உடனெழுந்து அனைத்திற்கும் ஆசாரச் சீர் திருத்தமே அடிப்படையாம் என்றறைந்து அதன் அவசியத்தை மிக விரிப்பர். அப்பொழுதே மற்றொரு தமிழ்த் தலைவர், ஆசாரம் சமயச் சார்புடையதாகவே சமுதாய நன்மை கருதும் அரசியற் கூட்டத்தார் அதில் தலையிடுவது அபாயகரமாகுமென எடுத்துரைப்பர்.

பிறர் நகைக்கும் பிள்ளை மணம் பிசகென்று கூறும் சாரதாவை உடன் மடக்கித், தொன்று தொட்டு நின்று வரும் பெரு வழக்கை விழுக்கென்ற சழக் குரைக்குச் சவுக்கடி என்று இடியேறுபோல் தமிழர் முழங்கி மகிழ்வர். இனி அரசியலிலும் அனைவரும் ஒருமனத்தராகிவிடும் குற்றத்திற்குத் தமிழர் இடம் தருவதில்லை. வளமற்ற களர் நிலத்தில் ஒருபடியே களைமுடும். செழிமை தரும் விளை புலத்திற் செடிகள் பல செழித்தோங்கும். மதிநுட்பம் தருக்க மதி வளம் நிறைந்த மனத் தமிழர் ஒரு துறையே

யெண்ணும் மனவுறுண்மைப் புன்பழி யேற்க மறுப்ப தியல்பே. வலிபடைத்த ஆங்கிலத்தார் மனம் திருந்த முறையியல்பு எடுத்தோதி யிசைவிக்க முயலுதற்கு முன்னாண்டில் விடையிரந்த காந்தியடிகளை மறுத்து, அது பேடிமனப் பெற்றியெனச் சிரித்து உடன் மலைந்தேனும் தனியாளும் தன்னரசு பெறுதுமெனத் தமிழர் நெடுமொழி புரைத்தார். இவ்வாண்டில் தனியாளும் தன்னாட்சி நல்லுரிமை தருவதற்கு ஆங்கில அரசப் பிரதிநிதி மறுத்துவிட்டா ராதலால் இனித் தாழாது தனியாட்சித் துறை யாற்றத் தலைப்படுவ தவசியமென்று அவ் வடிகளை கூறுங்கால், அரசியல் தரும முறையுணர்ந் தறியாத் துறவி யிவர் பிள்ளைமை பேசுகின்றார்; மற்றிவர் பற்றற்றவர், அதனால் பழிநாணார்; இழிவு ணரார்; உலகில் இவரொத்த ஒன்றும் அற்றாரைத் தலைவராகத் தேறுதலை ஓம்பல் கடனன்று என்று அறம் பேசி மறுத்து, அடிகள் தலைமையை அடியறுத்துத் தமிழ்த் தலைவர் தனியொரு கட்சி நிறுத்தித் தம் கொடி விரித்திருக்கின்றார்.

நாவன்மை மதிநுட்பம் கல்வியல்புகளில் தமிழர் புகழ், இமய மலைத் தலையமைப் பரந்துளது. இதுமட்டோ? வேண்டுழி வேண்டி யாங்கு பிற தலைவரை வெறுத்து மறுத்து அடியறுக்கும் விரகினிலும் தமிழரே தனி நிற்பர். அடிகளை யடக்குவதற்கு நேருவையும் தாசரையும் தலைவராக்கிப் புதுக்கட்சி நிலைநாட்டிக் காந்தியின் சாந்தியைச் சிறுகாலம் மழுங்க வைத்தார். தற்போது அடிகள்வழி யுடன் நின்ற நேருவை நம் தமிழ்த் தலைவர், நேர்மை யிலரென்று கண்டு நெகிழவிட்டுப் புதுக்கட்சி வகுத்துள்ளார். காந்திக்குச் சாப்ருவும், இருவருக்கும் ஜின்னாவும் எதிர் நிறுத்தி, மலைந்தவர்கள் எல்லாரும் வலியிழக்க விரகுடனே முயன்று அவர் தம் தலைமை கொல்வர். இது கிடக்க, பிற வகுப்பார் தமை வெறுத்துத் தமக்குள் தாம் ஒன்றுபட்டு ஒரு தலைமை உகந்து உழைக்கும் ஊனப்புன்மையேனு முண்டோ?

எம் தமிழச் சோதரர்க்குத் தலைவர்களேன்? ஒவ்வொரு வர்தாமும் தன் சமுதாய உடலினுக்குத் தலையே போல்வர். உறுப்புவேறுபட்ட உடலுணர்வு மயங்கறிவன்றோ? உண்மை



கருதில் உடல் பொய் உயிரொன்றே மெய்ப் பொருளாம் என்பது தமிழர் எல்லார்க்கும் ஒப்ப முடிந்த துணிபாகும். அவ் வுண்மையை அனுபவத்திற் கண்டுள்ள தமிழர் ஒவ்வொருவரும சமுதாயத்துக்குத் தாமே தலை தாமே கண் எனக் கருதும் இயல் புடையார். அறிவாற்றல்களில் ஒப்புயர்வற்ற தமிழ்ப் பெரியார் அனைவருமே தலை நிலையில் தனி நிற்பர்.

இனித் திராவிடர்கள், ஆரியர்தம் தலைமைக் கீழ் நிற்க மனம் இசைந்து இழிவு கொள்வரோ? நாயகரை நாயுடு பின் பற்றுவரோ? வைக்கத்தில் திருவாங்கூர்ச் சமஸ்தானச் சிற்றாட்சிப் பதவியினர் பிடித்து அகற்றப் பெற்ற தொன்று, ஆங்கில அதிகார அடக்கு முறையை எதிர்த்து அவர்தம் சிறையினையே பொருட் படுத்தாப் பெரு வாழ்க்கைப் புகழினுக்கு நிகராமோ? சத்தியமே உருவெடுத்த மூர்த்திகள் நாவன்மை யற்ற சிறு தலைவர் பின்னின்று வாளா வாய்வினை யாற்றல் தகுவதொன்றோ? அதனாலே தனித் தனியே தலை நின்று பொது வுரிமை நிதம் பேசித் தத்தம் தலைமை பேணித் துணையாவார் வேண்டாமல் அஞ்சா நெஞ்சராய்த் தமிழ்ப் பெரியார் தனிவாழ்வு வுகப்பர். ஊக்கமும் உரமுமற்ற கால்நடைகள் சேர்ந்து வாழும்; வலிபடைத்த அரியினமும் வரிப்புலியும் தனிவாழும் விருப்புடைய. தகவுடைய தமிழ்ப் பெரியார், தலைமை தவிர்த்து இழிந்து பிறர் தலைமைக் கீழ்ச் சேவகஞ் செய் சிறுமையினைச் சகிப்பவரோ? தமக்குரிய தனித் தலைமை தருவதற்கு எளிய புதுக் கட்சி நிதம் படைக்கும் திறம் படைத்த தமிழ்ப் பெரியார் தம் பெருமை சாற்றுணதே.

மாற்றுமற் கொள்கைகளைப் போற்றுவதைத் தகை மாண்ட தமிழ்த் தலைவர் தாம் விரும்பத் தகுவதொரு பெருமையெனக் கருதமாட்டார். தம் தலைமை மறுப்பதெல்லாம் அவர் வெறுப்பர். உண்மையிலே நல்லதெனில் அவர் தலைமை தாங்குதற்கு உதவ வேண்டும். அவர் பெருமை சொல்லாதார் கூறுவன தவறாகும். தம் தலைமை தலையெடுக்கச் சமயம் வரில் வைதீக மதப் பெயரால் சிசுக்களோடு விதவைகளைப் பெண்டிரொடு தாழ்வகுப்புச் சோதரரை யெனைவரையும் பலியூட்டித் தமதரிய நாவன்மை காட்டிக்

கேட்பவர்க்கு நரகபய மூட்டித் தமக்குரிய பதவிகளைப் பெற்றுக் காப்பர். அரசியலிற் பொது வுரிமை வற்புறுத்தும் பெரியோரே, உறவினர்தம் நலம் பேணித் தமிழ் மக்கள் வாழ்க்கை முறை வழித் துறையில் என்றும்போல் நின்றழிவது அறமென்று நீதிகளை வாதிப்பர். ஆசாரத் துறைகளிலே அந்தணர்தம் பிறப்புரிமை வெறுத் தகுற்ற விரைபவரே நமைச் சிறுமை செய்துவரும் அந்நியர்தம் துரைத்தனத்தைப் பேணி நமது அடிமைநிலை யுகந்து அதனைப் புண்ணியம் போற் போற்றும் மனப் பான்மை கொள்வர். இவையெல்லாம் தற்காலத் தமிழகத்தில் தம்தலைமை விரும்புபவர் புதிய சால்பாம்.

சமுதாயச் சேவை செய்வோர் தன்னல மறுப்பும் தலைவர்கள் சொன்னபடி நடப்பும் மேற்கொள்வது இன்றியமையாததாகும். பண்டையணியில் எனைத்து வீரரெனினும் ஒவ்வொரு சிப்பாயும் தானைத் தலைவர் தரும் கட்டளையைப் புறக்கணித்துத் தத்தம் கருத்தின் வண்ணம் ஒழுகப்புகின் அச் சேனைநிலை யாதாய் முடியுமென்பது சொல்லவும் வேண்டுமோ? அஃதே போல் தேசிய சுதந்தரப் போரில் வீரராவார் முதலில் தலைவரைத் தெளிந்து தேர்தல் கடனன்றோ? தேர்ந்து ஒருவருக்குத் தலைமை தந்த பின்னர் ஒவ்வொரு காரியத்திலும் அத் தலைவர் சொல்லை மீறித் தம் கருத்துப்படி கார்ய நிர்வாக யோசனை கூறுவரேல் தேச முன்னேற்ற முயற்சி பின்னர் என்னாகும்? திலகர் தம் சூழ்ச்சியும், தாஸர் போன்ற திட்பவினைத் திறமும் அடிகளின் அறத்துறவுக் கயலதாகும். எனைத்தானும் நவையற்ற அறத்துறையே பேணுவதில் முனைந்து நிற்பர். அரசியலில் அற்றூர் நவை என்னலுக் காகுநர் யாருமில்லா உண்மை உணர்ந்து, பெற்றுறுமுறை வரும் பயன் பெறுந் துறை சூழ்ந்து சூழ்ந்து "குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள், மிகைநாடி மிக்க"தைக் கொள்ளுதலே நல்ல முறை.

இவ் வாண்டில் தொழிற் கட்சியார், துரைத்தனத்தின் வருவதனைப் பெறும் முறைகள் சூழாமல் விரைந்து அவரைப் புறக்கணித்து வேறுபோதல் நலக் குறைவே யாதலினை நம்புகின்றேம்,



போப் ஐயர். (Rev. Dr. Pope, D. D.)



# போப் ஐயர்.

திரு. எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளையவர்கள், B. A., L. T.,

## போப் ஐயர் யார்?

இவர் கிறிஸ்தவப் பாதிரியார். இவர் தமிழ் நன்கு கற்றுச் சில தமிழ் நூல்களை ஆங்கில மொழி பெயர்ப்புடன் அச்சிட்டுத் தமிழ் மொழியின் பெருமையைத் தமிழ்நாடேயன்றி உலகமெங்கும் அறியச் செய்தவர். இவர் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இறந்து போகும்வரை தமிழ்ப் பாதிரியாராகவும் தமிழாசிரியாகவும் இருந்து ஏறக்குறையத் தொண்ணூறாம் வயதில் இறக்கும்பொழுது தம்முடலை யடக்கஞ் செய்யப் படும் இடத்தில் 'தமிழ் மாணவன்' என்று கல்லில் வெட்டி அதனைப்

---

எனினும், ஈண்டு இந்திய மகாநாட்டின் பெயராலே தலைவர் தரும் பணிகளை மேற்கொள்ளாமற் புதிய பல கட்சிகளைப் பெருக்குவது, தீது அதிகம் வளர்ப்ப தல்லால் நலம் தாராது. நாட்டின் நலம் கருது தமிழ்ப் பெரியார்கள் ஒன்றுபடும் துறைகளையே கையாண்டு பிளவுகளைப் பெருக்காமல் தாம் அறிவால் உயர்ந்திடினும் தலைவருக்குச் சொற் கேட்டு ஒத்துழைக்கும் அருங்குணத்தை மேற்கொள்ளில், தமிழகமும் பாரத நம் தாயகமும் வளமடையும்; அடிமை நிலை அனைவருக்கும் விடுதலைநாள் விரைந்தணுகும். அல்லாக்கால் அடிமை யிருள் கடித்து வளரும். தமிழகத்தில் இவ் விரவு புலர்ந்து என்றுதான் பகல் விடிவுண்டாமோ? என்று மாளும் நம் அடிமையில் மோகம், என்று மூளும் மெய்ச் சுதந்தர தாகம், என்று மடியு மித் தலைமையிற் பாசம், அன்று விடியும் நம் விடுதலை விழவு நாள்.

பதிக்கவேண்டுமென்று கூறி உயிர் துறந்தனர். இவ்வாறு தமிழுக்காக உழைக்கும் பாதிரிமார்கள் இக்காலத்திற் கிடையா வென்றே சொல்லலாம்.

## தமிழ் மாணவர்

இவர் பாலனாக இருந்த பொழுதே இவருக்குத் தமிழ் கற்க வேண்டுமென்றும் தமிழ் கற்றுத் தமிழ்ப் பாதிரியாக வேண்டுமென்றும் ஆசையுண்டா யிருந்தது என்று கூறப்படுகின்றது. சிறு வயதில் ஓல்டுஹோம் தெருவிலிருந்த வெஸ்லியன் ஆலயத்தில் நிகழ்ந்த பாதிரியார் கூட்டத்திற்கு இவர் சென்றிருந்தபொழுது பாதிரியாரொருவர் 'நான்சென்னைக்குப் போகிறேன். நான் தமிழ் கற்றுத் தமிழர்களுக்கு உபதேசிப்பேன்' என்று சொன்னசமயம் தமக்கும் வயது வருங் காலத்தில் தாமும் அங்ஙனமே தமிழ் நாட்டிற்குப் போய்த் தமிழ் கற்றுத் தமிழ் மக்களுக்கு உபதேசம் செய்யவேண்டுமென் றெண்ணம் உண்டாயிற்றென்று இவர் ஒரு பெரிய சபைமுன் கூறினர். சில ஆண்டுகள் கழிந்த பின் இவர் சென்னைக்குப் புறப்பட்டார். இவ ரேறிய கப்பலில் இவரைப் பண்டிதரென்று மற்றவர்கள் அழைத்தன ராம். ஏனெனில் இவருக்குத் தமிழ்க் கல்வி மீது அத்துணை ஆர்வ மிருந்தது. சென்னைக்கு வந்த பொழுது இவரை எதிர்கொண்டு அழைக்க வந்தவர்களில் கட்டைமரம் தள்ளிக்கொண்டு வந்த செம்படவனும் ஒருவனும். அவனை கப்பலுக்கும் கரைக்கும் எவ்வளவு தூரமென்று இவர் கேட்டதாகவும் அவன் தூய தமிழில் சரமாரி பொழிந்ததாகவும் அதைக் கேட்டுத் தனக்கு ஒன்றும் விளங்கவில்லையே யென்று நினைத்து செந்தமிழ் நன்கு கற்றுக்கொள்ள முயன்றனராம். ஒரு மொழியைத் தேடி அதுவும் நல்ல மொழியாக விருப்பதை நாடி அதை இடைவிடா மற் கற்றுத் தேர்ச்சி யடைதலே வாலிபனொருவன் கொள்ளத்தக்க பேரெண்ண மென்றனர். மனம் நிறைந்த இவ்வொரு எண்ணத்துடனேயே இவர் சென்னை மாகாணத்தில் தமிழ் மணங் கமழும் தாமிர வருணி பாயும் தமிழகப் பகுதியில் கிறிஸ்தவ வூராகிய சாயர்புரத்தில் சிறிதுகாலம் இருந்து கல்வி பயின்று வந்தனர். திருநெல்வேலியில் தமிழ்ப் புலமை வாய்ந்த சில பெரியாரிடம் தமிழ் கற்று நாலடி, குறள்,



திருவாசகம் ஆதிய நூல்களைப் படித்து ஆசான் கூறியதை அமைவுறக் கேட்டும் கேட்டவனைத்தையும் நோட்டுப் புத்தகங்களில் எழுதிவைத்தும் வந்தனர். இவை யனைத்தும் பிற் காலத்தில் இந் நூல்களை இவர் அச்சிட்டபொழுது பெருந் துணையா யிருந்தது என்பது திண்ணம்.

## சென்னை மாகாணத்தில் இவருழைத்த இடங்கள் யாவை?

முதலில் சாயர்புரத்தைக் கூறினோம். இதனைக் கிறிஸ்தவக் கல்விக்கும் உபதேசத்திற்கும் தலைசிறந்த இடமாகச் செய்தவர் போப் ஐயரே யாவர். இன்றும் அது சீரோங்கி யுள்ளது. அதனை முற்றிலும் கிறிஸ்தவ நகரமென்றே கூறலாம். எஸ். பி. ஜி வகையாருக்குத் தலையான வூர் அதுவே. 1839 ௵ திருநெல்வேலிக்கு வந்த போப் பாதிரியார் பத்தாண்டு வரை வேலை செய்த பின் இங்கிலாந்திற்குச் சென்று இரண்டாண்டு இளைப்பாறினர். இவர் 1851-ல் திரும்பித் தஞ்சைமா நகரத்திற்கு வந்தனர். திருநெல்வேலியில் தமிழ் மக்களுடன் கலந்து தமிழையும் தமிழர் நாகரிகத்தையும் பெற்றுச் சீர்மைக்குச் சென்று திரும்பி வந்தபொழுது தஞ்சையில் வேலை பார்க்குமாறு ஏவப் பெற்றனர். அவ் வமயம் அங்குள்ள தமிழ் மக்களின் நடையுடை பாவனைகளைக் கூர்ந்து கவனித்தனர். 'தஞ்சைக் கல்லூரி' என்ற கல்விச் சாலையை ஏற்படுத்தி அப் பகுதியில் ஆங்கிலக் கல்வியையும் கிறிஸ்தவ சமயக் கல்வியையும் ஐயர் பரப்பினர். அது செயின்ற் பீற்றர் காலேஜ் என்ற பெயரால் நாற்பதாண்டுகள் வரை புகழ்பெற்று வந்தது. இவருடைய மாணவர்களும் அவர்கள் பிள்ளைகளும் ஆயிரக் கணக்காகப் பெருகினர். அதன்பின் உதகமண்டலத்திலும் பங்களூரிலும் கிறிஸ்தவக் கொள்கைகளையும் மார்க்கத்தையும் பரப்புவதில் 1880-ம் ௵வரை உழைத்துவிட்டு அப்பொழுது இந்தியாவை விட்டு அகன்று தம்முடைய சுய தேசத்திற்குப் போயினர். போப் அவ்விடத்திலும் இவர் வாளாவிருக்கவில்லை. இவரது அபார உழைப்பால் டி. டி. என்ற 'சமய வாணர்' பட்டத்தையும் கான்றர்பேரியின் தலைக் கண்காணியாரிடம் பெற்றனர். இவர் எருதுத் துறை என்ற ஆக்ஸ்போர்டு நகரில் வசித்து வந்தனர். அங்குள்ள சர்வகலாசாலையார் இவருக்கு எம். ஏ. பட்டம்

அளித்தனர். 'பாலியல் காலேஜ்' என்ற கல்லூரியில் சமய போதகரா யிருந்து இவர் இருபது வருஷம் வாத்திமை வேலை பார்த்துவந்தனர். ஐ. சி. எஸ். பரீட்சையில் தெரிந் தெடுக்கப்பட்ட மாணவர்கட்குத் தமிழும் தெலுங்கும் கற்பித்துக் கீர்த்திபெற்றனர். தம்முடைய மாணவர்களுக்காகத் தமிழில் பாடப் புத்தகங்கள் சில எழுதி வெளியிட்டனர்.

## இவரால் பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் எவை?

சிறுவரும் சிறுமிகளும் இன்றும் கையில் வைத்து வழங்கும் நூல், போப்பையர் முதலிலக்கண மெனப்படும். இவ் விலக்கணம் பயின்று மேற்சென்ற மாணவர்கட்காகப் பவணந்தி முனிவர் செய்த நன்னூலாகிய பெரிய நூலை 1850ல் சூத்திரங்கட்கு ஆங்கிலத் தலைப்புடன் பதிப்பித்தனர். இப் பதிப்பின் முதற் பகுதியில் இலக்கண வினவிடையும், இறுதியில் இலக்கண அகராதியும் காணப்படும். இவ் விரு பகுதியிலும் இவருடைய நுண்ணறிவும் கல்வித் திறமையும் பொன்றயுஞ் சாலவிளங்கும். இப்பதிப்புச் சென்னைக் கவர்னர் லார்டு ஹாரிஸ் என்பவருக்கு உரிமையாக்கப் பெற்றது.

திருக்குறள் பல ஐரோப்பியர்களால் தங்கள் தங்கள் மொழிகளில் உரையுடன் ஆக்கப்பெற்றிருப்பது எவருக்கும் தெரிந்த காரியமே. பெஸ்கி என்ற வீரமா முனிவர், டூரு, பெர்சிவல், ஏரீல், ஆகியவர்கள் லத்தீன், பிரஞ்சு, ஜெர்மன், இங்கிலீஷ் முதலான பாஷைகளில் திருக்குறளை வெளிப்படுத்தி யுள்ளார்கள். அத்தகைய பெரியார் பலரி னுதவி பெற்றும் பரிமேலழகர் உரையைப் பின்பற்றியும், போப்பையர் தமிழ் வேதம் எனப்படும் அரிய பெரிய வொழுக்க நூலை ஆங்கிலத்தில் ஈரடிப் பாவாக இயற்றினர். அதில் முகவுரையும், நுணுக்க வுரையும், அகராதியும் உள, முகவுரையில் நூலினருமையைக் கூறுமிடத்துச் சென்றோம் சென்றாமசை இவர் மறக்கவில்லை. சிற்சில விடங்களில் வழுவினும் போப்பையர் மொழிபெயர்ப்பு மிகவும் நன்கு மதிக்கப்பட்டுளது. அகராதி மிகவும் உபயோகமுள்ளது. எச் சொல் எப் பொருளில் எங்கு வழங்கப்பட்டிருப்பது என்பதை ஐயமற அது எடுத்துக் காட்டும். நூலின் பொருளடக்கமும் குறிக்கோள்களும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. இந் நூலிற் கிணையான வொழுக்க நூல் எம் மொழியிலும் கிடையாதென்ற ஒரு பெருமையால் எவரும் இதனைத் தம்மொழிக்கு அணியாக அமைத்துள்ளார்.



நாலடியார் மொழிபெயர்ப்பு முதலில் தோன்றிற்று. செய்யுட்களின் பொருள்கள் உள்ளவாறே ஆங்கிலத்தி லமைத்திருப்பதை வியவாதார் எவருமிலர். வட நாட்டிலிருந்து பல சமணர்கள் பாண்டிய நாட்டில் பன்னீராண்டு பஞ்சத்தின் நிமித்தம் படிந்திருந்து பின்னர் வட திசை நோக்கிச் செல்லுங்கால் கருணை பொருந்திய அரசனிடம் நேரில் விடைபெற மனந் துணியாது ஒவ்வொருவரும் தத்தம் படுக்கையினடியில் ஒவ்வொரு வெண்பாவை வைத்துப் போனதில் சிறந்தன நானூறு செய்யுளே. வழக்கம்போல இந்நூலிற்கும் முகவுரை, குறிப்புரை, அடியுரை, அகராதி அமைக்கப்பட்டுள்ளன. குறள், நாலடி, இவ்விரண்டு நூலையும் போப்பையர் செய்த மொழிபெயர்ப்புடன் ஆங்கிலேயர் படிப்பரேல் தமிழின் தொன்மையும் சிறப்பும் நாகரிகமும் நன்றாக விளங்கும். 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்ற முதுமொழி இவ்விரண்டு நூல்களையே குறித்ததாகும். இவைகள் சிற்றுயிர்க் குற்ற துணையாம். எத் தருணத்திலும் எச் சூழ்நிலையிலும் எப் பொருளாராய்ச்சியிலும் இந் நூல்களிலுள்ள ஒளி பொருந்திய மணிகள் போன்ற அடிகளுந் தொடர்களும் உண்மையை விளக்கி வலியுறுத்த உதவுமென்பது வெளிப்படை.

'பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்'

'இன்னா செய்தாரை யொறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்து விடல்'

'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று'

'பெயக் கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்'

'பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வாச்
செய்தொழில் வேற்றுமை யான்'

இக் குறள்கள் தீமை விதைப்பின் தீமை விளையும் என்பதையும், தீயாரைத் தண்டிக்கும் விதம் அவருக்கு மிகுந்த நலஞ் செய்தலே என்பதையும், உப்பிட்டவரை உள்ளளவும் நினைத்தல் தகுதி, தீமையை மனதில் வைக்கலாகாது என்பன பற்றியும், கண்ணோட்டம், நன்றியறிதல், பரோபகாரம் இவற்றின் சிறப்பையும், பிறப்பாற் சிறப்பில்லை, தொழிலாற் சிறப்பு வரும் என்பதையும் வற்புறுத்தும் ஆற்றலைக் கவனிக்க.

‘கல்வி கரையில கற்பவர் நாள் சில
மெல்ல நினைக்கிற் பிணி பல’

‘ஒருவர் பொறை யிருவர் நட்பு’

‘கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந் தம் வாயாற்
பேர்த்து நாய் கௌவினா ரீங்கில்லை’

‘வன்காய் பலபல காய்ப்பினு மில்லையே
தன்காய் பொறுக்கலாக் கொம்பு’

‘ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலுமாங்கே கடுந்துன்பங்—காத்தல்
குறைபடிற் றுன்பம் கெடிற்றுன்பம் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்’

இந் நாலடிச் செய்யுளடிகளில் பெரிய வுண்மைகள் பொதியப்பட்டிருத்தல் காணலாம். மானிடப் பிறப்பின் இடும்பையும், பதிலுக்குப் பதில் செய்யாத் தகைமையும், பொறுமையும், பொருளால் வருந் துன்பமும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இத்தகைய உயிர்க்குறுதியான நன்மொழிகள் பலவுள.

இனிச் சைவ சமய நூலாகிய திருவாசகத்தையும் போப்பையர் மொழிபெயர்த்து மூலத்துடன் பதிப்பித்துள்ளார். முன் கூறியவை ஒழுக்க நூல்கள். இந் நூல் சைவ சித்தாந்தத்தை விளக்குவது. செய்யுளின் பொருளும் சுவையும் அறிதல் தமிழராகப் பிறவாதாருக்கு மிக அரிதென்பர். நம் போப்பையருக்கோ அப்படியன்று. தமிழ்



வாணரிடம் தாம் பெற்ற உரைகளைப் பல்லாண்டுகளாகச் சேமித்து வைத்திருந்து சீமைக்குச் சென்ற பின் அவற்றைப் பன்முறை வேறு துணையின்றி ஆராய்ந்து பார்த்து உண்மைகள் வழுவாமல் மொழி பெயர்த்திருப்பது அருமையே.

இந் நூலை மொழிபெயர்க்கத் தொடங்குமுன் போப்பையர் தம் முதுமையை நினைந்து முடிக்கும்வரை உயிரோடிருக்க வேண்டுமே என்று சந்தேகித்து ஒருநாள் மாலையில் பாலியல் கல்லூரியின் சதுக்கத்தில் பேராசிரியர் ஜோவெற்றுடன் அதைப் பற்றி உரையாடினரென்றும் அதற்கு அப் பெருமான் அதனை நீர் தொடங்க வேண்டுமென்றாரென்றும் அவர் ஆசி மொழியால் தாம் உயிருடன் இருந்து இந் நூல் மொழிபெயர்ப்பை முடிக்கக் கிடைத்ததென்றும் ஒருசமயத்தில் ஐயர் கூறினார். ஜோவெற்று என்னும் பெருமான் ஐயரிடமுரைத்த ஊக்க மொழி இதுவாகும். “பெரிய வேலையைக் கைக்கொள்ளல் நெடுநாள் வாழ்தலாகும்; இதனை முடிக்கும்வரை நீர் உயிருடனிருப்பீர்”. இம் மொழி பகர்ந்தவர் இந் நூல் முடியுமுன் காலஞ்சென்றனர். ஆசீர்வதிக்கப் பெற்றவர் ஆசீர்வதிக்கப்பட்டபடி எடுத்த வேலையை முடித்தனர். ‘இது 1900 ௵ ஏப்ரல் 24-ல் என்னுடைய எண்பதாவது வயதில் வெளியிடப்பட்டது. முதலில் தமிழ்ப் பாடம் நான் படித்தது 1837-ல். ஆகவே தமிழ்க் கல்வியில் நீண்டகாலம் பல ஆண்டுகளை யான் செலவு செய்திருக்கிறேன். இத்துடன் என் நூல் பற்றிய வேலை முடிவாகின்றது, என்று போப் ஐயர் எழுதுகிறார்.

இந் நூல்களையன்றி பல மாதப் பத்திரிகைகளுக்கும் போப்பையர் பல தமிழ் நூல்களைப்பற்றி வரைந்திருக்கின்றனர். புறநானூற்றிலிருந்து சில பாட்டுகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பத்திரிகைகளுக்கு உதவியுள்ளார். இவை அடிக்கடி சித்தாந்த தீபிகையில் வந்துள்ளன. இதே தீபிகையில் நம் ஐயர் ஆங்கிலத்தில் மணிமேகலையின் கதையைப் பல அதிகாரங்களாக வகுத்து வரைந்து அருளியிருக்கின்றனர். தவிரவும், சேக்கிழார் ஞானசம்பந்தர் ஆகிய சமயப் பெரியார் வரலாற்றையும் ஐயர் தம்நாட்டு மொழியில் கொடுத்துள்ளார். இவையன்றித் தமிழ்

நாடுகளிற் சிறப்புற்ற பெரிய புலவர்களைப் பற்றியும் அவர்களாலாக்கப் பெற்ற நூல்களைப் பற்றியும் பத்திரிகைகளுக்கு விஷயதானஞ் செய்திருக்கின்றனர். மேலும், புறப்பொருள் வெண்பா மாலையின் பன்னிரு படலத்திலுள்ள சாரத்தை விடாமல் ஆங்கிலத்தில் தந்துளார். இதுவும் புறப்பாட்டு மொழிபெயர்ப்புகளும் 'தமிழியன் ஆன்றிக்குவரி' என்ற வெளியீட்டின் ஆறுவது மலரில் ஒன்றுசேர்த்துத் தரப்பட்டுள்ளன. தவிரவும், பழமொழி நானூறு என்ற அருமையான நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருப்பதாகத் திருவாளர் நல்லசாமிப் பிள்ளையவர்களுக்குப் போப்பையர் எழுதி யிருந்தார். இது அச்சில் வெளிவந்த விவரந் தெரியவில்லை.

## கைம்மாறு

போப்பையர் சென்னை மாகாணத்தில் தமிழ் கற்கத் தலைப்பட்டபொழுது தமிழ்ப் பண்டிதரொருவர் 'நீர் தமிழைக் கற்றால் உமக்குத் தரித்திரம் வரும், அது உம்மை விடாது' என்றனராம். ஏனெனில் புலமை வாய்ந்தவர் உலக வாழ்க்கையைக் கவனியாமல் உயர் ஞானத்தையே கருதிக்கொண்டிருப்பது மல்லாமல் தாமின்புறுவதை உலக மறிந்து இன்புற வேண்டுமென்ற எண்ணங்கொண்டிருப்பர். புகழே பெரிதென்று பாடுபடுவ ராதலின் கேடும் சாக்காடும் பெரிதென மதியார். அதுபோன்றே பெரும் பொருள் திரட்டுந் திறமுடைய போப்பையரும் தாம் வறுமை எய்தாவிடினும் பெரும் பொருள் திரட்டிச் சந்ததியாருக்கு வைக்கவில்லை. இவருடைய மக்களில் ஒருவர் ஜான் வி. போப் என்பவர் இந்தியாவில் முதலில் கொச்சி சமஸ்தானத்திலும் பின் இரத்தின பூமியாகிய பர்மா தேசத்திலும் கல்வி இலாகாவில் சிறந்த பதவி பெற்றிருந்தனர். இவர் தம்முடைய தந்தையின் வரலாற்றைத் தம்முடைய தந்தையின் விருப்பப்படி தாமே எழுதப்போகிறதாக வாக்களித்தனர். அவர்தம் வாக்கை நிறைவேற்றிய விவரம் அறிந்திலம். கைம்மாறு ஒன்றையும் கருதாமல் தமிழ் மாணவனாக ஐம்ப தறுபதாண்டுகளாக உழைத்த உழைப்பு தமிழுலகத்திற்கு மிகுந்த பயனை யளித்தும் தமிழ் மக்கள் இவர்மீது தம் நன்றியைக் காட்டத்தக்க ஒன்றையுஞ் செய்திலரென்பதுதான் இங்கே கவலைப்படத்தக்கது. ஆயினும் ஆங்கில மக்கள் பலமுறை இவர் மாண்பைப் பற்றிப் பேசி இவருக்குப் பதக்கப் பரிசளித்துள்ளார். இராயல் ஏசியாடிக் சோசைட்டியார் 1906-ல் ஏப்ரல் மாதத்தில் இப் பெரியார் தமிழ்



மாணவனாக வெகுகாலமாக உழைத்ததை மதித்துப் பெருங் கூட்டங் கூடி மூன்றாண்டு தோறும் அளிக்கப்படும் தங்கப் பதக்கத்தைப் போப்பையருக்கு அளித்தனர். அத் தருணம் தலைமை வகித்தவர் லார்டு ரீ என்பவராவர். பேசினவர்களில் இந்திய தேச அமைச்சர் லார்டு மார்லியும், லண்டன் நகரிலுள்ள பல்கலைக்கழகத்தின் தெலுங்கு, தமிழ் மொழிகளின் போதகருமான ஆர். டப்ளியூ. பிரேசருமே முக்கியமானவர்கள். போப்பையரைப் பற்றி முன்னவர் கூறியதாவது :- 'போப்பையர் சுறுசுறுப்பும் கூரிய அறிவும் விடா முயற்சியும் பொறுமையுமுள்ள பெரியார். இவர் தம் ஆயுள் முழுதும் எம்மக்களிடையில் தாம் வேலை செய்யுமாறு விதிக்கப்பட்டாரோ அன்னார் மத்தியிலிருந்தே அவர்களுடைய அன்பைப் பெற்று அவர்களுக்கு உபதேசித்தும் அவர்கள் மொழியின் சீர்சிறப்பை உலகமறியும்படி செய்தும் பரோபகாரமாக உழைத்துவந்தனர்' என்று இவ்வாறு பேசிய பிரபு தன் கையால் தங்கப் பதக்கத்தைப் போப் ஐயரிடம் கொடுத்தனர். இதைப் பலரும் பார்த்து மகிழ்ந்தனர். ஆனால் தமிழ் மக்கள் நன்றி பாராட்டாததை முன்னெடுத்துக் கூறினோம். தமிழகத்திலுள்ள சென்னைப் பல்கலைக்கழகமும் இத் தமிழ்ப் பெரியாரைப் போற்றவில்லை. இதிலிருந்து சென்னைச் சர்வ கலாசாலையார் தமிழ் மொழியை எவ்வாறு புறக்கணித்து வருகின்றனர் என்பதை அது சால விளக்கும்.

## ஐயர் வெளியிடாத நூல்

1820-ம் ஆண்டில் நோவா ஸ்கோஷியாவில் பிறந்த ஹாக்ஸ்டன் காலேஜில் கல்வி கற்று வெஸ்லியன் கோயிலைச் சார்ந்த போதகராகப் போவதற்கென்று சமய ஞானம் பயிற்றப்பெற்று, அறுபது ஆண்டுகளாகத் தமிழ் நூல்களையே பெரும்பாலும் படித்துப் புகழ்பெற்ற போப்பையர் தமக்குக் கிடைத்த அவகாசங்களில் ஒரு தமிழகராதியைத் தயாரித்தனர். அதில் அதுவரை வெளியிடப்பட்டிருந்த நிகண்டுகளில் சதுர அகராதிகளிற் காணப்பட்ட சொற்களுடன் பின்னால் வெளியான சங்க நூல்களில் வழங்கிவந்த அரிய சொற்கள் அநேகத்தைச் சேர்த்து ஆங்கில மொழி பெயர்ப்புடன் எழுதிவைத்தனர். அதை வெளியிடுவதற்காக லார்டு மார்லி என்ற இந்திய மந்திரிக்கு எழுதனுப்பினர். அதில் அப் புத்தகம் சீமையில் அச்சிடப்பட வேண்டுமென்றும், அச்சிடுவதற்குக் கிளாரண்டன் பிரஸ் முன்வருமென்றும்,

அதற்குத் தக்க பணவுதவி இந்திய கவர்ன்மெண்டார் செய்யவேண்டுமென்றும் கண்டிருந்தது. அதைப் பார்த்த மார்லி பிரபு, போப்பையருக்கு வயது ஏறக்குறைய தொண்ணூறு ஆனமையால் அவர் அவ்வேலை முடியும்வரை உயிரோடிருப்பதைச் சந்தேகித்து அது சென்னைச் சர்வகலாசாலை மூலமாக இந்தியத் தமிழ் மக்கள் உதவிபெற்றுச் சென்னையில் வெளியிடப்படின் அவ்வகராதி அதிகமாகச் சிறப்புறுமென்று நினைத்து, இந்திய சர்க்காருக்கு எழுதினர். அச் சர்க்கார் அதற்கிணங்கிப் பெருந் தொகை அளிப்பதாக வாக்களித்து வின்ஸ்லோ அகராதியை ஆக்கி வெளியிட்டவர் அமெரிக்கப் பாதிரிமாராதலின் மதுரையிலிருந்த அமெரிக்கப் பாதிரியாகிய ஷாண்ட்லர் என்பவர் தலைமை வகிக்கவும் பல தமிழ் மக்கள் உதவி செய்யவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதுவரை ஏழெட்டு இலஷ ரூபாய் செலவாகிவிட்டது. சிறிது சிறிதாக பாகம் பாகமாக அகராதியும் வெளிவந்து கொண்டிருக்கின்றது. முதலிரண்டு பாகங்கள் வெளியானவுடன் பல குறைகள் குறித்துக் காட்டப்பட்டன. அவை பின் பாகங்களிற் காணப்படமாட்டா வென்று நினைப்பதற் கிடமுளது. முற்றிலும் வெளிவர இன்னும் எத்தனை ஆண்டுகளாகு மென்றும், வெளிவரும் அகராதியால் தமிழ்ச் சிறப்பெய்துமா வென்றும் பலர் நினைக்கின்றனர். இவ் வகராதியைத் தனவந்தர்களும் நூல் நிலையங்களும் கல்லூரிகளும் வழக்கு மன்றங்களுமே வாங்க முடியுமென்று தமிழுலகம் மதிக்கின்றது.

### முடிவுரை

**வாக்கர்** பாதிரி தமிழ் கற்றவர், தமிழில் நன்றாகப் பேசினவர். பாயிலி பாதிரியார் குறளாதிய அறநூல்களை நன்கு பயின்று உண்மையுணர்ந்து சொற் பெருக்குகள் செய்து வருகின்றனர். ஆயினும் போப்பையர் மாதிரி தமிழ் மொழி சிறக்கப் பாடுபடும் பாதிரியார் இக் காலத்தில் இல்லை யெனலாம். உடல், பொருள், ஆவி மூன்றையும் தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்காகவே அர்ப்பணஞ் செய்த போப்பையரைப் போன்று பல பாதிரிமார்கள் உழைக்க வெளிவருவராயின் தமிழின் தொன்மையும் முதன்மையும் தமிழரின் புலமையும் நாகரிகமும், தமிழ் நூற்களின் பெருந் தொகையும் அருமையும் வெளிப்படுவதுடன் மேனாடு முழுதும் சிறந்தோங்கும் என்பது உறுதி.

இறைவனருள்க.



# எனது ஐரோப்பா யாத்திரை.

திருவாளர் எம். கிருஷ்ண பாரதியாரவர்கள், *M. A., B. L.*

## I

ஒரு வருஷத்திற்கு முன் செப்டம்பர்மீ 12ல் பாம்பே துறை முகத்திற் கூட்டமா யிருந்தது. "அக்விலீஜா" என்ற கப்பல் ஐரோப்பாவுக்குப் புறப்படத் தயாராய் இருந்தது. கப்பற் பிரயாணிகளும் அவர்களைப் பார்க்க வந்த சிநேகிதர்களும் திரண்டிருந்தனர். துறை முகத்தில் ஒரு அறையில் ஒரு டாக்டர் உட்கார்ந்து பிரயாணிகளைப் பரீக்ஷித்துக்கொண்டிருந்தார். மூன்றும் வகுப்புப் பிரயாணிகளை வரிசையாக நிறுத்தி வைத்துச் சாவகாசமாகப் பரீக்ஷித்து வந்தார். ஆனால் முதல் இரண்டு வகுப்புப் பிரயாணிகளை மட்டும் பரீக்ஷித்த பாவனையில் இருந்தார். நான் டாக்டர் முன் சென்றதும் அவர் என் வலதுகை மணிக்கட்டைத் தொட்டுக்கொண்டு "எங்கே போகவேண்டும்! எதற்காக" என்று கேட்டார். நான் "இங்கிலாந்துக்குக் வேலைக்காகச் செல்கிறேன்" என்றதும், "போகலாம்; நீ அதிர்ஷ்டசாலி" என்று போகச் சொல்லிவிட்டார். எல்லாரைப் போலவே நானும் என் பாஸ்போர்டை ஒரு உத்தியோகஸ்தருக்குக் காட்டி விட்டுக் கப்பலில் ஏறிக்கொண்டேன்.

கப்பலின் ஒரு பக்கத்தில் இருந்த ஏணியின் வழியாகக் கரையிலிருந்தே கப்பலில் ஏறிப் போய் எனக்காக அமர்த்தி யிருந்த அறையில் சாமான்களை வைத்துவிட்டுக் கப்பல் மேல் தட்டில் வந்து நின்றேன். அங்கு ஒரே கூட்டமா யிருந்தது. பிரயாணிகளும் அவர்களைப் பார்க்கவந்த சிநேகிதர்களும் பந்துக்களும் ஒருவர்க்கொருவர் பிரிவாற்றாமையைத் தெரிவித்துக்கொண் டிருந்தனர். கப்பல் புறப்பட மணி அடித்ததும் பிரயாணிகளைப் பார்க்கவந்திருந்தவர்கள் மெதுவாகக் கப்

பலேவிட்டு இறங்கிப்போய்க் கரையில் நின்றுகொண்டு அங்கிருந்தபடி பேசிக்கொண்டிருந்தனர். 11 மணி அடித்ததும் கப்பலும் கரையை விட்டு நகர ஆரம்பித்தது. கரையிலுள்ள சிலர் கப்பலோடேயே கரையில் நடந்துகொண்டு வந்தனர். அப்போது தபாற்காரன் ஒருவன் கப்பல் பிரயாணிகளுக்குக் கடிதம் கொண்டுவந்தான். கரையிலிருந்தபடியே ஒரு கயிற்றின் முனையைக் கப்பலின் மேல்தட்டில் விழும்படி வீசி எறிந்து கயிற்றின் வழியாகக் கடிதம் கப்பலுக்குச் சேரும்படி செய்தான். கப்பல் புறப்படும்போது பன்னீர்போல மழை பெய்துகொண்டிருந்தது. பம்பாய்க்கரை கண்ணுக்குத் தெரியுமட்டும் கப்பலின் மேல்தட்டிலேயே நின்றுகொண்டிருந்துவிட்டுப் பிறகு ஒவ்வொருவராகத் தங்களுக்கு அமைக்கப்பட்டிருந்த அறைகளுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

என் அறை, கப்பலின் மத்தியில் போஜன அறைக்கு அருகில் இருந்தது. அங்கே இருந்தபடியால் கப்பலின் ஆட்டம் மிகவும் குறைவாகவே இருந்தது. என் அறையில் பம்பாயிலிருந்து வந்த டாக்டர் ஒருவரும் இருந்தார். எங்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி வில் கட்டில், படுக்கை, போர்வை, துணிகள் வைத்துக்கொள்ளும் பீரோ இருந்தன. மேலும் அறையில் 3 மின்சார விளக்குகளும், 2 மின்சார விசிறிகளும், சாமான் வைத்துக்கொள்வதற்குப் புருக்கண்ணுள்ள மேஜையும், முகம் கைகால் கழுவுவதற்குக் குழாய்களும் அமைக்கப்பட்டிருந்தன. படுக்கையிலிருந்தபடியே வேலைக்காரனைக் கூப்பிடுவதற்கு மின்சார மணியும் இருந்தது. ஸ்நானம் செய்தபிறகு உடம்பு துவட்டிக்கொள்வதற்கு ஒரு பெரிய துருக்கித் துவாலையும் கைதுடைத்துக்கொள்வதற்குத் துண்டுகளும் வைக்கப்பட்டிருந்தன. கப்பலுக்கு ஆபத்து நேரிட்டால் உபயோகிப்பதற்குக் கார்க்கினால் செய்யப்பட்ட தலகணைகளும் இருந்தன. அறையின் ஒரு பக்கத்தில் காற்றும் வெளிச்சமும் வருவதற்கு வட்டமான துவாரம் இருந்தது.

அறையின் பக்கத்தில் ஸ்நானம் செய்வதற்கு அறைகள் இருந்தன. ஒவ்வொரு அறையிலும் ஒரு நீண்ட பீங்கான் தொட்டி வைக்கப்பட்டிருந்தன. ஒரு குழாயில் சூடான ஜலமும், மற்றொரு குழாயில் குளிர்ந்த சமுத்திர ஜலமும் வரும். எந்த ஜலமாவது தேவை



யான அளவு தொட்டியில் வைத்துக்கொண்டு தொட்டியில் உட்கார்ந்தபடி ஸ்நானம் செய்யலாம். தொட்டியின் அடியிலுள்ள தக்கையை எடுத்துவிடவும் அழுக்கு ஜலம் வெளியே போய்விடுவதால் தொட்டி சுத்தமாய்விடுகிறது. சமுத்திர ஜலத்தில் ஸ்நானம் செய்தபிறகு உடம்பின் மேலுள்ள உப்பை நீக்குவதற்கு நல்ல ஜலம் சூடாகவாவது குளிர்ச்சியாகவாவது ஒரு வேலைக்காரன் கொடுக்கிறான். காலைமுதல் மாலைவரையிலும் எந்தநேரத்திலும் ஸ்நானம் செய்யலாம்.

18. நான் என் அறையிலிருந்த டாக்டரைச் சந்தித்ததும் அவர் என்னை 'ஸடேவர்ட்' என்றழைக்கப்படும் கப்பல் மேஸ்திரி இடம் அழைத்துக்கொண்டு போனார். அவர் எங்களிருவருக்கும் போஜன அறையில் நாங்கள் உட்கார்ந்து சாப்பிடுவதற்கு ஏற்ற நாற்காலிகளைக் குறிப்பிட்டுக் காட்டினார். நாங்கள் சைவ போஜனம் தேவை என்றபடியால் எங்களுக்கும் சைவபோஜனம் தேவையென்று சொன்ன மற்ற நாலைந்து பிரயாணிகளுக்குமாக ஒரு தனி மேஜை ஏற்பாடு செய்யப்பட்டது. போஜன அறை விசாலமாகவும் சுத்தமாகவும் இருந்தது. மேஜைகள் போடப்பட்டு மேஜைகளின்மேரில் வெள்ளைத் துணிகள் விரிக்கப்பட்டிருந்தன. மின்சார விளக்குகளும் விசிறிகளும் தேவையான அளவு இருந்தன. சாப்பிடுவதற்குப் பீங்கான் தட்டுகளும் முள்களும் (Forks) கரண்டிகளும் உபயோகப்படுத்தப்பட்டுவந்தன.

கப்பல் ஏறினதுமுதல் போஜன விஷயம் குறைவற்றிருந்தது. தினம் காலை 6-மணி முதல் 7-மணிவரையிலும் ரொட்டி, வெண்ணெய், காபி அல்லது டீ கொடுத்துவந்தனர். இதைப் போஜன அறைக்குப் போயாவது அறைக்குத் தருவித்துக்கொண்டாவது சாப்பிடலாம். பிறகு 8½ மணிமுதல் 9½ மணிவரையில் காலை போஜன வேளை. அப்போது ரொட்டி, வெண்ணெய், ஜாம் என்ற தேன் அல்லது ஜீராவில் போட்டப்பட்ட பழங்கள், காபி அல்லது டீ, அரிசி சாதம், கோதுமை அல்லது பார்லிகூழ், பழங்கள் முதலியன கிடைக்கும். மத்தியானம் 1 மணிக்கு காலைச் சாப்பாட்டைக் காட்டிலும் அதிகமான பதார்த்தங்கள் கொடுக்கப்படும். மாலை 4 மணிக்கு ரொட்டி, வெண்ணெய், காபி அல்லது டீ. இரவு 7-30 மணிக்கு பகல் போஜனத்துடன் ஐஸ் கிரீம் முதலானதும் கொடுக்கப்படும். பழவகைகளில் வாழைப்

பழம், ஆரஞ்சு, திராட்சை, ஆப்பிள், அன்னாசி முதலியன கொடுத்து வந்தனர். காய்கறிகளையும் பழ வகைகளையும் குளிர்ந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்தபடியால் கெடாமல் நல்ல நிலைமையிலேயே இருந்து வந்தன. சைவ போஜனம் கேட்டவர்களுக்கு சாதம், குழம்பு, கறி, வறுவல், ஒருவிதமான வடை, சேமியா முதலியன கொடுத்துவந்தார்கள். மாமிச போஜனம் உண்பவர்களுக்குப் பலவித வகைகள் தயார் செய்யப்பட்டு வந்தன. ஆனால் மாமிச போஜனத்தின் வாசனை சிறிதும் வீசாதபடி சமையல் செய்தும் பரிமாறியும் வந்தனர். $8\frac{1}{2}$ மணி, 1 மணி, $7\frac{1}{2}$ மணி போஜன காலங்களில் சாப்பிடுகிறவர்களின் முன் மேஜையின் பேரில் அன்றைய சாப்பாட்டு விவரம் அட்டைகளில் அச்சடித்து வைக்கப்பட்டிருக்கும். அட்டையில் உள்ள வரிசைப்படி பதார்த்தங்கள் கொண்டுவருவார்கள். நமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொண்டு வேண்டாதவற்றை நீக்கிவிடலாம். பதார்த்தங்கள் எதையும் கையில் தொடாமலேயே பரிமாறப்பட்டு வந்தன.

கப்பலில் வேளைக்குவேளை சைவ போஜனம் சாப்பிடுகிறவர்களுக்கும் மாமிச போஜனம் சாப்பிடுகிறவர்களுக்கும் சரியாக இருந்தது. அப்படியும் கப்பல் போஜனம் பிடிக்காதவர்கள் கப்பலில் சாதாரணமாய் மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்யும் குஜராத்தி முதலான வட இந்தியரிடம் சொல்லிச் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்துகொள்ளலாம். கப்பலில் வந்த ஒன்றிரண்டுபேர்தான் இம்மாதிரி அடிக்கடி சாப்பிட்டுவந்தனர். முதல் இரண்டுவகுப்புப் பிரயாணிகளுக்குச் சாப்பாட்டைச் சேர்த்தே டிக்கட்டு கொடுக்கப்பட்டிருந்தது. மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் சாப்பாடு சேர்த்தாவது சேர்க்காமலாவது டிக்கட்டு வாங்கிக்கொள்ளலாம்.

கப்பலில் உள்ள வேலைக்காரர்களில் இதாலி தேசத்தவரே அதிகமாயிருந்தார்கள். போஜன அறையில் பரிமாறுகிறவர்களும் கப்பல் உத்தியோகஸ்தர்களும் அத் தேசத்தவர்களே. பிரயாணிகளுடைய அறையைச் சுத்தப்படுத்தி பூட்ஸ்களைப் பிரதி காலையிலும் சுத்தம் செய்து வைப்பவர்களும் அவர்களே. ஐரோப்பியரா யிருந்தாலும் வேலைக்காரர் நடந்துகொள்ள வேண்டிய முறையிலேயே பிரயாணிகளிடம் நடந்துகொள்கிறார்கள். ஸ்நான அறையைச் சுத்தம் செய்வதற்



கும் ஸ்நானம் செய்யும்போது தண்ணீர் கொண்டுவந்து கொடுக்கவும் 'கோவா' ஊரைச் சேர்ந்தவன் ஒருவன் இருந்தான். அதுபோலவே தோணி சலவை செய்வதற்கு ஒரு ஜப்பானியன் ஒருவன் இருந்தான். மற்றவர்களெல்லாம் ஐரோப்பியரே. ஆகையால் இந்தியர் ஐரோப்பியரிடம் சம மரியாதை பெறுவதையும் ஐரோப்பியர் கீழ்ப்படிந்து நடப்பதையும் கப்பலிலேயே முதன்முதல் அறிகிறோம். ஆனால் ஐரோப்பாவை அடைய அடையச் சம நிலைமையின் உண்மைகளையும் ஐரோப்பியருக்கும் இந்தியருக்கும் இந்தியாவில் சம நிலைமையும் மரியாதையும் இல்லாததனால் ஏற்பட்டிருக்கும் தீமைகளையும் நன்கு தெரிகிறோம்.

கப்பலில் பொழுது போக்குவதற்குப் பலவித ஏற்பாடுகள் இருந்தன. சங்கீத அறையில் வாசிப்பதற்கு 'பயானோ' (Piano) என்ற பாட்டுப் பெட்டி வைத்திருந்தது. அதற்கருகில் மேஜைகள் போட்டு அங்கே சதுரங்கம் முதலிய விளையாட்டுகள் ஆடற்கருவிகள் வைக்கப்பட்டிருந்தன. ஒரு மேஜையில் தினசரிப் பத்திரிகைகள் வைக்கப்பட்டிருந்தன. கப்பல் துறைமுகத்தைச் சேரும்போது புதுப் பத்திரிகைகள் வாங்கப்பட்டு மேஜையின்பேரில் போடப்பட்டு வந்தன. தந்தியில்லாக் கம்பிவழியாக வரும் சமாசாரங்களைத் தினம் டைப் செய்து மேஜையின்பேரில் வைக்கப்பட்டன. முதல் வகுப்புச் சங்கீத அறையில் வாசிப்பதற்கு ஒரு புஸ்தகாலயம் இருந்தது. அவ்விடமிருந்து புஸ்தகங்களை எடுத்துக்கொண்டுவந்து வாசிக்கலாம். கப்பல் துறைமுகத்தில் இல்லாத நாட்களில் கப்பல் மேல்தட்டில் இரவு $9\frac{1}{2}$ மணி முதல் 'பயாஸ்கோப்' என்ற திரைப் படக்காக்ஷி காண்பிக்கப்பட்டு வந்தது. கப்பலில் 'லெமனேட்' 'சோடா' முதலியன விற்பதற்கு ஒரு ஆள் உண்டு. அவருக்குப் 'போட்டோ' அல்லது புகைப்படம் பிடிக்கத் தெரியும். பிரயாணிகளை 'போட்டோ' எடுப்பதன்றி பிரயாணிகள் எடுக்கும் 'போட்டோ' வைச் சுத்தம் செய்தும் தயார் செய்தும் கொடுப்பார்.

கப்பல் பிரயாணிகளின் தேகாப்பியாசத்துக்காக ஒரு தண்ணீர்த் தொட்டி வைக்கப்பட்டிருக்கும். அதில் பிரயாணிகள் நீந்தலாம். ஒரு அறையில் தேகாப்பியாசத்துக்காகப் பலவித கருவிகள் இருந்தன.

மின்சாரக் குதிரைகளின்மேரில் ஏறிக்கொண்டு ஒரு ஆணியைத் திருப்பினால் இருந்த இடத்திலேயே குதிரைச் சவாரி செய்வதுபோலப் பல விதமாக நம் உடம்பைத் தூக்கிப்போட்டுக் கொண்டிருக்கும். சற்று நேரம் இம்மாதிரி உட்கார்ந்தாலே நன்றாய்த் தேகாப்பியாசம் செய்தது போல் ஆகிறது. பந்தயம் போடுவதற்குச் சைகிள்கள் இருந்தன. அவற்றின் மேல் ஏறிக்கொண்டு காலைச் சுற்றினால் எதிரில் ஒரு பலகையில் எவ்வளவு தூரம் சைகிள் போயிருக்கக்கூடும் என்பதை ஒரு முள் காட்டிக்கொண்டே போகிறது. இம்மாதிரி இன்னும் பல தேகாப்பியாசக் கருவிகள் இருந்தன. கப்பல் மேல்தட்டில் மரக்கட்டைகளைத் தள்ளிக்கொண்டு சில விளையாட்டுகள் ஆடலாம். 'டெக்டெனிஸ்' என்ற ஒரு விளையாட்டும் ஆடலாம். ஒரு ஆள் உயரத்தில் 'பேட்மின்டன்' (Badminton) என்ற விளையாட்டைப்போல ஒரு வலையைக் கட்டிவிட்டு, பந்துக்குப் பதில் கயிற்றில் வளைவாக ஐந்து அங்குல இடையுள்ள ஒரு சுருளை வலையின் ஒவ்வொரு பக்கமும் இருவர் இருந்துகொண்டு வலையின் எதிர்ப்புறம் வீசி விளையாடிக்கொண்டிருக்கலாம். இவ் விளையாட்டுக்குப் பணச்செலவு அதிகமில்லாதபடியால் நம் நாட்டுப் பள்ளிக்கூடத்துச் சிறுவர்களை விளையாடச் செய்யலாம்.

கப்பல் பிரயாணிகளின் சௌகரியத்துக்காக நாவிதன் இருக்கிறான். துணிகள் சலவை செய்ய ஆட்கள் வைத்திருக்கிறார்கள். வியாதியஸ்தர்களுக்கு மருந்து கொடுக்க டாக்டர் ஒருவர் இருக்கிறார். 'ரேடியோ' அல்லது தந்தியில்லாக் கம்பி வழியாக வெளியூர்ச் செய்திகள் தெரிவதற்கும் வெளியூர்களுக்குச் செய்தி அனுப்புவதற்கும் யந்திரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் வழியாகக் கப்பலில் இருந்தபடி தந்தி அனுப்பலாம். கப்பலில் ஒரு உத்தியோகஸ்தரிடம் நம்மிடமுள்ள விலையுயர்ந்த வஸ்துக்களையும் பணத்தையும் ஒரு காகிதப் பையில் போட்டு முத்திரையிட்டுக் கொடுத்தால் அதற்காக நமக்கு ஒரு ரசீது கொடுத்துவிட்டு நம்முடைய சாமானைப் பத்திரமாக வைத்திருப்பார். நமக்குத் தேவையானபோது ரசீதைத் திருப்பிக் கொடுத்துவிட்டு சாமானைப் பெற்றுக்கொள்ளலாம். கப்பலில் சோடா, லெமனட், டாக்டர், வண்ணான் முதலிய செலவுகளுக்குக் கடைசியில் கப்பலைவிட்டுப் போகும்போதுதான் கப்பல் அதிகாரிகளிடம் மொத்த



மாகச் செலுத்தவேண்டுமாகையால் கப்பலில் இருக்கும் வரையிலும் கையில் பணம் இருக்கவேண்டிய அவசியமில்லை. ஆனாலும் கப்பல் வழியில் நிற்கும் துறைமுகங்களில் இறங்கிப் பார்க்கச் சில்லரை வேண்டியிருந்தாலும் அந்தந்தத் தேச நாணயங்கள் வேண்டியிருந்தால் கப்பலிலேயே மாற்றிக்கொள்ளலாம்.

மேல் குறிப்பிட்டுள்ள சௌகரியங்களெல்லாம் முதல் இரண்டு வகுப்புப் பிரயாணிகளைப் பொறுத்ததே அன்றி மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளுக்கல்ல அவர்களுக்குச் சங்கீத அறையாவது, நீந்தத் தொட்டியாவது, வாசகசாலையாவது, தேகாப்பியாச சாதனங்களாவது, போஜன அறையாவது கிடையாது. பயாஸ்கோப் நடக்கும்போது அவர்களிருக்கும் இடத்திலிருந்து படக் காக்ஷி நடக்குமிடத்துக்கு வரும் வழியையும் அடைத்துவிடப்படுகிறது. அவர்களுக்கு ஸ்நானத்துக்கும் கக்கூஸ் முதலானவற்றிற்கும் மிகவும் அசௌகரியமே. அவர்கள் தங்குவதற்காவது சாமான் வைத்துக்கொள்வதற்காவது அறை கிடையாது. கப்பலில் ஒரு தட்டில் வேலைக்காரர் போய்க்கொண்டிருக்கும் வழிகளில் சாமான்களைப் போட்டுக்கொண்டிருக்கவேண்டும். கப்பலின் மேலேயிருந்து அடிப்பாகத்துக்குச் சாமான்களை இறக்குவதற்குக் கப்பலின் முன் பாகத்திலும் பின் பாகத்திலும் பெரிய துவாரங்கள் இருக்கும். சாதாரணமாய் இத் துவாரங்கள் பலகைகளால் மூடப்பட்டிருக்கும். இப் பலகைகளின்மேரிலும் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் காலம் கழிக்கலாம். ஆனால் கப்பல், வழியிலுள்ள துறைமுகத்தை அடையும்போது சாமான்களை இறக்கவும் ஏற்றவும் பலகைகளை எடுத்துவிடுவதாலும் சாமான்களை இறக்கிக்கொண்டும் ஏற்றிக்கொண்டுமிருப்பதாலும் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் தங்குவதற்காவது இளைப்பாறுவதற்காவது தூங்குவதற்காவது கஷ்டப்படுகிறார்கள். போஜன விஷயத்திலும் சௌகரியக் குறைவே. அநேகர் தாமே சமையல் செய்துகொள்வது உசிதமென்று கருதுகிறார்கள். பம்பாயிலிருந்து சாதாரணமாய் ஏடன், எகிப்து முதலிய இடங்களுக்குத் தனித்தும் குடும்பசகிதமாயும் அநேக இந்தியர் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளாக எப்போதும் போகிறபடியால் இக் குறைகள் சீக்கிரம் நிவர்த்தி செய்யப்படுவது அவசியம்.

# ஆலிஸ் இராஜ குமாரியின் சரித்திரம்.

ஸ்ரீமதி தையல் நாயகி சுப்ரமணியம்
(Mrs. T. Subramanyam)

இங்கிலாந்து தேச மன்னரும் எங்களை ஆள் பவருமாகிய மாட்சிமை தங்கிய ஐந்தாவது ஜார்ஜ் (George V) அரசர் பெருமானின் தந்தையாருடைய சகோதரியாகிய ஆலிஸ் (Alice) என்னும் இராஜ குமாரியின் சரித்திரத்தை நான் அறிந்த அளவில் இப் பத்திரிகையில் சிறிது வரைந்து தருகிறேன். ஏனெனில் ஆங்கில முறைகளை அநுசரித்து நடக்கும் சகோதரிகள், அவர்கள்பா லுள்ள அநேகவிதமான நற்பழக்க வழக்கங்களைப் பின்பற்றாது கெட்ட பழக்கங்களையே பின்பற்றுகிறார்கள். ஆலிஸ் இராஜ குமாரத்தியின் பொதுநல உழைப்பையும் ஏழைகளுக்குக் காட்டிய தயவையும் பொது விஷயத்திற்குப் பணம் சேகரித்த வழிவகைகளையும் நம் சகோதரிகள் வாசிப்பார்களானால் மாதர்கள் தாங்கள் செய்யும் பொது விஷயங்களைப் பற்றித் தாங்களே பரிகசிப்பதும் பணஞ் சேகரிப்பதிலுள்ள வெட்கமும் நீங்கி உற்சாகத்தோடு பொது விஷயங்களைக் கையேற்று நடத்துவார்கள். என்பது எனது விருப்பம்.

ஓர் இராஜ குமாரத்தி உண்டு உடுத்தி உலாவித் திரிவதை விட்டு விட்டு வைத்திய சாலைக்குப் போகவும் நோயாளருக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்விக்கவும், ஏழைகளுக்கு உதவிபுரியவும் வேண்டிய அவசியமென்ன என்று இவைகளை ஆலோசிக்குங்கால், நாம் தலையிட்டுச் செய்யும் ஒவ்வொரு பொது விஷயத்தையும் சோரவிடாது நடத்துவோ மென்பதே எனது துணிபு.

இவ் விராஜ குமாரி 1843-ம் ௵ பிறந்தார். இவருக்கு நான்கு சகோதரிகளும் நான்கு சகோதரர்களும் உண்டு.



இராஜ குமாரிகளெல்லோருக்கும் அரசாங்க முறைகளும், குடித்தன முறைகளும் இன்னும் வரவேண்டிய பல விஷயங்களும் நன்றாய்க் கற்பிக்கப்பட்டிருந்தன. ஆலிஸ் இராஜ குமாரத்திக்குப் பதினெட்டு வயது நடக்கையில் அவரின் தந்தை இறந்துவிட்டார். அவர் இறந்து ஏழாம் மாசத்தில் ஜர்மனிக் கருகாமையிலுள்ள ஹெஸி (Hessie) நாட்டுச் சிற்றரஸ சமரணஞ் செய்து அத் தேசஞ் சென்றார். அங்குச் சென்ற சிறிது நாளையில் இராஜ குமாரி, வருந்துகிற ஏழைகட்குத் தயைகாட்ட முயன்றார். எப்படி யெனில், அங்குள்ள வைத்திய சாலைக் குத் தினந்தோறுஞ் சென்று நோயாளருக்கு வேண்டிய வசதிகளைச் செய்வித்துப் பிரசவித்த ஏழை ஸ்திரீகளுக்கு உணவு உடை முதலியவைகளை உதவியதுமன்றி, ஓர் சாதாரண ஸ்திரீபோ லுடுத்திக் கொண்டு அவ்வூரிலுள்ள ஏழைகள் வீடுதோறும் நுழைந்து அங்குள்ள குறைகளைக் கவனித்து வேண்டிய உதவிகளைச் செய்வார் இவர் தரும குணவதியா யிருந்ததினால் அங்கே ஓர் மருத்துவச் சாலைக்கே தலைவியானார். இராஜ குமாரி தனது இருபத்துமூன்றாவது வயதில் பயித்தியகாரருக்கு ஓர் வைத்தியசாலை ஸ்தாபித்தார். இதற்குப் பொருள் சேகரிக்கும் பொருட்டுத் தனது அரண்மனையில் ஓர் அலங்காரக் கடை (Fancy Bazaar) ஏற்படுத்தி, அதில் விசித்திர வேலைப்பாடமைந்த சாமான்களையும் படங்களையும் விற்பனை செய்தார். நாலுநாள் வரையில் இந்த விற்பனை நடந்தேறியதன் பயனாக 16,000 ரூபா சேகரிக்கப் பட்டது.

ஐரோப்பாவிலுள்ள பெண்கள் இவ்விதமாகத்தான் அநேக தரும காரியங்களுக்கு விசேஷப் பொருள் சேர்க்கப் பார்ப்பார்கள்.

இப் பெண்கள் எல்லோரும் நன்றாய்த் தையல் பின்னல், பூவேலை செய்தல், சித்திரம் எழுதுதல் முதலிய கைவேலைகளில் பெயர்போனவர்களா யிருக்கிறபடியால் அவ் வேலைத் திறங்களைத் தங்கள் சொந்த நன்மைக்கும் விளையாட்டிற்கும் விநோதத்திற்கும் உபயோகிக்காமல் ஏழைகள் நோயாளிகள் முதலியோரின் நன்மைக்காகவே உபயோகிக்கிறார்கள்.

ஒரு பட்டணத்தில் அல்லது ஒரு கிராமத்தில் ஒரு தரும சாலைக் காவது ஒரு பாடசாலைக்காவது பணமில்லாதிருந்தால், அவ்விடத்திலுள்ள பிரதானமான பெண்கள் கூட்டங்கூடிப் பணஞ் சேகரிக்கப் பல உபாயங்கள் செய்வார்கள். ஒருத்தி பூவேலை செய்த கால்சோடு

ஒரு சோடி செய்து கொடுக்கவும், வேறொருத்தி ஒரு மெத்தை தைத்துக் கொடுக்கவும், இன்னுமொருத்தி ஒரு தொப்பிக்குப் பூவேலை செய்து கொடுக்கவும் ஒப்புக்கொள்வார்கள். இவ்விதமே மற்றப் பெண்களும் தாமறிந்த வேலைப் பாடுகளினால் ஒவ்வொரு பொருள் செய்து கொடுப்பார்கள். அதற்குமேல் ஒரு மாதம் பொறுத்து ஒரு குறித்த நாளில் மேற்சொன்ன பொருளை அலங்காரக் கடையாக அடுக்கடுக்காய் வைத்து விற்கும்படி ஏற்பாடு செய்து அறிக்கைப் பத்திரங்களை அச்சிட்டு அவற்றில் இவ் விற்பனையின் நோக்கத்தைப் பிரசித்தப் படுத்துவார்கள். அக்கம் பக்கங்களிலுள்ள ஆடவரும் மகளிரும் வந்து அவ் விநோத சாமான்களை விலைகொடுத்து வாங்குவார்கள். அதனால் பெருந் தொகை சேரும். இவ்வாறு இங்கிலாந்து முதலிய ஐரோப்பாத் தேசப் பெண்கள் தங்கள் தேக உழைப்பால் அநேக இலட்சம் ரூபாய் சேகரிப்பார்கள்.

எம் தேசப் பெண்களுஞ் சிறுமிகளும் தம் ஓய்வுகாலங்களை இதே விதமாய் எம்மூர்ப் பொது விஷயங்களின் பொருட்டு எப்போது உபயோகிப்பார்களோ தெரியாது.

பின்பு இவ் விராஜ குமாரி, பெண்கள் சங்கம் ஒன்றையும் ஸ்தாபிக்க முயற்சி செய்தார். சிறிதுகாலத்தில் ஆறு பெண்களுடன் ஒரு சபை ஸ்தாபிக்கப்பட்டது. அச் சபைக்கு இராஜ குமாரியே தலைமை வகித்தார். இச் சங்கத்தின் நோக்கங்களாவன:— பெண்களுக்குக் கல்வி கற்பித்தல்; கைத்தொழில் பயிற்றல்; தாதி வேலைகளுக்குப் பழக்கல் முதலியனவாம். இரண்டு வருடத்தில் இச் சபையில் இரண்டாயிரத்து ஐந்நூறு பெயர்கள் அங்கத்தினராகச் சேர்ந்தார்கள். பெண்களின் கைத் தொழில்களை விருத்தி செய்யும் பொருட்டு ஆலிஸ் பஜார் (Alice Bazaar) என்னும் பெயர்பூண்ட ஒரு கடையை ஸ்தாபித்து, அதில் அச் சபையிற் பழகிய பெண்கள் கைகளாற் செய்யப்பட்ட பலவித நூதன வேலைப் பொருட்களை விற்பனை செய்யும் ஏற்பாடுகளையெல்லாம் செய்தார்.

இராஜ குமாரி ஒருமுறை "நான் ஸ்தாபித்த சங்க விஷயமாய் அதிக காலம் செலவழிக்க வேண்டுவதோடு கவனமு மதிகமாய் வைக்கவேண்டியிருக்கிறது. நான் செய்துவருங் காரியங்கள் சரியானவை என்று நம்புகிறேன். என் அருமைத் தந்தையார் அயலாருடைய நன்மைக்காகத் தொடங்கிய பெருங் காரியத்தில் நானும் சொற்ப அளவாய் இங்குச் செய்ய முயன்றிருக்கிறேன்" என்று தன் தாயாருக்கு எழுதினார். இராஜ குமாரி தான் ஆரம்பித்த பொதுக் காரியங்களை இடைவிடாது செய்துவந்தார். ஏழை ஜனங்களின் நிலைமையைச் சீர்படுத்த என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளில் எல்லாம் கவனமாயிருந்து இவ்வளவு தரும சிந்தையும் பரோபகாரமும் காட்டிவந்த இராஜ குமாரிக்கு ஆயுள்தான் குறுகியதாயிருந்தது. 1878-ம் வருஷம் தனது முப்பத்தைந்தாவது வயதில் இவ்வுலக வாழ்வை விட்டு நீங்கினார்.

இவ் விதமான காரியங்களை எம் தேசத்து மாதர்கள் செய்யக்கூடிய விவேகம் எப்போது பிறக்குமோ அப்போதுதான் நம் தேசத்துப் பெண்கள் தாம் பிறந்ததின் பயனை அடைவார்கள். தானும் தன் புருஷனுங் குழந்தைகளும் வாழ்வதே பெரிதென்று நினையாமல் ஒழிந்த வேலைகளில் சிறிது சிறிதாகத் தரும காரியங்களில் தம் நேரத்தை உபயோகிக்க வேண்டும். இவ்வண்ணம் பொது விஷயங்களில் ஈடுபட விரும்பும் ஒவ்வொரு பெண்ணும் இவ் விராஜ குமாரத்தியின் சரித்திரத்தைப் படித்துத் தெரிந்து கொள்வார்களாக.

---



# ஆரம்பக் கல்வியும் கிராம முன்னேற்றமும்.

திருவாளர். ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் B. A., L. T.,

கிராம முன்னேற்றத்தினாலன்றி நாட்டு முன்னேற்ற மிங்கு வாய்க்கப் போவதில்லை என்னும் உண்மையை நம் தேயத்தவர் நன்கறிந்து வருகின்றனர். இது இயல்பே. இந் நாட்டின் மொத்த ஜனத் தொகையில் நூற்றுக்குத் 90 பேர் 6,85,665 கிராமங்களிலும், நூற்றுக்குப் 10 பேர் மட்டும் 2,316 நகரங்களிலும் வசிக்கிறார்கள். அன்றியும் நூற்றுக்கு 72,5 பேர் பயிர்த் தொழில் செய்தலும்

கன்று காலி மேய்த்தலுமே தமது பிழைப்புக்கு முக்கிய ஆதாரமாகவும், மற்றும் நூற்றுக்கு 5.3 பேர் அவற்றைத் துணைச் சாதனமாகவும் கொண்டுள்ளார்கள். ஆனால் இவர்கள் நிலைமை மிக வளம் சுருங்கியதாகவே காணப்படுகிறது. நம் நாட்டின் ஏகரா ஒன்றின் சராசரி விளைவை இத்தாலியா, பிரான்சு, எகிப்து, ஜபான் என்னும் நாட்டு ஏகரா விளைவோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், முறையே பாதியும், ஐந்திலொரு பங்கும், மூன்றிலொரு பங்கும், காற் பங்குமாகத் தெரிகிறது. ஆசிரியர் கில்பர்ட் சிலேடர் (Dr. Gilbert-Slater) மதிப்பின்படி இந்தியாவில் ஐந்து குடும்பங்கள் வேளாண்மை செய்தால் எட்டு அல்லது ஒன்பது குடும்பங்கட்கு மட்டும் போதிய உணவுப் பொருள் விளைகின்றது; மேற்கு ஐரோப்பா அல்லது வட அமெரிக்காவில் 5 குடும்பங்களின் வேளாண்மையில் சுமார் ஐம்பது குடும்பங்கட்கு வேண்டிய உணவுப்பொருள் பயிராகிறது. இங்குள்ள நாட்டுக் கன்று காலிகளின் நிலைமையும், மக்களின் சராசரி ஆயுளெல்லையும், வருமான அளவும், இந் நாளிற் பெரிதும் இரங்கத் தக்க நிலைமையிலுள்ளன.

இத் துன்பப் படலத்தை இன்னும் விரித்தெழுத மனமில்லையாயினும் கல்விப் பரப்பைப் பற்றி மட்டும் சில கணக்குகளைக் கருத வேண்டும். ஒரு கடித மெழுதவும் படிக்கவுந் தெரிந்தவர்களைக் கற்றவர்களெனக் கொண்டு கணக்கிடும் போது, 1921-ம் ஆண்டில் 2,30 00,000 பேர் கற்றவர்களாகவும் 2,96.00,000 பேர் மற்றவர்களாகவும் இருந்தமை புலப்படுகிறது. அப்போது, 5 வயதுக்கு மேற்பட்டவர்களில் 100-க்கு 91.8 பேர் கல்லாதவர்கள். ஆண்களில் 100-க்கு 5.8 பேரும் பெண்களில் 100-க்கு 1 2 பேருமே பள்ளிக்கூடங்களில் இருந்தனர். நமது மாகாணத்தளவில் பார்க்கும் போது 100-க்கு 9.9 ஆண்களும் 2.8 பெண்களும் வாசித்துக் கொண்டிருந்தனர்.

“உளர் என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக் களரனையர் கல்லாதவர்” என்ற வள்ளுவனார் வாயுரையின்படி பார்க்க, இந் நாட்டு மக்களிற் களர் நில மனையாரே பெருந் தொகையினராயுள்ளார்.

கிராமவாசிகள் இந் நிலையில் இருக்கும் வரையில் நகரவாசிகளின் முன்னேற்றத்தை நாட்டின் முன்னேற்ற அடையாளமாகக் கொள்ளமுடியாது. வறுமை, அறிவாற்றற் குறைவு முதலிய சிறு



மைகளையெல்லாம் அகற்றுதற்குக் கல்வியே இன்றியமையாத முதற் பெரும் சாதனமாகும். இதை வளம்படுத்தாது அரசியல், சமூக சீர்திருத்தம், பொருளாதாரம், சமயம் முதலிய பிற துறைகளில் விருத்தி காண முடியாது. அப்படிச் செய்ய முயலுவோர் அஸ்திவாரமின்றிக் கட்டடம் கட்டுவோரையே நிகர்ப்பர்.

இந்தியாவும் நன்மதிப்புடன் இனி வாழவேண்டின் அதிற் சிலர் மட்டும் பேரறிவாளராய் விளங்க, பொது ஜனங்கள் அறிவும் ஆற்றலும் முதிரா நிலையில் விடப்பட்டிருந்த பழைய ஏற்பாடு மாற வேண்டுமென்பது திண்ணம். *

இவ் வுண்மையை அரசியலாரும் ஜனத் தலைவர்களும் நன்குணர்ந்து கொண்டு நாடு முழுதும் கல்வியைப் பரப்புவதற்கான வழிகளைத் தேடிப் பெரு முயற்சி செய்து வருகிறார்கள். அரசாங்கத்தார் உயர்தரக் கல்வியை மட்டும் போற்றிப் பேணி வந்த நிலைமை சிறிது மாறி விட்டது. ஆரம்பக் கல்விக்கென அதிக பணம் செலவிடப்படுகிறது. கட்டாயக் கல்வி முறையைக் கைக்கொள்ளவும் மசோதாக்கள் ஆயத்தமாகின்றன.

நமது மாகாணத் தளவிற் பேசுகையில் 500-க்குக் குறையாத ஜனத் தொகையையுடைய ஒவ்வொரு ஊருக்கும் பள்ளிக்கூட வசதியிருக்க வேண்டுமென்னும் கோட்பாட்டுடன் அரசாங்கத்தார் பாடசாலைகள் இல்லா இடங்களிலெல்லாம், அவைகளை யேற்படுத்தி வருகின்றனர். 1926-27, 1927-28-ம் ஆண்டுகளில் இருந்த நிலைமையைக் கீழேயுள்ள புள்ளி விவரம் காட்டும்:—

---

* “In education we have to look as much to height as to width......... The culture of the classes must not be out of proportion to that of the masses..........Perhaps we have been more attentive of the individual greatness than the collective greatness of our people.........We the cultured classes must now realise that after all it is the strength derived from its masses and millions that the country must look for in its fight for a place under the sun” என்று ஆசிரியர் இராதா குமுத முகர்ஜியவர்கள் கூறியிருப்பதைக் கருதுக.

| ஆண்டு. | ஆரம்ப பாடசாலைகள் (பகல்) தொகை | | | படிப்போர் தொகை. | | | ஆசிரியர்கள் தொகை. | | மொத்த செலவு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் பாடசாலை. | பெண் பாடசாலை. | மொத்தம். | ஆண். | பெண். | மொத்தம். | பெண்பாடசாலையில். | ஆண் பாடசாலையில். | ரூ. |
| 1926-27 | 46,378 | 3,388 | 49,766 | 1,985,617 | 2,28,348 | 2,213,965 | 9,622 | 83,280 | 17,051,065 |
| 1927-28 | 48,407 | 4,044 | 52,451 | 2,094,138 | 260,390 | 2,354,528 | 10,026 | 87,978 | 18,899,925 |

கடந்த சில ஆண்டுகளாய் ஆரம்பக் கல்விக்கெனச் செலவாகும் தொகை வளருவதைக் கருதும்போது, படிப்போர் தொகையின் வளர்ச்சி போதியதாயில்லை என்று சிலர் குறைகூறுகின்றனர். இது ஒரு புறமிருக்க, கற்பிக்கப்படும் கல்வியின் இயல்பும் பயனும் போதிய திருப்தி தரத்தக்கனவா என்பதை ஆராய்தல் மிகவும் அவசியம். 31—3—28-ல் முதல் வகுப்பில் 1,263,131 பேரும் 2-ம் வகுப்பில் 466,499-பேரும், 5-ம் வகுப்பில் 99,570 பேரும், 8-ம் வகுப்பில் 28,771 பேரும் வாசித்துவந்தனர். இத் தொகைகளை உற்று நோக்கினால், சுமார் 3-ல் இரண்டு பங்கு பிள்ளைகள் முதல் வகுப்போடேயே நின்று விடுகிறது வெளியாகும். உயர்தர ஆரம்பப் பாடசாலைகளின் மேல் வகுப்பாகிய எட்டாம் வகுப்பை எட்டிப் பார்ப்போர் தொகையை முதல் வகுப்பில் படிப்போர் தொகையோடு ஒத்திப்பார்க்க, 42-ல் ஒருபங்குதானும் கணக்காகவில்லை.

இவற்றையும், இடவசதிக் குறைவு, உபகரணக் குறைவு, ஆசிரியர் தகுதிக் குறைவு முதலிய பிறவற்றையும் கவனியாது விட்டாலும், பாடசாலைகளில் தங்கிக் கற்போர்க்குத் தரப்படும் கல்வியின் நோக்கம் யாது என்பதை யேனும் முதலில் ஆராய வேண்டும். ஏனெனில், ஆரம்பக் கல்வியால் கிராம முன்னேற்ற முண்டா



வதின் அளவும் விளைவும், அக் கல்வியின் நோக்கத்தைப் பொறுத்து நிற்கின்றன. செல்வாக்கும் அதிகாரமு மிக்குடையவர்கள் இவ்வுண்மையைக் கருத்தூன்றிக் கவனித்துவருவதாகத் தெரியவில்லை. ஆரம்பக் கல்வியை இம் மாகாணத்திற் பரப்புதற்காகத் தோன்றி ஆட்சியிலிருந்து வருவது 1920-வருடத்திய "சென்னை ஆரம்பக் கல்வி மசோதா" (Madras Elementary Education Act 1920) ஆகும். அதில், ஆரம்பக் கல்வியாவது, ஆரம்ப பாடசாலையின் 8-ம் வகுப்பு வரையில் (அல்லது, நடுத்தரக் கல்லூரியில் முதல் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரையில்) கற்பிக்கப்படும் கல்வி எனக் கூறப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சில பாடங்களைத் தாய் மொழியின் வாயிலாகப் போதிப்பதே அக் கல்வியின் பயனாகுமெனவும் விதந்து கிளக்கப்பட்டுள்ளது. ஆனால் அப் பாடங்களைக் கற்பிப்பதன் நோக்கம் என்ன என்பது ஓரிடத்தும் குறிக்கப்படவில்லை.

இப் பெருங் குறைபாட்டால் விளையுங் கேடு சிறிதல்ல. பெரும் பாரந் தாங்கிய பண்டை நாட் கப்பலொன்று சுக்கானில்லாமற் சுழன்று திரிந்து நகர்வது போல், ஆரம்பக் கல்வியும் தக்க குறிக்கோளின்றி அலக்கணுறுகின்றது. பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பரீக்ஷாதிகாரிகள், பாடசாலை நடத்துவோர் ஆகிய அனைவர்க்கும் தாம் சம்பந்தப்பட்டிருக்கும் கல்வியின் நோக்கம், தெளிவும் சிறப்பும் பொருந்திய வகையில் விளங்கவில்லை. வீட்டிலிருந்து தொந்தரவு செய்யும் பிள்ளையைப் பள்ளிக் கனுப்பி யொழித்தால் தொல்லையின்றிக் கிடக்கலாம் என்றெண்ணும் பெற்றோருமுளர். தாம் கற்பிக்கும் கல்வியின் நோக்கம் தமக்கு மாதம் கழிந்ததும் ஊதியம் வாங்கித் தருவதே யென்று கருதும் ஆசிரியரும் உளர்; மற்றையோர் நோக்கமும் பொதுவாய்க் கூறுமிடத்து விழுப்பமும் தெளிவும் பொருந்தியதாகத் திகழவில்லை. ஆரம்ப பாடசாலைக் கல்வியைப் பற்றி இவர்களிற் பெரும்பாலார் மனதில், அறிந்தோ அறியாமலோ இருக்குங் குறிக்கோள், மாணவரை எழுத்து வாசனையுடையராக்குதல் என்பதொன்றே நிற்பதாகக் காண்கிறது. உயர்தரக் கல்விக்குக் குறிக்கோள் உத்தியோகத்திற்றுமே யில்லை.

இக் குறிக்கோள் போதிய பயன்தர வல்லதாகுமா? நமது நாட்டின் ஏழ்மை நிலைமையையும் ஜனப் பெருக்கத்தையும் பார்க்கும் போது, பெரும்பாலார் ஆரம்பக் கல்வியைத் தானும் எட்டாம் வகுப்பு முற்றவும் பெறுங்காலம் அணித்தேயில்லை யென்று அஞ்ச வேண்டியிருக்கிறது. மாணவர் பள்ளியி லிருக்கும் சில ஆண்டுகளையேனும், தக்க குறிக்கோளி னுதவியால் நிரம்பிய பயன் கிடைக்கும் வரையில் உபயோகித்துக்கொள்ள வேண்டுவதவசியம். எழுத்து வாசனை யுண்டாக்குவதும் சிறிது கணக்குப் போடப் பழக்கி விடுவதும் இன்றியமையாத் திறமைகளே, சாதனங்களே. ஆயினும், குடியேற்ற நாட்டந்தஸ்திற்கு நாட்டை விரைந்து ஆயத்தப் படுத்து மிக்காலத்தில், இத் திறமைகள் மட்டும் போதா என்பது வெளிப்படை. ஆயின், ஆரம்பக் கல்வியின் நோக்கம் யாதாயிருக்க வேண்டும்? பொதுவாய்க், கல்வியின் நோக்கமே யாதென ஆராய்தல் வேண்டும்.

மாணவன் தன் பிற்கால வாழ்விற்கு வேண்டிய பொருளை ஈட்டுந் திறனை யுண்டாக்குவதே கல்வியின் நோக்கமெனச் சிலர் கருதுகின்றனர். பிழைக்கும் வழி காட்டல் நல்லதே யாயினும், மனிதனுக்கு வயிறு மட்டும் வாழ்ந்தால் போதுமா? உடலோம்பலோடு உயிரோம்பலும்புரிதல் அவன் கடமையா யுள்ளதன்றோ? இதை ஒருவாறுணர்ந்தவர்கள், எழுத்து வாசனைப் பேறு ஜீவனோபாய அறிவு என்னும் இரண்டனுக்கு மேற் சென்று கல்வியின் குறிக்கோளை நாட்டுகின்றார்கள். இவர்கள், ஒரு நாட்டின் குடியாய் வாழ்பவன் அந் நாட்டு அரசியலிலும் பிற துறைகளிலும் தனக்குள்ள கடமைகளையும் உரிமைகளையும் நன்குணருமாறு செய்தலே கல்வியின் பயனாயிருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். * இந்த நோக்கம் இனிது நிறைவேற வேண்டுமாயின், மாணவ மாணவிகளிடத்தில், உடலுரம், அறிவு நலம், சிந்தைத் திருத்தம், மனத்திட்பம், சொல்

* "The province of education is to equip the men and women of this country for citizenship" என்று ஆங்கில நாட்டுக் கல்வியை வளம்படுத்தியவர்களில் ஒருவராகிய திரு. பிஷர் (Fisher) என்னும் அறிஞர் கூறினர்.



வன்மை, நேர்நடத்தை, ஒப்புரவறிவு, கடமையுணர்ச்சி, ஒத்துழைக்குந் திறன் முதலிய நற்பண்புகளியாவும் அவர்கள் பயிலுங் கல்வியால் முகிழ்த்தெழுந்தோங்க வேண்டும். உலகியலறிவும் நாட்டுப்பற்றும், தாய் மொழிப் பற்றும் இவற்றோடு ஒத்து வளர்வனவாகும். இங்கிலாந்து முதலிய சிறந்த மேல் நாடுகளில் எண்ணிறந்த பாடசாலைகள் தொடக்க நிலையிலிருந்தே இந்தப் பெரு நோக்கத்தோடு நடத்தப்படுகின்றன. நமது நாட்டிற் காணும் உயிரற்ற, உரமற்ற, மூளை வீக்கக் கல்லூரிகளைவிட இவை எத்துணையோ சிறந்தவை. மேற் குறித்த நலங்கள் யாவும் நம் நாட்டுப் பாடசாலைகளிலும் விளங்க வேண்டும்.

என்றாலும் இந்த நோக்கந் தானும் முழுமையுடையதாகாது. மனிதன் வாழ்வு இம்மையொடு முடிந்திறுவதன்று. இம்மைக்கு மேல் மறுமை யொன்றுண்டு. இரண்டையுங் கடந்த செம்பொருட் சேர்வாம் செம்மையு முண்டு. இம்மை வாழ்வை நடாத்துதல மறுமை வீடு என்னும் இரு நிலை வாழ்க்கைக்கும் சாதகமாயிருத்தற் பொருட்டாகும் என்று கண்டுகொண்டால், இம்மையோ மறுமையோ புறக்கணிக்கப்படாது. இம்மை ஒன்றேதா னுள்ளதென்று கொண்டால், ஆன்மாவை ஐம்புலச் சூழலி லகப்படுத்தி, அடங்கா ஆசையால் மக்கள் அல்லற்படுவர். இவ்வுலகம், இல்லாதது தீயது என்று வறிய வாய்வேதாந்தம் வளர்த்தால், இம்மை நலத்தை இழத்தலோடு மற்றைய நிலைகளிலும் மேற்செல்ல இயலாத இழி நிலை எய்துதல் திண்ணம். இவ் விருவித தவறுகட்கும் மேல் நாடுகளிலும் கீழ் நாடுகளிலும் எடுத்துக் காட்டுகள் பல காணலாம். இறைவன் உயிர்களை ஆண்டருளு முறையில இம் மூன்று நிலைகளும் தொடர்புடையனவாய் நிற்கின்றனவாதலின், இவற்றின் இயல்பையும் பயனையும் உணர்ந்து, எந்நிலையிலும் செந்நெறி நோக்கிச் செல்வலே மனித வாழ்வின் சீரிய குறிக்கோளாயுள்ளது. "இளமையிற் கல்" என்று முன்னர்ப்பணித்த நம் ஔவைப் பிராட்டியார் பின்னர் 'வித்தை விரும்பு', 'வீடுபெற நில்' என்னும் ஆணை தந்துள்ளமை உய்த்துணரத் தக்கது. அபர ஞானத்தை முதலிற் பெற்று, அதன் துணை கொண்டு பர ஞானத்தைத் தேடி யடைந்து, பின்னர்

முடிவாய் வீட்டு நிலையை எய்த வேண்டுமென்றபடி முறை இங்கமைந்துள்ளது. ‘கற்றதனா லாய பயனென் கொல் வாலறிவன்—நற்றாள் தொழாஅர் எனின்?’ ‘அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய் தந்நோய்போற் போற்றாக்கடை?’ என்றும் பொய்யில் புலவர் வினவிய பொருள் மிகு வினாக்கள், கற்றவர் நடத்தும் கனிந்த வாழ்வின் இரு கூறுகளையும் இனிது புலப்படுத்தும். “அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே?’ என்னும் அருமைச் சூத்திரமும் இங்குக் கருதிக்கொள்ளத் தக்கதே. மேலே விவரித்த குறிக்கோள்களியாவும் இதில் அடங்குகின்றன. பொருள் மட்டும் தீவினை விட்டு ஈட்டப்படுவதாக வேண்டும். இன்பமெல்லாம அறத்தான் வருவதாகவே இருக்கவேண்டும். எனவே, கல்வியின் முழு நோக்கமாவது, இம்மை மறுமை வீடு என்னும் மூன்று நிலைகளிலும், அறிவு, அன்பு, இன்பு, ஆற்றல் முதலிய நலங்களைப் பெற்றுத் திருவருட் குறிப்பின்படி வாழ உதவுவதே என்று கொள்ளலாம்.

கல்வியின் முழு நோக்கம் மேற் கூறியபடியாயிருத்தல் ஒக்குமாயினும், ஆரம்பக் கல்விக்கு அது குறிக்கோளா யிருத்தல் ஒவ்வுமோ என்று சிலர் ஐயுறலாம். ஆரம்பக் கல்வியாயினு மாகுக, நடுத்தரக் கல்வியாயினுமாகுக, உயர்தரக் கல்வியாயினுமாகுக, அடிப்படையான குறிக்கோள், மேற் குறித்த முழுமைச் செழு நோக்கமாகவே இருத்தல் வேண்டும். கல்விப்படியின் தரத்திற்கேற்பப் பாடதிட்டங்களையும், போதனா முறைகளையும், உழைப்புவகை யளவுகளையும் சுருக்கமாகவும் பெருக்கமாகவும் அமைத்துக்கொள்ளல் முறைமையே. ஆனால் கல்வித் திட்டத்தையும் பாடசாலை நடைமுறையையும் அமைப்போர் மூதறிஞர்களாயின், கல்வியின் எல்லாப் படிகளிலும் மேற் சொன்ன நற் பெரும் பயனும் குறிக்கோள் தனது ஆட்சியைப் படிமுறையிற் செலுத்துமாறு இடந்தந்தே தீருவர். இதை விளக்கிக் காட்டற்கு இந்தக் கட்டுரையில் இடமில்லை. ஆழ்ந்து நோக்கும் ஆசிரியர்கட்கும், அதிகாரிகட்கும் ஆரம்பக் கல்வியிலும் இந் நோக்கத்தின் பயனைப் புகுத்துதல் சாத்தியமென்பது எளிதிற் புலனாகும்.

ஆனால், அந்தோ! இந் நாளில் நடைபெறும் ஆரம்பப் பாடசாலையிலாவது, மற்ற உயர்தரப் பாடசாலையிலாவது இக் குறிக்கோளைக் காண்பதரிதாயுள்ளது. மிகச் சிலவாயுள்ள குருகுலங்களிரண்டொன்றில்தான் இது விளங்குகிறது. நாடு முழுதுமுள்ள பாடசாலைகளில் இக் குறிக்கோளின் விளக்கம் பதிந்த பின்னர்த்தான், உண்மையான முன்னேற்றம் கால் கொண்டு விரைந்தெழும். இழி நிலையில் இப்போது காணப்படும் திண்ணைப் பள்ளிக்கூடத்தால் விளையக்கூடிய நலம் வெகு சொற்பமே. அது பெரும்பாலும் மறைந்து போய்விட்டது. அரசாங்கத்தின் பொருளைச் சம்பளவரியிலாகவோ உதவிப் பொருளாகவோ பெற்று நடக்கும் பாடசாலைகளே இந் நாளில் எங்கும் மல்கியுள்ளன. இவற்றில் நல்ல குறிக்கோள் குடி கொள்ளும்படி செய்ய வேண்டும்.



இது நிகழ வேண்டில் நாட்டுத் தலைவர்கள், கல்வியின் சரியான குறிக்கோளைத் தாம் உணர்ந்து அரசாங்கத்தார்க்கும் பொது ஜனங்கட்கும் எடுத்துரைக்க வேண்டும். சீரிய குறிக்கோளில்லாப் பாடசாலைகளிற் பயின்றவர்களே ஆசிரியர்களிற் பலராய் வருகின்றார்கள். ஆசிரியர்களைப் பெற வேறு வழியுமில்லை. அவர்கள் போதனா முறை பயிலல் அவசியமென்று அதிகாரிகள் கட்டாயப்படுத்துகின்றார்கள். இது நல்லதே. இது கருதி ஆசிரியர்கள் போதனா முறைபயிலும் போதாயினும், கல்வியின் உண்மை நோக்கத்தையும், அதை எவ்வெத்தரப் பாடசாலையில் எந்தெந்த அளவு எவ்வெம் முறையிற் செயலிற் கொண்டுவரலாமென்பதையும் நன்றாய்ப் போதிக்குமாறு ஏற்பாடு செய்ய வேண்டும். போதனா முறைப் பாடசாலையில் இப் புத்துயிர் புகுந்து ஆசிரியர்களைப் பண்படுத்துமாயின் விரைவில் உண்மையான கல்வி நாடெங்கும் பரவும். போதனா முறைப் பாடசாலைகளை நகரங்களில் வைத்து நடத்தி வருவதாலும், நாட்டுக்கு வேண்டிய கல்வியைப் போதிக்குந் திறமையைத் தம் மாணவர்களுக்கு உண்டாக்குவதே தம் சிறந்த கடமையென அவை நன்றாயுணராமையாலும் ஆசிரியர்கள் பெறும் போதனா முறைப் பயிற்சியால் சிறுவர்கட்குப் போதிய நலம் விளையவில்லை. ஆதலால் போதனா முறைப் பாடசாலைகளில் பாட திட்டம், வேலை முறை, உழைப்பினளவு, பரீக்ஷை நோக்கம் முதலிய யாவும் நாட்

டின் நிகழ்கால எதிர்காலத் தேவைகட்கேற்பச் சீர்திருத்த வேண்டியது அவசியமா யிருக்கிறது.

உடல் வளம், விரிந்த அறிவு, திருந்திய நடத்தை, பொதுநல நாட்டம், கிராம சுகாதார உணர்ச்சி, அரசியல் ஞானம், ஒத்துழைக்குந் திறன், நன்முறையிற் பொருளீட்டித் துய்க்கும் ஆற்றல், நாட்டுப் பற்று, தாய்மொழிப் பற்று முதலிய பேறுகள் யாவும் மாணவர்கட்கு வாய்க்கவேண்டும் என்னும் திண்ணிய கருத்துடன் பாடசாலைகள் யாவும் இனி நடைபெறுதல் இன்றியமையாத தென்பது மேலே கூறியவாற்றாலே புலப்படும். இத்தகைய வேலை, பாடசாலைகளில் நடவாத வரையிற் கிராம முன்னேற்றம் என்பது விக்கிரமன் குதிரையைப் போல்தான் விரையும். பொது ஜனங்களிடத்தும், ஆசிரியர்களிடத்தும், பாடசாலைகளை வைத்து நடத்தும் அதிகாரிகளிடத்தும், அரசாங்கத்தாரிடத்தும் மேல் விளக்கிய அவசியத்தின் உணர்ச்சி வலுக்க வேண்டும். அதிகாரமும் செல்வாக்கும் பெற்றுள்ள அறிவான்ற தலைவர்கள், இந்த அடிப்படையான சீர்திருத்தத்தைப் பற்றி நன்காராய்ந்து விவரமாக ஆலோசனை கூறுமாறு ஒரு கழகத்தை அமைத்தல் பெரும்பய னுடையதோர் செயலாம்.

மேலே எழுதிய தன் தலைப்பாய நோக்கம், இந்திய கிராம முன்னேற்றத்தின் வாயிலாக நாட்டு முன்னேற்றத்தை வளர்த்தற்கு, ஆரம்பக் கல்வியின நோக்கம் ஈதாக இருக்க வேண்டுமென்பதைக் காட்டுவதொன்றேயாம். அந் நோக்கம் நிறைவேறற்குப் பாடசாலைகளிற் கற்பிக்கப்படவேண்டிய பாடங்கள், அவற்றின் அளவு, போதிக்கவேண்டிய முறை, ஆசிரியரும் மாணவரும் மேற்கொள்ளவேண்டிய ஒழுகலாறு, வெறும் படிப்போடு நில்லாது அவர்கள் பள்ளிக்கூடத்திலும், வெளியிடங்களிலும் செய்யவேண்டிய கடமைகள், ஊரார்களுடன் ஆசிரியர்கள் ஒத்துழைக்க வேண்டிய வழி, ஊரில் பள்ளிக்கூடத்திற்கு இருக்கவேண்டிய மதிப்பு, ஒவ்வொன்றிலும் கிராம முன்னேற்றம் ஏற்படும் வழி, அதனால் நாட்டு முன்னேற்றம் ஓங்கும் நுட்பம் முதலிய பொருள்கள் தனிக் கட்டுரைகளில் விளக்கத் தக்கனவாம்.

---



# லார்டு ராபர்ட் பேடன் பவல்.

திருவாளர் T. L. ரகுபதி சர்மா அவர்கள், M. A., L. T.,

ஒருவருக்குக் கொடுக்கப்பட்ட செல்வப் பெயர்களால் அவரிடத்தில் உலகத்தாருக்குள்ள பிரியத்தை உணரலாம். ராபர்ட் பேடன் பவல் என்ற பெரியாருக்கு இவ்வித பெயர்கள் பல உள்ளன. தற்காலத்தில் ஆங்கில நாட்டார்களுக்கு அவரிடம் அமைந்துள்ள நன்மதிப்புக்கு இணையாக எதையும் சொல்ல முடியாது. அவர், தன் பெயரின் ஒரு பாகமாகிய 'ஸடீ' என்ற பெயரால் குடும்பத்தாரால் அழைக்கப்படுவார். அவருக்குப் பள்ளித் தோழர்களால் குளிக்கும்போது உபயோகிக்கும் துண்டு வஸ்திரம் என்று அர்த்தங்கொண்ட 'பேதிங் டவல்' (Bathing Towel) என்ற பெயர் இடப்பட்டிருந்தது. இது 'பேடன் பவல்' என்ற பெயரிலிருந்து மருவி வந்ததாக இருக்கவேண்டும். அஷாண்டி யுத்தத்தில் இவருடன் சேர்ந்து சண்டை செய்தவர்களால் இவருக்குப் 'பெருந் தொப்பியான்' என்ற பெயர் உண்டாயிற்று. தென்னாப்பிரிக்கா யுத்த சமயத்தில் மடபெலி என்னு மிடத்தில் 'தூங்கா ஓநாய்' என்ற பெயர் அவருக்குக் கிடைத்தது. கடைசியாக உலகெங்கும், என்றும் அழியாததான அவர் பெயரின் முதலெழுத்துக்களா லமைந்த B. P. என்ற பெயர் வழங்கி வருகிறது. தென்னாப்பிரிக்கா யுத்தத்தில் 'மேப் சிங்' என்றவிடத்தை, எதிரிகள் முற்றுகையினின்றும் காத்துத் தப்புவித்ததாகிய தீரச் செயலே அவருடைய கீர்த்திக்கு முடிபோன்றது என்று பிறர் நினைத்திருப்பினுமிருக்கலாம். அவ்வாறல்ல. ஆனால் உலகில் எங்கும் எக் காலத்தும் பார்த்திராததும் தொடங்கிய காலமுதலே நன்மை பயப்பதும் வெற்றிக் கொடியுடனேயே முன்னேறிச் செல்வதும் உலகத்தார் மனதைக் கவருவதுமான சாரணர் இயக்கத்தை ஸ்தாபித்ததன் பொருட்டே அவரை உலகம் மிகுதியும் புகழுவதாயிற்று.

லார்டு ராபர்ட்ஸ் என்பவரது ராணுவச் செயல்களின் கீர்த்தியாவது, லார்டு கிட்சனர் என்ற வீரருடைய வசீகரச் சக்தியாவது இவருக்குக் கிடையாது. ஆயினும் பல பெருங் குணங்கள் ஒருங்கே சேர்ந்தாயும் வருங்கால விஷயங்களை முன்னுடியே நோக்குந் தன்மையும், பிறரை உற்சாகப்படுத்தவும் சந்தோஷிக்கச் செய்பவும், திறந்த வெளிகளில் நேரங் கழிப்பதில் ஆசையும் சிறு பிராயத்தில் பள்ளியிலிருந்த போது தனக்கிருந்த ஊக்கமும், சுறுசுறுப்பும் சிறிதும் குன்றுமல் இவருக் கிருந்ததுபோல வேறு எவருக்கு மில்லை யென்று சொல்லலாம். அவர் தொடங்கிய இயக்கத்தைப் பழைய ஏற்பாட்டிலிருந்து பலவிதத்திலும் முரண்பட்டதாய்ச் சொல்லவேண்டும். அப்பேர்ப்பட்ட பெரும் இயக்கத்தை எவ்வாறு பலப்படுத்தி உலகிலுள்ளோரெல்லாம் புகழ்ந்து பேசி ஆதரிக்கக்கூடிய இயக்கமாகச் செய்தாரென்று நம்மால் மதிக்கக்கூட முடியவில்லை.

வேடிக்கையாய்ப் பிறர் சிரிக்கப் பேசும் சுபாவம் அவருக்கு இருந்ததாக, நாம் கேட்டிருக்கும் கணக்கற்ற பல கதைகளால் தெரிய வருகிறது. தன் பட்டாளத்தைச் சேர்ந்த சகாக்களுடன் இருக்கையில் பலதடவைகளில் மாறுவேடம் பூண்டு அவர்களைப் பயமுறுத்தியும், சிரிப்பு உண்டாக்கியும் பொழுது போக்குவது வழக்கம். தான் படித்து வந்த 'சார்ட்டர் ஹௌஸ்' பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர்களுடைய நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக்கொண்டதோடு விளையாட்டுகளிலும் மற்றவர்களுடனும் நன்கு கலந்து விளையாடுவார். கால்பந்து ஆட்டத்தில் 'எல்லை காப்பவராக' (Goal Keeper) நியமிக்கப்பெற்று அதைத் திறமையுடன் காத்துக்கொள்வார். அதுபோலவே வருங்காலத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எல்லைப் பிரதேசங்களையும் தன் முயற்சியால் காப்பாற்றினர்.

படம் வரைதல், பாட்டு, இயற்கை யமைப்பு முதலியவற்றில் அபரிமிதமான பிரியம் அவரது சிறுபிராய முதற்கொண்டே அவரிடம் தோன்றின. பிறவியிலேயே அவருக்கு நடிப்புச் சக்தி யிருந்ததென்றே சொல்லலாம். எவரா யிருந்தாலும் அவரைப்போலவே நடித்துக் காட்டுவார். சிறு நாடகங்களை எழுதி அதில் வேடிக்கையான வேஷங்



களைத் தான் போட்டுக்கொள்வார். அவருடைய நடிக்கும் திறமையைத் தெரிந்த ஒரு நாடகசாலைத் தலைவர் ராணுவ சேவகத்தை விட்டுவிட்டுத் தகுந்த சம்பளத்தில் நடிகராகும்படி வேண்டினர். ஆனால் நடிப்பதில் அதிக உற்சாகமுண்டாயினும் அதை நேரப் போக்காக மட்டுமே கருதினர்.

அவர் ராணுவத்தில் சேர்ந்த விதம், கேட்போருக்கு வியப்பை உண்டாக்கக்கூடியது. சார்ட்டர் ஹௌஸ் பள்ளியை விட்டு விலகிய போது ராணுவச் சேவகத்தைக் கைக்கொள்ளும் உத்தேசம் அவருக்குக் கிடையாது. அதைப் பற்றிய நினைப்புக்கூட அவருக் கில்லாமலிருந்தது. ஆயினும் ராணுவத்தில் அந்தஸ்துள்ள உத்தியோகங்களுக்கு ஆட்களைத் தெரிந் தெடுப்பதற்காக ஒரு பரீக்ஷை நடத்தப் போகிற தகவலைத் தெரிந்துகொண்டு அப் பரீட்சைக்கு யாதொரு பயிற்சியன்னியிலும் அதில் தான் தேரலாமென்ற நம்பிக்கை சிறிதும் இல்லாமலும் அதற்கு ஆஜரானர். தனக்கும் தன் தோழர்களுக்கும் மிகுந்த வியப்புண்டாகும்படி அப் பரீட்சைக்கு ஆஜரான 700 பேர்களில் இரண்டாவதாக இவர் தேறினர். இராணுவ உத்தியோகஸ்தர் பல தேசங்களுக்குச் சென்று அங்கு தீரச் செயல்கள் செய்யப் பற்பல சந்தர்ப்பங்கள் நேரக்கூடு மென்பதை நன்குணர்ந்ததன் காரணமாக அவருக்கு ஒருவித நிதான புத்தியும் சக்தியும் உண்டாயிருக்கவேண்டும். ஆகவே அச் சிறு பிராயத்திலேயே தனக்குள்ள திறமையை அவர் வெளிப்படுத்தலானர்.

இவ்வாறு தேரியதன் பயனாக அவருக்கும் சில சௌகரியங்கள் கிடைத்தன. 'சாண்டர்ஸ்ட்' (Sandhurst) என்ற ராணுவப் பயிற்சிச் சாலையில் இரண்டு வருஷப் படிப்புத் தேவையில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. ஆகையால் அவர் ராணுவ வேலைபார்க்கத் தொடங்கிவிட்டார்.

கீர்த்திபெற்ற குதிரைப் பட்டாளத்தில் அவரை நியமித்ததும் அதில் சேர்ந்து இந்தியாவுக்குக் கப்பலேற நேர்ந்ததும் அவருக்கு

மிக்க உற்சாகத்தையும் ஊக்கத்தையும் கொடுத்தன. கப்பற் படையைச் சேர்ந்த உத்தியோகஸ்தரான தன் தமயனைப் பற்றிப் பொறுமைப்படச் சிறிதும் தேவை யில்லாமற் போய்விட்டது.

தனக்குக் கிடைத்த வேலையில் அவர் உடனே முழு மனதுடன் அமர்ந்து மிகுந்த உற்சாகத்துடன் தன் வேலைகளைச் செய்பவரானார். அது அவர் பிற்கால முன்னேற்றத்துக்கு ஓர் அறிகுறியாயிற்று. தனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை நன்கு உபயோகித்து அனுபவமடைந்து வந்ததுடன் சமயா சமயங்களில் தமாஷ்களும் ஏற்பாடு செய்வார். ஆனால் இந்தியாவின் உக்கிரமான உஷ்ணந் தாங்காது அவருக்கு ஜுரமுண்டாகி விடவே அதைக் குணப்படுத்திக்கொண்டு நல்ல ஆரோக்கியத்தை அடைவதற்காக ரஜாவின்பேரில் ஊருக்குத் திரும்பவேண்டியிருந்தது. அவர் 18 மாதம் ஊரிலிருந்துவிட்டுத் தகுந்த ஆரோக்கியத்துடன் திரும்பி அச் சமயம் ஆப்கன் ராஜ்யத்தில் காந்தகார் என்ற இடத்தில் தங்கியிருந்த தன் பட்டாளத்தில் போய்ச் சேர்ந்தார். ஒரு ராணுவ உத்தியோகஸ்தனுக்கு உத்திரவுப்படி நடப்பதுமட்டும் போதாது. தன் யோசனையைக்கொண்டு சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு ஒவ்வொரு ராணுவ வீரனும் நடந்துகொள்ளப் பழகவேண்டுமென்பது அவரது கோரிக்கை. இதுவே சாரணரியக்கத்தின் முக்கிய நோக்கம். இதில் அக் காலத்திலேயே அவருக்குத் திறமையுண்டு. அதைப் பலதடவைகளில் உபயோகப்படுத்தி யிருக்கிறார். ஒரு சமயம் தவறிப்போன ஒரு குதிரையை அடையாளங்களைக் கவனித்துக் கொண்டு அநேக மைல் தூரம் மலைமேல் சென்று அதைக் கண்டு பிடித்துத் திருப்பிக்கொண்டு வந்தார்.

இம் மாதிரி, தந்திரமாயும் சமயோசிதமாயும் புத்தி நுட்பத்தால் சிக்கலான சந்தர்ப்பங்களில் ஊக்கத்துடன் காரியங்களை முடிவுக்குக் கொண்டுவருவதில் அவருக்கு அதிகப் பிரியம். அக் காலத்திலேயே அதைப்பற்றி ஒரு புஸ்தகமும் எழுதி யிருக்கிறார்.

தென் ஆப்பிரிக்காவில் ஜுலூ தலைவர்கள், பிரிட்டிஷ் ராஜாங்கத்துக்கு விரோதமாய்க் கலகம் செய்ய ஆரம்பித்தபொழுது அவரை அங்கு அனுப்பினார்கள். அவ் விடத்தில் தன் பட்டாளத்தைத் திறமை



யுடன் நடத்தினார். சிறு பிராயத்திலேயே அவரிடத்திற் காணப்பட்ட தலைமை வகிக்கும் திறமை இங்குத்தான் நன்கு விளங்கியது. பிரதம சிகிச்சை செய்வதிலும் அவருக்குத் திறமையுண்டு. இந்த ஜுலூ யுத்தத்தில் அது மிகப் பயன்பட்டது. பகல் முழுவதும் சண்டை செய்துவிட்டு, இராத்திரியிலும் தன் இனத்தவர்களிலும் எதிரிகளிலும் காயப்பட்டிருந்தவர்களுக்கு ரண வைத்தியமும் செய்துகொண்டிருப்பார்.

அக் கலகம் ஒடுக்கப்பட்டபின், அவரது கீர்த்தி பிரகாசிக்கத் தொடங்கிற்று. அவருடைய தளகர்த்தர்கள் தாங்கள் எவ்விடம் சென்றாலும் தங்களுடன் அவரை அனுப்பும்படி கேட்பார்கள். இவ்வாறு மேலதிகாரிகளிடம் அவருக்குச் செல்வாக்கு இருந்ததோடு சம அந்தஸ்துள்ள உத்தியோகஸ்தர்களும் துருப்புக்களும்கூட அவரிடம் அன்பு பாராட்டினார்கள்.

மனத் திருப்தியும் சந்தோஷமும் உள்ளவர்கள்தான் தங்கள் வேலையை ஊக்கத்துடனும் திறமையுடனும் செய்வார்கள் என்பதை நமது பேடன் பவல் நன்குணர்ந்தார். ஆகையால் தன் பட்டாளத் துருப்புகளைச் சந்தோஷப் படுத்தும் பொருட்டு அவர் பாட்டுக் கச்சேரிகளும் நாடகங்களும் பெரு முயற்சியுடன் ஏற்பாடு செய்தார். அச் சமயம் அவர் வேலைபார்த்த மாலட் பட்டாளத்தைச் சேர்ந்தவர்களுக்குள் இவ் விளையாட்டுக்கள் முக்கிய அம்சங்களாக இருந்தன. அங்கிருந்து சிறிது நாட்களுக்குப் பின்னர், தான் முதன்முதல் சேர்ந்த 13-வது உஸார் என்ற பட்டாளத்திற்கே மாற்றப்பட்டார். அது அப்போது அயர்லாந்தில் இருந்தது அங்கு நடந்த பயிற்சிச் சண்டையில் அவர் காண்பித்த திறமை, வியக்கத்தக்கதாயே யிருந்தது. அதில் அவருடைய புத்தி நுட்பமும் தந்திரமும் நன்கு விளங்கின. அவற்றிற்காக எல்லோரும் அவரை மெச்சினார்கள்.

1895 ஞலக் கடைசியில் ஆப்பிரிக்காக் கண்டத்து மேற்குக் கரையிலுள்ள அஷாண்டி என்ற தேசத்தில் அரசு செலுத்திய சுதேச அரசன் பிரெம்பி என்பவனால் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு நேர்ந்த இன்னல்களைத் தீர்க்கும் பொருட்டும் அவ் வரசனை அடக்கும் பொருட்

டும் ஒரு பெரிய சைனியத்தை அனுப்பவேண்டியதா யிருந்தது. அதற்கு முன்னணியாக ஒரு சிறு பட்டாளத்தைப் பேடன்பவல் என்பவர் வசம் அனுப்பினார்கள் *. தனக்குக் கொடுத்த அக் கடமையைப் பேடன் பவல் சிறிதும் குறைவின்றித் திறமையுடன் செய்து முடித்தார். அதனால் பெருஞ் சைன்யம் வந்தபோது அதை அவ் வரசன் எதிர்க்க முடியாமல் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்குச் சண்டையின்றியே வெற்றி கிடைத்தது. இவர் செய்த வேலைக்காக இவரை, அரசாங்கத்தார் நன்குமதித்து 'லெப்டினண்டு கர்னல்' என்ற உயர் பதவியை இவருக்கு அளித்தார்கள். இவரது கீர்த்தி பரவியதால் இவருடைய உதவி அரசாங்கத்தாருக்கு இடைவிடாது தேவையாயிருந்தது. அச் சமயம் தென் ஆப்பிரிக்காவின் ஒரு பிரதேசத்தில் குடியேறிய வெள்ளையர்களை நாட்டைவிட்டு விரட்டிவிட வேண்டுமென்று சுதேசிகளுக்குள் ஒரு கிளர்ச்சி தோன்றியிருந்தது. கொலையும் கொள்ளையும் எங்கும் பரவிக்கொண்டு வந்தது. இதைத் தடுப்பதற்காக இவருடன் ஒரு சைன்யம் அங்கு அனுப்பப்பட்டது. அங்கு இவருக்கு ஏற்படுத்திய வேலைகள் அநேகமாய் ஆபீசிலேயே இருந்தபோதிலும் அதில் திருப்தியடையாது எதிரி சைன்யங்கள் இருக்குமிடங்களுக்குத் தனிமையாய்ச் சென்று அவர்களுடைய மர்மங்களைத் தந்திரமாய்த் தெரிந்து வருவார். அச் சமயங்களிற் பலதடவைகளில் அவர் உயிருக்கே அபாயம் உண்டாயிருக்கக்கூடும். அவற்றினின்றும் தன் தந்திரத்தாலும் புத்தி நுட்பத்தாலும் தன்னைத் தப்புவித்துக் கொள்வார். இதை யறிந்த எதிரிகள் இவருக்குத் 'தூங்காத ஓநாய்' என்ற பெயரிட்டிருந்தார்கள் இவர் செய்த வேலையின் பயனாகவே மேற்சொன்ன சுதேசக் கிளர்ச்சி ஒடுங்கிற்று. அப்படி ஒடுங்குவதற்கு அவர் அவசியம் என்று கருதிச் செய்த நடவடிக்கைகளுக்காக, தென் ஆப்பிரிக்காப் பிரதம அதிகாரியான ஹை கமிஷனர், அவர்பேரில் குற்றம் சாட்டி அவரைச் சிறைப்படுத்தவும் உத்தரவு செய்தார். அவருடன் உழைத்த அவர் மேலதிகாரியாகிய காரிங்டன் என்ற தளகர்த்தர் அவர் செய்த வேலைகளைப் பற்றிப் புகழ்ந்து பேசி ஹை கமிஷனர் உத்திரவுக்குக் கீழ்ப்படிய மறுத்துவிட்டார். பிறகு ஏற்பட்ட ராணுவ

* அவ் வரசனுக்குத் துணைபுரிய அயல்நாட்டரசனை வரவொட்டாது தடுப்பது அவசியமாயிற்று.



விசாரணையில் அவர்பேரில் யாதொரு குற்றமுமில்லை யென்றும் அவர் செய்தது சமயோசிதமானதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அவருடைய முழுத் திறமையும் தென் ஆப்பிரிக்காவில் போயர் யுத்தத்தில்தான் வெளிப்பட்டது. அங்குள்ள பல பிரதேசங்களெல்லாவற்றிற்கும் மத்திய ஸ்தாபனமாகிய மேப்சிங் என்னுமிடம், இனி ஏற்படப்போகும் யுத்தத்தில் எவ்வளவு அவசியமானதென்பதை அவர் தென் ஆப்பிரிக்காவுக்குப் போய்ச் சேர்ந்த சிறிது நாட்களுக்குள் உணர்ந்தார். அதனால் அதைத் தன் முக்கிய ஸ்தானமாக்கிக்கொண்டு அதைப் போயர்கள் தாக்கிப் பிடித்துக்கொள்ளாத வண்ணம் துருப்புகளைச் சண்டைசெய்யப் பழக்கத் தொடங்கினார். யுத்தம் தொடங்கிய பின் பெருஞ் சைன்யத்துடன் இவரைத் தாக்கிய சிராஞ்சி என்ற போயர்த் தளகர்த்தர், இவரைச் சரண்புகும்படி கேட்டதற்கு இவர், எப்பொழுது எங்கள் கோட்டையைத் தாக்க உத்தேசித்திருக்கிறீர்கள் என்று மறுமொழி கேட்டு அனுப்பினார். தன் சைன்யத்தைப்போல் மூன்று மடங்குகொண்ட போயர் சைன்யத்தை ஏழு மாதங்களுக்குப் பின் தன் உதவிக்கு வேறு துருப்புகள் வரும்வரை எதிர்த்து நின்று வெற்றி பெற்றார். 'மேப் சிங்கைக் காப்பாற்றிய தீரர்' என்று உலக முழுவதும் கொண்டாடப் பெற்றார். அவர் உருவப் படங்களும் B. P. என்று பேர் தீட்டிய பொத்தான் முதலிய சாமான்களும் பலரும் ஆவலுடன் அணிந்துகொள்ளும் வஸ்துக்களாயின. அவ் யுத்தத்தில் அவர் செய்த தீரச் செய்கைகளும் அவர் அப்போதைக்கப்போது அனுப்பிய அறிக்கைகளும் பிரிட்டிஷ் ஜனங்களுக்கு மிகுந்த உற்சாகத்தையும் ஆனந்தத்தையும் அளித்தன. ஒருசமயம் "எதிரிகள் இடைவிடாது 4 மணி நேரம் எங்களைத் தாக்கினார்கள். ஒரு நாய் இறந்தது" என்று தமாஷாய்த் தந்தி கொடுத்தாராம். நெருக்கடியான அந்த நிலைமையிலும் அவர் தன் துருப்புகளை உற்சாகப்படுத்துவதற்காகப் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். லார்டு ராபர்ட்ஸ் துருப்புகள் கடைசியாக இவருடைய உதவிக்கு வந்ததும் இவரது சைன்யம் களைத்தவர்கள் போலல்லாது ஊக்கத்துடன் ஒத்துழைத்தது, இவருக்கு அவர்களிடமுள்ள செல்வாக்குக்கு அறிகுறியாக நின்றது. இந்த வெற்றிகளுக்காக இவர் பெரும் பதவிகளுக்கு உயர்த்தப்பட்டு இரண்டு வருஷகாலம் வேலைபார்த்து வந்தார். அக் காலத்தில் தனக்கு மிகப் பிரியமான சாரணரியக்கத்தைப் பற்றிப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினார்.

அதைப்பற்றி அவர் எழுதிய விஷயங்களைப் படித்த சிறுவர் சிறுமியர்களுக்கு அதில் மிகுந்த ஊக்கம் உண்டாயிற்று. அதை உணர்ந்த பேடன் பவல் அந்த இயக்கத்தை நன்கு ஸ்தாபித்து முன்னேற்றம் அடையச் செய்யும் பொருட்டு தன் ராணுவ வேலையிலிருந்து விலகிக் கொள்ளத் தீர்மானித்தார். அக் காலம் முதல் அவ் வியக்கத்தை உலகெலாம் பரவும்படி செய்வதற்கான ஏற்பாடுகளெல்லாம் ஊக்கத்துடன் செய்வாராயினர். சிறுவர் சிறுமியரின் மனப் பான்மையை நன்குணர்ந்தவ ராகலின் இவ் வியக்கம் எல்லாத் தேச வாலிபர்களுக்கிடையே தோன்றி விருத்தி யடைந்தது. இப்போது அதில் 20,00,000 க்கு மேற்கொண்ட தொகையினர், சாரணராய்ச் சேர்ந்து உலகில் மூலை முடுக்குகளிலும் தங்கள் மேலான பரோபகாரச் செயல்களைச் செய்து வருகிறார்கள். எத் தேசத்தினராயினும் சாரணர்கள், மிகுந்த நட்பினர்களாயும் நற் செய்கைகளில் ஒத்துழைப்பவர்களாயும் இருக்கின்றனர். சென்ற வருஷத்தில் தலைவர் பேடன்பவலுடைய பெரு முயற்சியின் பயனாகப் பல தேசங்களிலிருந்தும் சுமார் 40,000 சாரணப் பிரதிநிதிகள் இங்கிலாந்தில் ஆரோ பார்க்கு என்னுமிடத்திற் கூடி 15 நாட்கள் அங்குத் தங்கியிருந்து தங்களுக்குள் ஏற்பட்டிருக்கிற ஊக்கத்தையும், உற்சாகத்தையும், சகோதரத்துவத்தையும், பொதுஜன ஊழியமாகிய தங்கள் கொள்கையையும் எவ்விதக் கஷ்டம் வரினும் சிறிதும் பாராட்டாத மனப்பான்மையையும் உலகெலாம் தெரிந்துகொள்ளுமாறு நடந்துகொண்டனர். சுமார் 70 வயதுள்ள தலைவர், அச்சமயம் அவர்களை வரவேற்று அவர்களுடன் பல கொண்டாட்டங்களிலும் கலந்து அவர்களுக்கு அரும் பெரும் வார்த்தைகளும் சொல்லி அவர்களை ஊக்கப்படுத்தினர். இவ் வியக்கத்தின் பயனாக உலகில் பல தேசத்தார்களும், தங்கள் விரோதங்கள் சச்சரவுகளை யெல்லாம் ஒழித்து உலகில் சமாதானம் அடைவார்கள் என்ற நம்பிக்கை எல்லோருடைய மனதிலும் வேரூன்றி விட்டது.

சர்வ தேச சங்கம் மிகுந்த கஷ்டப்பட்டுச் செய்துவரும் சமாதானப் பெரு முயற்சியை, இச் சாரணரியக்கம் ஒன்றே எளிதில் முடிக்க வல்லதாகிவிட்டது. இவ்வளவு சக்தி வாய்ந்த இவ் வியக்கத்தை ஸ்தாபித்த இப் பெரியாரை, உலகம் போன்றுந் துணையும் போற்றும் என்று சொல்லவும் வேண்டுங்கொல்?

---



# சுசீலை *

## திருவாளர் கே. எஸ். மகாதேவன் அவர்கள்.

இரவோ மணி பதினொன்று. பகலில் பட்ட கஷ்டங்களைப் போக்க, மிகவும் மெல்லிய துயிலைப் போர்த்துக்கொண்டு மெத்தையின்மீது மெத்தென்று படுத்தேன். கொசுகின் தொந்திரவையும் போக்க விளக்கையும் அணைத்தேன். என்ன செய்தாலும் என்ன பயன். நித்திரா தேவியைக் கண்ணிலும் காணேன். மனது ஒருமைப்பட்டாலொழிய எக் காரியம்தான் நடைபெறும்? மனது அல்லற்பட்டது; அங்குமிங்கும் புரண்டேன். ஆசாரச் சீர்திருத்தத்தைப் பற்றிக் காந்தி அடிகள் இளைஞர்களைத் தூண்டிய வாக்கை நினைத்து நினைத்து நான் எனது தாய் நாட்டின் முன்னேற்றத்திற்கு என்ன செய்யப் போகிறேன் என்று ஏங்கினவண்ணமா யிருந்தேனேயொழிய துயின்றேனல்லேன்.

சடுதியில் கதவைத் தட்டும் பரபரப்பான மெல்லிய ஓர் சத்தம் கேட்டது. யார் இச் சமயத்தில் வந்திருக்கக் கூடும் என்று ஆலோசித்துக்கொண் டிருக்கும் பொழுது "அம்மாமி, அம்மாமி கதவைத் திறவுங்கோ" என்ற ஓர் மென்குரலை மீண்டும் கேட்டேன். இந்தக் குளிர்ந்த மெல்லிழையாள் சத்தத்தை நான் முன்பு கேட்டிருக்கின்றேன் எனினும் அது எனது ஞாபகத்திற்கு வரவில்லையே என்று எண்ணின வண்ணமாய் இருந்தேன்.

---

* மதுரை அமெரிக்கன் கல்லூரி மாதாந்தரப் பத்திரிகையில் எழுதப்பெற்ற சுசீலை என்னும்கட்டுரையைத் தழுவியது.

சிறிது நேரத்தில் கதவு மெல்லத் திறக்கப்பட்டதையும், பிறகு மூடப்பட்டதையும் கவனித்தேன். அது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. மெல்ல எழுந்து பலகணி வழியாக எட்டிப் பார்த்தேன். ஹா! என் தாயை ஓர் சிறு பெண் கட்டிக்கொண்டிருந்தாள். அச் சிறுமியின் தலை என் அன்னையின் மார்பில் பதிந்திருந்தது. என் தாயோ அக் குழந்தையின் வண்டுவார் குழலை மெல்லத் தடவி அன்பு காட்டிக்கொண்டிருந்தாள். "குழந்தாய் அழாதே; கண்ணே சும்மா இருடீ; அடக்கிக்கொள்; என் ரூமுக்குப் போவோம் வா; இங்கிருந்தால் கிருஷ்ணமூர்த்தியின் தூக்கத்திற்குப் பங்கமாகும்". என்று சொல்லிக்கொண்டே இருவரும் தாயும் மகளும் போல உள்ளே சென்றனர்.

எனது ஆர்வத்தை அடக்க முடியவில்லை. அந்தப் பெண் யாரென்றும் தெரியவில்லை. ஆனால் அவளுடைய அழகிய வனப்பும் பெண்மையும் எனக்கு ஏற்கனவே அறிமுகமாகவே தென்பட்டது. மெல்லக் கதவைத் திறந்து சந்தடி செய்யாமல் என் தாயின் ரூம் அண்டை சென்றேன். உள்ளே ஹரிக்கேன் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. திறவுகோல் இடும் துவாரத்தின் வழியாய் உள்ளே பார்த்தேன். என் தாயின் மடியில் அன்று அலர்ந்த பூவை சூரிய வெப்பத்தால் வாடுவதுபோல் மனதுள் அடக்கிய தாங்கொணாச் சோகத்தினால் விம்மி விம்மி அழும் ஓர் அணங்கைக் கண்டேன். அவள் தன்னுடைய குறைகளை என் தாயிடம் சொல்லிக்கொண்டிருநதாள் போலும். திடீரென்று அவள் தலை நிமிர்ந்தது; அழுதவண்ணம் சில சொற்கள் பகர்ந்தாள்.

அச் சமயம் தான் அப் பெண்ணின் மாசிலா வனப்பை என் கண்கள் கவர்ந்தன. ஆ! தெய்வமே இவள் சுசீலை யல்லவோ! ரங்கநாதன் தங்கை யல்லவா! பால்யத்தில் இவளே என்னுடன் விளையாடினவள் என்பது முதலாகச் சமீபத்தில் அவளையொட்டி நடந்த சம்பவங்கள்வரை எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய் என் கண்ணுக்கும், மனதிற்கும் தோன்றிச் சினிமாப் படம்போல் மறைந்தன. அழகு மிக்க பந்தலில் புகழ் பெற்ற சங்கீத வித்வான்கள் நிரம்ப அவள் தன் மணாளனோடு நடுவில் வீற்றிருக்கக் கழுத்தில்



ஆரங்களும் வயிர ஆபரணங்களும் பளீர் பளீர் என டால் வீச இவளோர் தேவதையோ அல்லேல் மானிட மாதுதானோ என்று மதி மயங்கும்படி வீற்றிருந்த சகல ஆடம்பரங்களும் அன்றுதான் நடந்ததுபோல் என் முன் தோன்றின.

அந்தோ என்ன மாறுதல்! இரண்டு வருடங்கள் சென்றன. அவளுக்கு 12 வயதுகூட ஆகவில்லை. என்ன நடந்ததென்று நினைக்கின்றீர்கள்? திடீரென்று அவள் கணவன் இறந்தான். அழகிய ஆபரணங்கள், பட்டாடைகள், பொற்கொடி போன்ற அவள் தேகத்தினின்றும் பிடுங்கப்பட்டன. அவளுடைய அழகிய கூந்தல் ஒன்றே எஞ்சியது.

ஆனால் இவ்வித வியாகூலத்தைச் சற்றே அடக்கிக்கொண்டு அங்கு நடப்பதென்னவென்று கவனித்தேன். "அம்மாமி! இனிமேல் என்னால் பொறுக்க முடியாது; என் சகோதரர் என்பேரில் எவ்வளவு பிரியமாயிருந்தாரென்று உங்களுக்குத் தெரியும்; இப்பொழுது அவர் படுத்தும் பாடு என்னால் பொறுக்க முடியவில்லை. இன்று ஒரு புஸ்தகத்தை எடுத்துக் கோபத்தால் என்மீது விட்டெறிந்தார். என் குற்றம் அவ்வளவு பெரிதோ! ஆ! என் மனது உடைந்து போகும்போ லிருக்கிறதே" என்று சொல்லிக்கொண்டே மடை திறந்த வெள்ளம்போல் கண்ணீர் பெருக என் தாயின் மடியில் குப்புற விழுந்து தேம்பித் தேம்பி அழலானாள்.

"குழந்தாய்! அழாதே உன்னைப்போல் வயது வந்த பெண்கள் இப்படி அழலாமா? எப்படி இருந்தாலும் பொறுத்துக்கொள். உன் தமயனுக்கு அவ்வளவு கோபம் வரக் காரணமென்ன?" என்று என் தாய் கேட்டாள்.

வாஸ்தவம்தான். நான் செய்தது ஓர் சிறு குற்றந்தான். நானவ்வாறு அயலகத்துப் பெண்கள் சொல்லுகிறதைக் கேட்டிருக்கக் கூடாதுதான். தெய்வீகமான சரிதம்தானே என்று அவர்கள் வார்த்தைக்கிணங்கி அவர்களோடு நேற்றிரவு நாடகத்

திற்குச் சென்றேன். சரித்திரம் நன்றாயிருந்தது. ஐயோ! அங்கு என்ன கண்டேன் தெரியுமா? மாமி! என் கண்கள் கூசின. எனது தமயனார் ஓர் விலைமாதோடு எல்லோருக்கும் முன்னிலையில் நாடகம் நடக்கும் காலத்தில் கூடிக் குலாவிச் சிரித்து மகிழ்ந்து வீற்றிருந்தார். இதற்கிடையில் என்னை அவர் பார்த்துவிட்டார் போலும். வீட்டிற்கு வந்ததுமுதல் என்னைப் படுத்திய பாடு சுவாமிக்குத்தான் பொறுக்குமா? மாமி என் தலை விதியும் இப்படி ஆயிற்றே. நான் என் காலத்தை அழுத வண்ணமாகத்தான் கழிக்க வேண்டுமாமே? என்ன அநியாயம். நல்ல கதை என்று தானே நான் பார்க்கப்போனேன். என் தமயன் எல்லோருக்கு முன்னால் அந்தத் தேவடியாளோடு முதல் வரிசையில் சல்லாபமாக மேல் விழுந்து பேசிக்கொண்டிருந்தாரே. அவ்விதக் காம விகாரத்திற்குக் கட்டுப்பாடில்லையாம். ஆடவர் என்னதான் அக்கிரமம் செய்யினும் அதை உலகம் இழிவாக நினைப்பதில்லை. நான் யாதுமறியாத பேதை. என் மனதோ பரிசுத்தமானது. எனினும் 'குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக் காம்பே' என்று என் தமயனார் என்னை வைதார் என்று சொல்லி மிகவும் துக்கத்தோடு அழுதாள்.

அப் பெண் சொன்ன வார்த்தைகள் என் மனதை ஊடுருவிச் சென்றன. நம் தேசத்தின் உபயோகமற்ற, ஏமாற்றங்கொண்ட ஜாதிக் கட்டுப்பாட்டையும், பெண்கள் அனுவசியமாகப் படுத்தப்படும் அநியாயத்தையும் ஆண்களின் சுயநலத்தையும் கண்ணோக்கி என் மனம் புண்பட்டது.

குழந்தாய் என்ன செய்வது, நம் தலையில் இப்படி எழுதிவிட்டானே. இப்படிச் சிறுமையிலேயே நீ இக்கதி அடையவேண்டும் என்று யார் செய்த தீவினையோ? எனினும் இதையெல்லாம் பொறுக்கும் மனோ பலத்தை உனக்கு ஸ்வாமிதான் கொடுக்க வேண்டும். புருஷர்களுக்கோ! அவர்கள் என்ன குறைவு செய்தாலும் அதை ஒரு பொருட்டாக நமதுலகம் எண்ணுவதில்லை. கணவனை இழந்த நமக்கோ சாதாரண சந்தோஷமும் மறுக்கப்படுகிறது. பெண்ணே! என் செய்வது. இவ்விதக் கஷ்டங்களைச் சகித்து வாழ அம்பிகையை வழிபடுவதே சிறந்தது. என்ன செய்யலாம். குழந்தாய்! எல்லாம் சாஸ்திரப்படி நடக்கவேண்டுமே. சாஸ்திரம் தவறலாமா?



“இத்தகைய வளரும் பெண்களை வாழவொட்டாது தனியே கிடந்து தவிக்க வைக்கும் சாஸ்திரத்தைக் குப்பையில் எறி” என்று தன்னை அறியாமலேயே முணுமுணுத்தாள். என் தாய் அப் பெண்ணுக்குச் சொன்ன ஆறுதல் என் மனதிற்கு ஒவ்வவில்லை. எவ்வாறு அம் மெல்லிழையாள் பட்டினியும் பாரணையும் கிடந்து தனித்திருப்பாள்? அவள் செய்யாத குற்றத்திற்கு அவள் எப்படி வருந்துவாள்? அவள் எப்படிப் பிணைப்படுவாள்? என்று இவ்வாறு என் மனதில் ஏற்பட்ட கிளர்ச்சியான எண்ணங்களினால் என்னால் அங்கு நிற்கக்கூட முடியவில்லை.

பத்து நாட்கள் சென்றன. ஒவ்வொரு நிமிஷமும் என் மனதில் பெரும் போர் நடந்துகொண்டிருந்தது. அடிக்கடி என் முன்னிலையில் பரிதாப நிலையை யடைந்த அச் சிறு பெண்ணின் உருவம் தோன்றியவண்ணமாகவே யிருந்தது. என் மனமே புழுங்கியது.

ஒரு நாள் மாலைப் பொழுதில் என்னுடைய அறையிலிருந்து வெளிவந்தேன். சுசீலை அப்பொழுதுதான் என் தாயைக்காண வாசற்படியேறினாள்; நான் அவளைப் பார்த்தேன். அவள் கண்களும் என்னை நோக்கின. ஒருவரை ஒருவர் கண்டு பிரமித்து நின்றோம். ஒன்றும் பேச நாவெழவில்லை. பிறகு பிரமை, பச்சாத்தாபமாக மாறினது. நான் சிறிது திடங்கொண்டு “சுசீலய்! உன் பழைய தோழன் கிருஷ்ணனைப் பற்றி நினைவிருக்கிறதா” என்று மெல்லக் கேட்டேன். சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் தலைகுனிந்து நின்று, பிறகு சிறிது தலைநிமிர்ந்து தாழ்ந்த குரலோடும், மிகவும் வருத்தத்தோடும் என்னைப் போலொத்த துரதிர்ஷ்டமுள்ள கைம்பெண்கள் சந்தோஷமாக ஆடவர்களுடன் பேசுவது தகாதன்றோ? என்று கனன்றாள்.

சுசீலா! உன் நிலைமையைப் பற்றி நான் மிகவும் பரிதபிக்கின்றேன்; பண்டைக் காலத்தில் நாம் ஒரு சாலை மாணாக்கராக மனமொருமித்து வாழ்ந்த நாளை உன்னியே எனக்குப் பேச்சுத் திடம் ஏற்பட்டது. சுசீலா! எவ்விதமான சாஸ்திர விலங்குகள் [illegible]

லைக் கொடூரமாகப் பூட்டிக்கொண் டிருக்கின்றன என்பதை நானறிவேன். இவ்விதமான சங்கடத்தினின்றும் விடுவிக்காத சமூகத்தினை எண்ணி யெண்ணி அந்தோ என் மனம் படும்பாட்டையிங்கே எடுத்துச் சொல்ல என் னெஞ்சமோ அயர்கிறது; நாவும் எழவில்லை.

"கண்ணா! என் விஷயத்தில் உமது மனம் பரிதபிக்கிறதைக் காண, நன்றி பாராட்டுகிறேன். எனினும் என் சகோதரர் வருமுன் நான் வீடுசேர வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே என்னை அகன்றாள்.

அநேக மாதங்கள் கழிந்தன. இவ் வழகிய பெண்ணை நான் அடிக்கடி கண்டதுண்டு. அவளுடைய மெல்லிய குரலும், பார்ப்போர் கண்ணைப் பரவசப் படுத்தும் அவளுடைய அழகும், இனிய நடையும், செவ்விய ஒழுக்கமும் என் மனதைக் கவர்ந்தன. அவள் அழகுக்கேற்ற குணமும் அதற்கேற்ற அறிவும் நாளுக்குநாள் விருத்தியடைந்து கொண்டே வந்தது. இப்பொழுதோ அம்மாமியின் மனத் தேறுதலுக்கு இவள் தயங்கி நிற்கவில்லை. புராண இதிகாசங்களில் பாண்டித்யம் பெற்று விட்டாள். என் தாய்க்குக் கம்பர், காளிதாசர் முதலியோரின் மேற்கோள்களை எடுத்துச் சொல்லும் வன்மையும் பெற்றிருக்கிறாள். என் அறையிலிருந்தே இவைகளை நான் பலதடவை கேட்டிருக்கின்றேன். அவள் நேராக என்னிடம் பேசாவிட்டாலும் அவளுடைய, அமிழ்தினுமினிய பார்வையிலும், மாசற்ற மனதிலும் என்னை ஒரு பொருட்படுத்தி வைத்திருக்கிறாள் என்பதை நான் அறிந்தேன். பால்யத்தில் நாங்கள் விளையாடினது போன்று மறுபடியும் எக் காலத்தில் இருவரும் கைகோர்த்து யாதொரு கவலையு மின்றி உலாவப் போகின்றோம் என்பதை அடிக்கடி நினைத்து நான் ஏங்குவதுண்டு. ஐயோ! இடையிலிருக்கும் சாஸ்திரத் தடைகளை மறந்தேனே; எப்புறமும் சாஸ்திரம் பயமுறுத்துகின்றதே! எது எப்படியாயினும் அழகில் மிக்க இம் மெல்லியலை இவ்வித பந்தங்களினின்றும் விடுவித்து அவளை மகிழ்விக்க வேண்டுவது எனது கடமை என்று நான் நினைத்தேன். ஆனால் அவள் தகப்பனார் ஓர் பெரிய உருத்திராக்ஷப் பூனை. என்



தாயின் மனத்தைப் புண்படுத்த என் மனம் பதறுகிறது. பாவியேன் என்செய்வேன். ஜாதி மதக்கட்டுக்குப் பயந்தேன். பகிஷ்காரத்திற்கு அஞ்சினேன். அறிவிலாக் கோழை ஆனேன்! ஏ! மானிடப் பதரே நீ ஏன் பிறந்தாய்! என்று மனம் நொந்தேன்.

பல தடவை என் கடமையைச் செலுத்த எனக்குப் போதிய மனோதிடம் தந்தருளுமாறு கடவுளை மனமாறத் துதித்தேன். இவ்விதமான அனாதைக் குழந்தைகளை ஆதரிக்க வேண்டாமா! கிளியை வளர்த்துப் பூனைக்கோ ஈவது? உலகத்திலுள்ள ஆடவரெல்லோரும் கைம் பெண்களைத் தவிர சின்னாட்களுக்கு வேறு எவரையும் ஏன் மணக்கிறார்கள் என்றுகூட நான் நினைத்தேன்.

ஒரு நாளிரவு வெள்ளிய சந்திரன், தனது குளிர்ந்த கிரணங்களைப் பரப்பிக் கொண்டு, உலகமெங்கும் பரம சந்தோஷத்தோடு அமைதி அமைந்து இருப்பதைத் தான் கண்ணுற்று மந்தகாசஞ் செய்வது போல் வானில் தோன்றினான். ஓர் ஓடையின் கரையோரத்தில் புழுங்கிய மனத்துடன் சந்தோஷமும் விசனமும் வெற்றியும் மனச் சோர்வும் சண்டையிடும் அகத்தோடு நான் அங்கு மிங்கும் உலாவிக்கொண் டிருந்தேன். இரவு சுமார் 12 மணி இருக்கும். புற்களின் நுனியில் பனி நீர் கூடியது. குளிரும் காற்றும் என்னைத் தீண்டினதாக எனக்குத் தெரியவில்லை. லோக அந்தத்தில் நான் நிற்பதாக எனது எண்ணம். விதியின் பயனை ஒருங்கே அடைய வேண்டும் அல்லது என்றும் மீளாத நரகத்திற்கு ஆளாக வேண்டும் என்று என் மனதுள் ஓலமிட்டுக் கொண்டே இருந்தது. திடீரென்று ஓர் வெள்ளிய மேகம், சந்திரன் கலைகளைச் சற்றே மறைத்தது. இயற்கைப் பசும்புற்றரையில் ஓர் நீல ஆடை போர்த்ததுபோலிருந்தது. அவ்விருளினின்றும் ஓர் உருவம் என்னை நோக்கி வருவதுபோல் தோன்றிற்று. எதிர் சென்று பாய்ந்தேன். அவளை என் கைகளில் தாங்கினேன். எங்கள் இருவர் மனமும் ஒருமித்தடிக்கக் கண்ட பின்னரே யாது நிகழ்ந்ததென்பதை யான் உணரலானேன். அவள் தலை என் மார்பில் பட அவள் கைகள் என்னை இறுகத் தழுவி நின்றன. தன்னை

மறந்த ஆனந்த நிமிடங்கள் இரண்டொன்று கடிதே கழிந்தன. அவள் மௌனமா யிருந்தாள். அவள் சொல்லை எதிர் பார்த்து யான் நின்றேன். "சுசீலம்! என் தாயின் அனுமதி பெற்றனையா? உன் மனம் அவ்வளவு திட்டத்திற்குப் 'பாத்திரமா யிருக்கிறதா? ஒரு வார்த்தை சொல். பிறகு நீ என் குல தெய்வமே யாவாய்" என்று சொல்லிக்கொண்டே அவளது அன்று அலர்ந்த மலரே போன்ற கன்னங்களில் எனது ஆர்வமுற்ற பல முத்தங்களிட்டு, சற்று அவள் தலையை உயர்த்தி அவள் இனிய பதிலைக் கேட்க ஆவலோடு, விழுங்கும் கண்களுடன் வருடி நின்றேன். அவள் மேனி ஜெகஜ்ஜோதியாய் விளங்கிற்று.

அந்தோ! என் ஆருயிரே! காரியம் முடிந்தது. என் தலையில் இடி விழுந்தது. என் மன்னரே! என் மனதிற்குகந்த வள்ளலே! இனி நாம் ஒருபொழுதும் ஒருவரை யொருவர் இப் பிறப்பில் சந்திக்க ஒண்ணாது. நாம் கடைசியாக இப்பொழுதே பிரிய வேண்டும். ஆ! என் மனந் தாழவில்லையே! மனம் உடைந்துபோம் போலிருக்கிறதே! என்று சொல்லிக்கொண்டே என் மேல் சாய்ந்து கண்ணீர் பெருக தன் இரு கைகளாலும் என்னைச் சுற்றிக் கட்டி நின்றாள்.

இவ் வார்த்தையைக் கேட்டதும் இடியுண்ட நாகம்போல் என் மனம் தளர்ந்தது. என் தாய் என்ன சொன்னாள் என்று பன்னிப் பன்னிப் பல முறை கேட்டேன். அவள் தன் மனதை ஒருவாறு சாந்தப்படுத்திக் கொண்டு, என் தாயினிடம் சென்றதையும், தன் மனதி லுள்ளதைச் சொன்னதையும், அதற்கு அவர் சாஸ்திரம் இடங்கொடாது என்று கடுமொழி சொன்னதையும், ஒன்றும் விடாமல் என்னிடம் பகர்ந்தாள். பின்னும் கண்ணா! உமது தாய் எனக்கும் தாயல்லவோ! அவர் மனதைப் புண்படுத்தியதற்காக நான் மிகவும் வருத்தப்படுகின்றேன். முன் பின் எதிர்பாராது செய் நன்றி மறந்தவளாக நடந்தேனே! ஆ! தெய்வமே!

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந் நன்றி கொன்ற மகற்கு" என்பது வள்ளுவர் வாக்கன்றோ? ஐயோ



ஏன் நான் இவ்வுலகில் பிறந்தேன். மூட வைதீக மார்க்க மல்லவோ போற்றி வளர்த்த சுசீலையின் மீதும் கூரிய அம்பனைய இம் மறுமொழி என் தாயின் வாயினின்றும் வரும்படி செய்தது? ஏ! குருட்டு மதக் கோட்பாடே, மதம் பிடித்த அநாகரீகமே என்று கூறிக் கொண்டு, எனது அருமைச் சுசீலமே அழாதே, அழாதே. தாயின் அனுமதி உண்டோ இல்லையோ, இனி நம்மைப் பிரிக்க எவராலும் இயலாது. பயப்படாதே நாளைக்கு நாம் இருவரும் இம் முரட்டு வைதீகமும், மூட ஆசாரப் பித்தும் பிடித்த இந் நாட்டை விட்டு அயல் நாடு செல்வோம். அன்றேல்.......இச் சொற்கள் அவள் காதில் பட்டதோ இல்லையோ, திடீரென்று அவள் என்னைவிட்டு விலகி நின்றாள். அவள் என்னைப் பார்த்த பார்வை இதுவரை காமன் கோவிலிலும் நான் காணாத காட்சியேயாகும். வெள்ளிய சந்திரனும் தன்னை மூடியிருந்த களங்கமாகிய மேகங்களினின்றும் விடுதலைபெற்றுத் தன் முழுப் பிரகாசத்தோடும் விளங்கினான் எனினும், சுசீலையின் வதனத்தின் வனப்பிற்குச் சந்திரன் எம் மாத்திரம்? அவள் கண்களில் தீப்பொறி பறந்தன. அவள் மார்பு விம்மியது.

கண்ணா! நான் அவ்வளவுதூரம் சுயநலம் கருதுபவளல்ல. நான் உமதுமேற் கொண்ட காதலினால் உம்மைத் தாங்கி நிற்பவளா மறந்து விடுவேன் என்று நினைத்தீரோ? என் மனம் புழுங்கும் காலத்தில் எனக்கு ஓர் ஆதரவாய் நின்று என் தாயைப் போல் என்னை நேசித்த உமது தாயின் மனதிற்கும் உலைவைப் பேனா? அயல் நாட்டில் நமது மணத்தைப்பற்றிச் சொன்னீர். சப்த சாகரத்தைத் தாண்டிச் சென்றாலும், நம்மை நேசிக்கிற தாயின் சாபம் என்மே லிருக்க, நான் சந்தோஷமாக அங்கு இருக்க முடியுமா? என்னுயிரே! ஒருபோதும் அப்படிச் செய்ய முடியாது. என் காதல் அவ்வளவு தாழ்ந்ததல்ல. உம்முடைய பரிசுத்தமான காதலும், உருவமும் என் மனதில் எப்பொழுதும் வேரூன்றி நிற்கும், ஆனால் என் கண்ணாளா! இனி நாம் ஒருவரை ஒருவர் சந்தித்தல் இயலாது. எல்லாம் வல்ல துர்க்கா தேவியின் முன் இந்தச் சபதத்தைச் செய்கிறேன், என்று வற்புறுத்தி வீராவேசத்தோடு சொன்னாள்.

எனதன்பே, அன்பின் வெள்ளமே, உம்மிடமிருந்து ஓர் வரம் வேண்டுகிறேன். என்னுடைய பரிதாபமான நிலையைக் கண்டு எனக்காகக் கண்ணீர் விடுத்ததுபோல் என்போன்ற சகோதரிகளுக்கும் பச்சாதாபப்பட்டு இப் புண்ணிய பூமியாகிய பரதகண்டத்தினின்றும் பெண்களுக்கு ஏற்பட்டிருக்கும் இப் பெருங் குறையை நீக்க வழி தேடுவீர்களென்று நம்புகிறேன். இஃதொன்றே நான் உம்மை வேண்டுவது. அது ஒன்றே என் காதலுக்கு இணை. பிறகு என்னைப் பற்றித் தாங்கள் கவலைப்பட வேண்டாம். எனக்கு முன்னதான என் போன்றவர்கள் எவ்வாறு கைம்மை நோன்பைக் கைசோராது கடைப்பிடித்துத் தம் வாழ்நாளைக் கன்னி கழியாமல் கழித்தனரோ அதேமாதிரி, நானும் உம்மை என் மனமாகிய கோவிலில் இருத்தி என் ஜீவியத்தை நல்வழிப்படுத்தி எம்பெருமான் பாதத்தை அடைகிறேன் என்று சிறுசொற் பொழிந்தாள்.

சுசீலை சொன்ன சொல் என் மனதைத் தளரச் செய்தது என்று சொல்லவும் வேண்டுமோ? "அப்படியாயின் இனி என்னுயிர் இப் பொல்லா உலகில் தங்காது" என்றேன். உடனே அவள் "தெய்வ சாட்சியாக, நீர் அப்படிச் சொல்லுதல் தகாது. கண்ணே! இனிய காதலரே! சுற்றிப் பாரும். கபடமில்லாத பெண்களைப் பிணித்திருக்கும் கட்டுகளெல்லாம் மெல்ல மெல்லக் கழன்று கிணீர், கிணீர் என்று விழுகின்ற சத்தம் தங்கள் காதிற் படவில்லையா? உம்மிடம் அரிய பெரிய காரியங்கள் செய்து முடிக்கும் வன்மையிருக்கிறது என்று நானறிவேன். நீரும் நானும் கூடி வாழும் இல்லற சுகத்தால், உம்மை நான் கட்டப் பிரியப்படவில்லை. உம்முடைய பரந்த மனம், அல்லலைப் பட்டுக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான பெண்களின் கஷ்டங்களை நிவர்த்திசெய்ய வல்லது என்பதை நினைத்து என் சுகத்தை ஒரு பொருட்படுத்தாது நம் உடல், பொருள், ஆவி மூன்றையும் அத்தகைய பரோபகாரத்திற்கு அர்ப்பணம் செய்யவேண்டும்" என்று வீரத்தன்மையோடு கூறினாள்.

உடனே காந்தத்தினால் இழுபட்ட ஊசி, காந்தத்தின் தன்மையை அடைவதுபோல் அவள் நல் உணர்வை நானும் அடைந்து



முழந்தாட் படியிட்டு "உலகத்திலுள்ள கஷ்டப்படும் என் சகோதரிகளுக்காக என்னை நான் அர்ப்பணம் செய்கிறேன் என்று எல்லாம் வல்ல தூர்க்கையின் முன் சபதம் செய்துகொண்டேன்".

"ஆசிபெற்ற ராஜா ராம் மோஹன்ராயின் ஆவி, உமக்கு முன் மாதிரியாக உம்முடைய பிரயத்தனங்களில் வழிகாட்டட்டும்" என்று சொல்லிக்கொண்டே சுசீலை என்னைவிட்டு வீடுநோக்கினாள். விரித்த கைகளுடனும், ஆவலுள்ள கண்களுடனும் "ஓ சுசீலா சுசீலா" என்று ஓலமிட்டேன். அவள் தன் கருணை பொழியும் கடைக் கண்களால் திரும்பிப் பார்த்து "நான் எனது சபதத்தை நிறைவேற்றச் செல்லுகிறேன், தாங்களும் அவ்வாறே செய்யுங்கள்" என்று சொல்லிக்கொண்டே விரைந்து சென்றாள்.

அது முதல் கிருஷ்ணன் மேடோ, பள்ளமோ, பட்டினமோ, குக்கிராமமோ ஒன்றும் விடாமல் நாடெங்கும் சென்று சென்று, தன் சுசீலையைப் போலொத்த ஆயிரக் கணக்கான பெண்களின் நிலைமையைச் சீர் படுத்தப் பிரயத்தனப் பட்டு வருகின்றார். சுயநலத்தைத் தியாகம் செய்யும் இத்தகைய பெரியோர்கள் இருக்கும் வரை நமது நாட்டிற்கு யாதொரு குறைவுமில்லை என்று நாம் சொல்லத் துணியலாம்.

—— ——

நன் நடக்கைக்கு முதல்படி தாழ்மை. தாழ்மையின்றிச் சுதந்திரம் அடைய ஆரம்பிப்பது ஆபத்தே. நாயன்மார்களும் ஆழ்வார்களும் கண்ட சுதந்திரம் பணிவிலிருந்தே அரும்பியது.

சுதந்திரத்திற்காகப் பாடுபடுபவர்கள் தாழ்மையை அஸ்திவாரமாகக்கொண்டு வேலை செய்யவேண்டும். பணிவிற்கும் அடிமைத்தனத்திற்கும் எவ்வளவோ தூரம். எவ்வளவோ வித்தியாசம்.

* * * *

அடிமை நாட்டில்தான் வாலிப இயக்கம் பலமாயிருக்கிறது. சமீபத்தில் விடுதலை பெற்ற தேசங்களே இதற்குச் சாட்சிகள். இந்தியாவில் புது இயக்கம் வளர்ந்துகொண்டு இருக்கிறது. காய்த்துக் கனிவதெந்நாளோ?

ரா. நா.

# மாதர் வாழ்க்கை.

ஸ்ரீமதி S. அரங்கநாயகி அம்மாள் அவர்கள்.

வாழ்க்கை என்பது காதலனும் காதலியும் கருத்து ஒருமித்து மனமொத்து நடத்தும் இல்வாழ்க்கையாகும். இல் வாழ்வைப்போல் இனிய வாழ்வு யாண்டும் இல்லை யாது மில்லை. இதுவே மாந்தரின் அறிவையும் ஒழுக்கத்தையும் பண்படுத்துகிறது. உலகில் பணம் படைத்தோர் பலர் இருக்கலாம். அன்னார் அரண்மனை போன்ற அழகிய மாளிகைகளில் வசிக்கலாம். ஆடைகளாலும் ஆபரணங்களாலும் அழகாய் விளங்கலாம். அருமையான வாகனங்களில் அங்குமிங்கும் உலாவி வரலாம். ஆனால் இவைகளினாலெல்லாம் அவர்கள் வாழ்வு நல்வாழ்வெனச் செப்ப இயலாது. கதிரவன் குடி புகும் நனை கவர்க் கூரைக் குடிசைகளில் வசிக்கும் ஏழையர் வறுமையாலும் வாடலாம். ஆடையின்றியும் அல்லற் படலாம். ஆனால் அவர்கள் வாழ்க்கை மனோகரமாகவே இருக்கலாம். அவர்கள் இதயத்தில் பரஸ்பர அன்பும் நற் குணங்களும் நிறைந்து ஆனந்த பரவசமடையலாம்.

பெண்மணிகளே! நம் இல்வாழ்வு நல் வாழ்வா யமைய வேண்டுமெனின் நமக்குள் கல்வி யபிவிருத்தி யடைய வேண்டும். பிற நாடுகளை நோக்கும்போது நம் நாட்டு ஆடவர் கல்வியில் மிகப் பிற்பட்டவர்களெனினும் அதினும் நம் சகோதரிகளின் நிலைமையே மிகப் பரிதாபகரமானது. நம் சென்னை மாகாணத்தில் 100-க்கு ஒருவர்தான் படித்த பெண்டிர் என்றால் நம் மனம் துடிக்கவில்லையா? நம் அருமையான அன்னையர்களை இந் நிலையில் இவ்வா



திருக்க விட்டுப்பார்க்கும் மக்கள், உலகில் உயர்ந்த அன்னையர் மாட்டு உதிக்கும் பிள்ளைகட்கு எவ்வாறு ஒப்பாக முடியும். நமது பண்டைப் பெருமையை நாம் பலவாறாய்ச் சொல்லிக்கொண்டிருப்பதில் யாதும் பயன் இல்லை. நம்மில் சிலருக்கு இதுவே வெகு பிரீதி. எழுத்து வாசனையற்ற மூடர்களும் தம் தந்தையரையோ பாட்டன்மாரையோ பற்றிப் புகழ்கிறார்கள். ஆனால் இவர்கள் பட்டும் அவ்வழியில் தினையளவேனும் சென்றார்களோ என்றால் அதுவுமில்லை. இதனாலன்றோ பாரதியார் 'மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை' என்றார்.

பேதமை என்பதையே அணிகலனாகக் கொண்டு நம் சகோதரிகள் பலர் இருக்கின்றார்கள். அவர்களை அநேக ஆண்டுகளாக ஆண்மக்கள் அடிமைப்படுத்தி வந்துள்ளார்கள். பெண்கள் மாயாரூபிகள், தாழ்ந்தோர்கள், பேய்கள், பிசாசுகள், வெறுக்கத் தக்கவர்கள் என்ற நினைவு பாமரர் மனதில் மட்டுமா பண்டிதர் மனதிலும்கூட ஊறி, ஊறி, ஊற்றுகளாகப் புஸ்தக ரூபமாகச் செய்யுள் ரூபமாக வெளிவந்துளது.

பண்டிதர்தான் என் செய்வர். காலநிலைக் கேற்றவாறு கவி பாடவேண்டியதுதானே அவரது வேலை. ஆடவர் நினைப்பதுமன்றி, அதையே பழகி அதையே கற்று அதையே நினைத்துவரும் நாமும் நம்மை நாமே தாழ்ந்தோரென நினைத்துக்கொண்டிருந்தோம்; நினைத்துக்கொண்டிருக்கிறோம். இக் கொடிய நோய் வாழையடிவாழையாய் விருத்தியடைந்து பெண்டிர் முன்னேற்ற மார்க்கத்தைத் தகைந்துவிட்டது. பெண்களாகிய நாமும் அறியாமையில் ஆழ்ந்துவிட்டோம். இதுபோது நாமும் கல்லாது நம் அருமைச் சிறுமிகளையும் அவ்வாறு கெடுப்பது நன்றன்று. பெண்கள் படித்தால் கெட்டுப் போவார்களென்றும் புருஷனுக்கு அடங்கி நடவார்களென்றும் கூறுவது அறிவுடைமை ஆகாது. இது மட்டுமன்றிப் பெண்கள் படித்தால் குடி விளங்காதென்று சொல்வதும் அதற்குப் பாமரப் பெண்கள், கற்றோரென்று தம்மைத்தாமே

மதித்திருக்கும் சிலரை உதாரணங் காட்டுவதும் விந்தையினும் விந்தையே! இப்படிப்பட்ட பெண்கள் தங்கள் வாழ்க்கை நலமடையக் கோடாங்கிகளையும் பூசாரிகளையும் சாமியாடிகளையும் குறி சொல்வோரையும் நம்பி அவர்கள் வாக்கே தேவ வாக்கு, அவர்களே தங்களுக்கு வேண்டிய பல வரங்களையும் கொடுக்க வந்த கடவுளின் தூதர் என எண்ணிக் கையிலுள்ள காசையும் கட்டியிருக்கும் துணியையும் கொடுப்பது என்ன பேதமை; எவ்வளவு அநியாயம். அல்லாமலும் ஷை ஆசாமிகள் நம்பிக்கை காட்டிப் பெண்களை வஞ்சிப்பதும் கிடைத்ததைச் சுருட்டிக் கொண்டு சமயம் பார்த்து நழுவிவிடுவதும் எவ்வளவு விபரீதம். இன்னும் பெண்களிடம் நிறைந்துள்ள மூட நம்பிக்கைகள் எண்ணத் தொலையுமோ! கல்வி என்னும் கதிரவன் ஒளி பட்டாலன்றி இவ் வஞ்ஞானக் காரிருள் நீங்குமோ?

உத்தியோகம் வகிக்கமட்டும் கல்வி வேண்டியதென எண்ணியிருப்பது மதியீனம். ஏனைய வீட்டு வரவு செலவு பார்த்தல், செட்டாகச் செலவு செய்தல், விருந்தினரை உபசரித்தல், குழந்தைகளுக்கு நற் புத்தி புகட்டிச் சன்மார்க்கத்திற் பழக்குதல், குடும்பத்திலுள்ள எல்லோர்பாலும் அன்பு காட்டிக் குடும்பத்தை ஐக்கியமாய் நடத்தல் முதலிய இன்றியமையா விஷயங்களுக்குக் கல்வி அவசியமல்லவா? ஜன சமூக அமைப்புக்கு ஆதாரமாயிருக்கும் தாய்மார் நிலை உயர்ந்தால் தேச நிலை தானே உயரும். பெண்டிர் முன்னேற்றமில்லாத ஒரு நாட்டைப் பெரு நோய் பிடித்த நாடென்றே சொல்லலாம். ஏன்? அந் நாட்டிற்குப் பலமில்லை. கல்வியில்லை. அறிவில்லை. ஆற்றலில்லை. சுதந்தரமில்லை. சுகமில்லை. கலைமகளைப் பெண் எனப் பேசும் பெரியோர்களே! பெண் கல்விக்காக நீங்கள் என்ன செய்தீர்கள்? ஆண் மக்களே! நீங்கள் இதுகாலை பெண்டிர் முன்னேற்றத்திற்குப் பெரும் பாடு படல் வேண்டும். ஜனத் தொகையில் சரிபாதியான பெண்டிரை அறியாமையில் ஆழ்த்திவிட்டு ஆண்களாகிய நீங்கள் எவ்வாறு ராஜீய சமூகத் துறைகளில் முன்னேற முடியும். பெண்ணுக்கு ஆண்டவன் அறிவை அளிக்காமலில்லை. அந்த அறிவை வளர்க்காமற் கெடுப்பது அறிவுடைமை யாகாது. இதைப் பாரதியார் பெண்



ணுக்கு ஞானத்தை வைத்தான் புவி பேணி வளர்த்திடு மீசன், இந்த மண்ணுக்குள்ளே சில மூடர் நம் மாதரறிவைக் கெடுத்தார், எனக் கூறியுள்ளார். சிறு பாவங்களையும் செய்ய அஞ்சி, அப்படிச் செய்தாலும் காசி, இராமேஸ்வரம் சென்று புண்ய தீர்த்தமாடிப் புரோகிதருக் கீந்து பிராயச்சித்தம் செய்து கொள்வதில் அவ்வளவு அக்கறையுள்ளவர்கள் பெண்களுக்குத் தீங்கு செய்யும் பெரும் பாவத்தால் ஆழ்ந்திருக்கிறோமென்பதைக் கனவிலும் கருதுவதில்லை போலும். இப் பாவத்திற்கு வேறு விமோசனம் இல்லை இல்லை. இனிப் பெண்கள் முன்னேற்றத்தில் பெரிதும் தலையிட்டு உழைத்தலே இதனின்று தப்பிப் பிழைக்கும் வழியாகும். பெண்களுக்குக் கல்வி புகட்டுவதிலும் பழக்க வழக்கங்களில் பயிற்றுவதிலும் பிற நாட்டினரையே பின் பற்றுவது கூடாது. ஆனால் அவர்கள்பாலுள்ள அறிவுடைய நற் பழக்க வழக்கங்களை மட்டும் கைக்கொள்ளல் நன்றேயாம். ஒரு நாட்டு மொழிக்கும் பழக்க வழக்கங்களுக்கும் பெரிதும் சம்பந்தம் உண்டு. அதனால் பெண்டிருக்கு நாட்டு மொழிப் பற்று அதிகம் வேண்டும். நாட்டு மொழிப் பற்றே நாட்டின் நலத்தை மனத்தில் நாட்டும், ஊக்கம் ஊட்டும், ஆக்கங் காட்டும். ஆதலால் பெண்மணிகள் நாட்டு மொழியைப் பெரிதும் பேணல் வேண்டும். பெற்றோர்கள் பெண்களைப் படிப்பிக்கிறோமென்று எழுத்துக்களை மட்டும் சிறுமிகளுக்குக் கற்பித்துவிடுதல் கல்வியாகாது. பத்திரிகை உணர்ச்சி, உலக விவகாரங்களை அறியும் அறிவு, பண்டை நூற்களைப் படிக்கும் ஆவல் ஆகிய இவைகள் ஏற்படும் வரையாவது அவர்களிடம் கல்விப் பயிரை வளர்த்தல் வேண்டும்.

சகோதரிகளே! தாய்மார்களே!! இன்றுள்ள உங்கள் நிலையைச் சிந்தியுங்கள். உங்கள் விடுதலைக்கு ஊக்கமாக உழையுங்கள். மூலையில் இருந்து முணுமுணுத்து வீண் காலம் போக்குவதை விட்டு நியாயமான, ஒழுக்கமான விஷயங்களில் தைரியமாக முனைந்து முன் வாருங்கள். கல்விக்காக—ஒழுக்கக் கல்விக்காக, மூடப் பழக்க வழக்க விடுதலைக்காக முனைந்து முன் வாருங்கள் இதுவே உங்கள் வாழ்க்கையை நல் வாழ்வாக்கிச் சமத்துவம் சகோதரத்வம் என்னும் பேறுகள் நல்கி நாட்டுக்கும் நன்மை பயப்பதாகும்.

# ஐக்கிய நாணயச் சங்கம்.

திருவாளர் வி. மாதர்பூதம் ஐயரவர்கள், B.A.,

19-வது நூற்றாண்டில் உலகில் தோன்றிய புதுமைகளில் ஐக்கிய இயக்கமும் ஓர் முக்கியமானதே ஆகும். ஆதியில் ஜெர்மனியில் ஒரு சிறிய கிராமத்தில் ரெய்பீசன் அவர்களால் ஏற்பட்ட ஒரு சங்கமானது, அதி சீக்கிரத்தில் உலகம் முழுதும் பரவி, ஒரு பெரிய ஆலமரம் போல் அதனடியில் வருவோரனைவர்க்கும் குடையாகவிருந்து நிழல் தந்து பாதுகாத்து வருகிறது. மேல் நாடுகளில் பாமர ஜனங்களுக்கிருக்கும் பலவித பொருளாதார, சமூக நோய்களுக்கு இது வோர் அரிய மருந்தாகிச் சௌக்கியம் செய்திருப்பதின் காரணத்தை முன்னிட்டு 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பலவிதத்திலும் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கும் இப் பாரத தேசமக்களுக்கு உபகாரமாய் 1904-ம் வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் சஞ்சீவியாகிய ஐக்கிய மருந்தை இந் நாட்டிற் சட்ட ரூபமாக ஸ்தாபித்தார்கள். ஐக்கியம், கூட்டுறவு, சகோதரத்தன்மை ஆகிய இக் குணங்கள் ஜனங்களுடைய மனப் பான்மையிலேயே பதிந்து கிடப்பதால் 25 வருஷத்திற்குள் இவ் வாலவிருக்ஷம் போன்ற ஐக்கிய இயக்கம் பாரத தேசத்தில் பரவி தற்காலம் ஒரு லக்ஷம் சங்கங்களாகத் தழைத்து விளங்குகின்றது. இவ் வைக்கிய சங்கங்களுக் கெல்லாம் பிரதானமானதும், மரத்திற்கு ஓர் ஆணி வேர் போன்றதும் நாணயச் சங்கமே. இதன் குணதிசயங்களைப் பற்றி ஈண்டுச் சிறிதே குறிப்பிட வேண்டியது எனது இன்றியமையாக் கடமையே யாகும்.

விவசாயிகள், கைத்தொழிலாளிகள் ஆகிய சொற்ப வருமானமுள்ளவர்களுக்குள், சிக்கனம், சுய உதவி, கூட்டுறவு ஆகிய இவைகளை விருத்தி செய்து இதனால் விவசாயமும் வியாபாரமும் விருத்தியாக வேண்டிய பல வித ஒத்தாசைகள் புரிய அவைகளுக்கு முக்கியமாய்ப் பணம் கொடுத் துதவ வேண்டுவதே இச் சங்கத்தின் பிரதான நோக்கமாகும். ஒருவர் பலருக்கும், பலர் ஒருவருக்குமாகப் பரஸ்பரம் ஒத்தாசை செய்வதே இதன் சூக்ஷமம். பொதுவாய் ஏழை மக்களுக்காக அவர்கள் படும் பல வித கஷ்டங்களுக்குப் பொருள் சேர்த்துக் கொடுக்கும் எண்ணத்துடன் ஏற்பட் டிருப்பதால், இச் சங்கங்களை அமைத்திருக்கும் சட்டமானது யாவரும் அறியும்படியாய் இலகுவாய் அமைக்கப் பட்டிருக்கிறது.



இச் சங்கத்தில் ஜாதி, மத அபிப்பிராய வித்தியாசங்களுக்கு இடமில்லை. சர்வ ஜனங்களுக்கும் உபயோகப் படும்படியாய்ப் பரோபகார எண்ணத்துடன் ஏற்பட் டிருக்கிறது. இச் சங்கத்தில் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவரும் அங்கத்தினர்களாய்ச் சேரலாம். ஏழை என்று விலக்கு இல்லை. பணக்காரர் என்று மேன்மையும் இல்லை. நாணயமும், நன் னடக்கையு முள்ளவர்கள்தான் தேவை. ஆகையினால் பிடித்தமில்லாத நடத்தை யுள்ளவர்களைச் சேர்க்காமலும், சேர்த்து விட்டால் சேர்ந்திருப்பவர்களை விலக்கி விடவும் சட்டம் இடம் கொடுக்கிறது.

இச் சங்கமானது அதிற் சேர்ந்திருக்கும் அங்கத்தினர்களுக்குத் தான் சொந்தம். ஆகையால் ஒவ்வொரு அங்கத்தினரும் தான் சங்கத்தில் சேரும் பொழுது அதில் ஒரு பங்காவது எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

இச் சங்க சமுதாயத்தில் எல்லோருக்கும் சம வாக்குரிமையுண்டு. இதுவே இதின் உயர்ந்த தத்துவம். இக் காலத்தில் எங்கும் தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும், மிராசுதார்களுக்கும் குடியானவர்களுக்கும், உயர்ந்த வகுப்பாருக்கும் தாழ்ந்த வகுப்பாருக்கும், ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கு மிருக்கும் ஏற்றத் தாழ்வை உடைத்து எல்லோரும் ஒன்றென்னும் பரம ரகசியத்தை நிலை நாட்டியிருப்பது இச் சங்கமே.

இதில் சேர்ந்திருக்கும் அங்கத்தினர்களுக்குச் சிக்கனம் பயிலுமாறு சங்கத்தில் பலவித டிபாசிட்டுகள் ஏற்படுத்தி அவரவர்கள் சக்திக்கு ஏற்றவாறு வாழ் நாட்களில் வரும்படியைப் பெருக்கியும், வீண் செலவுகளைக் குறைத்தும மீதப்படும் பணங்களைப் போட்டு வைக்குமாறு சௌகரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

மேலும் அவரவர்களுக்கு வேண்டிய பல் வேறு செலவுகளுக்கு சுய உதவியாலேயே எல்லோருக்கும் வேண்டிய பணங்களைச் சேகரித்து ஒத்தாசை செய்து கொள்வதற்கு அரிய வழி யொன்று இச் சங்கம் கற்பித்துக் கொடுத்திருக்கிறது.

இச் சங்கத்தில் வாங்கும் கடன்களெல்லாம் உபயோக கரமான காரியங்களுக்கு மாத்திரமே வழங்கப்படும். இக் கடன்கள் விவசாயத்திற்கும், வியாபாரத்திற்கும், அவசியமான குடும்பச் செலவிற்கும் அவரவர்கள் மீதம் செய்யக் கூடும் சக்தியை அனுசரித்துக் கொடுக்கப்பட வேண்டும். கடனின் பழுவையும், தீமையையும் குறைத்து அதனால் வாழ்க்கைக்குப் பிரயோஜனப் படுத்துவதே கூட்டுறவுக் கடன்களின் முக்கிய அம்சம்.

இக் கடன்களெல்லாம் அவரவர்களால் சௌகரியம் போல் திருப்பிக் கொடுக்கும் காலத்தை அனுசரித்துக் கொடுக்கப்படும். எவற்றினும் நாணயமே பெரிதாகையால் அங்கத்தினர்கள் குறித்த காலத்தில் கடனைத்திருப்பிக் கொடுப்பதை வற்புறுத்தப் படுவார்கள். ஒருவரது சொந்த லாபத்தை மட்டும் உத்தேசித்து ஏற்படாததால் இச் சங்கத்தில் வழங்கும் கடன்களின் வட்டி மிகக் குறைவாகவும், நாடெங்கும் ஒரே விதமாயுமிருக்கிறது. நின்ற நாளைக்கும், நின்ற தொகைக்குமே வட்டி கணக்கிடப்படும். தவணைப் பிரகாரம் கொடுக்கல் வாங்கல் செய்து வந்தால் சங்கம் லாபத்திலேயே நடந்து வரும். தவணை தவற விட்டால் நஷ்டமேற்படுவதுடன், நாணயக் குறைவு மேற்பட்டுச் சங்கத்திற்குக் கெட்ட பெயருண்டாகும். இச் சங்கம் ஒரு கூட்டு வியாபாரத்தை ஒத்திருக்கிறது. இதன் லாப நஷ்டம் இதில் சேர்ந்திருப்பவர்களை அவரவர்களெடுத்திருக்கும் பங்கு அளவைச் சார்ந்திருக்கிறது. எல்லாப் பங்குக்காரர்களும் ஒரே மனதாய் ஒத்துழைத்து வேலை செய்து வந்தால் சங்கம் நல்ல பெயருடன் மேன்மேலும் பெருகிய லாபமடைந்து எல்லோருக்கும் உபயோகமா யிருந்து வரும்.



கூட்டுறவின் தத்துவத்திற்கேற்ப, இச் சங்கத்தின் விவகாரங்கள், எல்லா அங்கத்தினர்களும் கூடிய மஹா சபையாரால் நடத்தப்படும். ஆனால் எக்காலத்திலும் எல்லோரும் கூடியே காரியங்கள் செய்வது அசாத்தியமானதால் வருஷத்துக்கொரு முறை மஹா சபையாரால் தங்களுக்குள் வயது முதிர்ந்து, விவகாரங்களில் தேர்ச்சியடைந்து, பொதுக் காரியங்களில் ஈடுபட்டுச் சுய லாபத்தைக் கருதாமல், ஜனங்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்ட பஞ்ச ரத்னங்கள் போன்ற ஐவர்களே பஞ்சாயத்தார்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் இவர்களே தங்களுக்குள் ஒரு அக்கிராசனரையும், ஒரு காரியதரிசியையும் ஏற்படுத்திக் கொண்டு சகல காரியங்களையும் நடத்தி வருஷ முடிவில் தாங்கள் செய்த வேலைகளை மஹா சபையாரிடம் கணக்கு ஒப்பிப்பார்கள்.

இது மட்டுமா! எப்படி எப்படி அங்கத்தினர்களுக்குப் பயன் படச் சங்கமேற்பட்டதோ அதேமாதிரி சங்கங்களுக்குப் புத்திமதி கூறி மேற்பார்வை புரிய யூனியனும் ஏற்பட்டு எல்லாச் சங்கங்களுக்கும் வேண்டும் போது பணமுதவி புரிய ஜில்லா மத்தியஸ்தானத்தில் மத்திய பாங்கும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாங்கில் எல்லாச் சங்கங்களும் நன்றாய் வேலை செய்யக் கடமைப் பட்டிருக்கின்றன. கோபுரம் போல் படிப்படியாய் ஐக்கிய ஸ்தாபனங்களேற்பட்டிருக்கின்றன. யூனியன்களை ஒழுங்கு படுத்த ஜில்லா பெடரேஷன்களும், பாஷாபிமான மேற்பட்ட இக் காலத்தில் நாட்டிற்கு ஒரு பெடரேஷனும், மாகாணத்திற்கு ஒரு யூனியனும், எல்லாவற்றிற்கும் மேல் அகில இந்தியாவிற்குமே ஒரு ஐக்கிய கமிட்டியும் சமீபகாலத்திலேற்பட்டிருக்கிறது. ராஜீயத்திற்குச் சர்வ தேச சங்கமிருப்பது போல ஐக்கிய இயக்கத்திற்கும் ஒரு சர்வ தேச சங்கம் வெகு நாளாய் ஏற்பட்டு அநேக தேசத்தார்களைச் சகோதரத் தன்மையினாலேயே ஒற்றுமைப்படுத்த அரிய அரிய தொண்டு புரிந்து கொண்டு, வருஷத்துக்கொரு தடவை விசேஷக் கொண்டாட்டமும் நடத்தப்பட்டு வருகிறது.

கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் காரியங்களைச் சரிவர முறைப்படி நடத்தி வந்தால் வருஷ முடிவில் இலாபமேற்படு மென்பதற்கு ஐயமில்லை. அரசாங்கத்தார் தங்கள் எண்ணத் தொலையாச் சிப்பந்திகளைக் கொண்டு ஒரு செலவுமின்றி ஒவ்வொரு சங்கத்தையும் வருஷ முடிவில் கணக்குகளைத் தணிக்கை செய்து அவைகள் சம்பாதித்த லாபத்தில், ஒரு பாகத்தை அச் சங்கத்தின் க்ஷேமத்தைக் கருதி க்ஷேம நிதியாகச் சேர்த்தும், ஒரு பாகத்தைப் பொது நலத்திற்காக ஒதுக்கியும் சில நகர சங்கங்களில் ஒரு பாகத்தைக் கூட்டப் பண்டிற்குச் சேர்த்துக் கொடுத்தும், மீதியைப் பங்கெடுத் திருப்போர்க்கு அவரவர்கள் போட்டிருக்கும் பணத்திற்கு வட்டியும் கொடுத்துவரப் படுகிறது. இம்மாதிரி சேர்க்கப்படும் பொது நலப் பண்டினால் அநேக கிராமங்களில் கிணறுகள் வெட்டியும், லாந்தர்கள் போட்டும், குளங்கள் மராமத்துச் செய்யப்பட்டும், பள்ளிக்கூடங்கள் வாசக சாலைகள் நடத்தியும், வியாதியஸ்தர்களுக்கு மருந்து கொடுத்தும் உதவப்பட் டிருக்கின்றன.

சங்கத்தில் நடக்கும் எல்லாக் காரியங்களும் பகிரங்கமாகவே பொது இடங்களில் கூட்டங்கூடி நடத்தப்படும். வெறும் பேச்சுடன் நில்லாது நடவடிக்கைகள் மீட்டிங் புஸ்தகத்தில் எழுதப்பட்டு வர வேண்டும். ரஹஸ்யமான நடத்தை யில்லாததால் இச் சங்கங்களில் உண்மையே பேசப்படும். தாக்ஷண்யம் இச் சங்கத்தின் நடத்தைக்கு விரோதி யாகும். ஆகையால் யாரும் கூசாமல் உண்மை பேசிச் சத்தியத்தை நிலை நாட்ட வேண்டும்.

இச் சங்கங்களுக்காக ஏற்படுத்தப் பட்டிருக்கும் விதிகள் சௌகரியம் போல் நீட்டவும், குறுக்கவும் தடாகத்தில் தாமரை யிலைபோல் அமையும். கிராமத்திற் கொரு சங்கமும், நகரங்களில் போதிய சங்கங்களும் குறித்த எல்லைக்குள் ஸ்தாபித்துக் கொண்டு, ஜனங்களுக்குப் பயன் படுமாறு வேலை செய்து வரலாம். கேவலம் நாணய லேவாதேவியுடன் நில்லாது, எல்லாச் சங்கங்களிலும் அங்கத்தினர்களின் சௌகரியத்திற்காகவும், நடு மனிதர்களின் லாபத்தைத் தவிர்த்து அந்த ஆதாயத்தை அனைவரும் அடையும்படி அவரவர்களுக்கு வேண்டிய சாமான்களைக் கூட்டாக வாங்கவும், தங்கள் தங்கள் விளை பொருள்களைக் கூட்



டாக விற்கவும் ஏற்பாடுகள் செய்து கொள்ளச் சங்கத்தின் சட்டம் இடந் தருகிறது.

இவ்வித சௌகரியங்க ளெல்லாம் இச் சங்கத்தில் பொது ஜனங்களுக்காக ஏற்பட்டிருப்பதால், அதை நன்றாய் நடத்துவது அவர்கள் பொறுப்பே யாகும். பொறுப்பை உணராதவர்கள் சங்கத்தை நடத்தினால், குட்டையைக் குழப்பின எருதைப் போல் ஒருவருக்கும் பயன் படாமல் செய்து விடுவார்கள். ஆகையினால், ஆட்டுக் கிடைக்குள் வேஷம் போட்டுக்கொண் டிருக்கும் நரியைப் புக விடாமலிருப்பவர்களே புத்திசாலிக ளாவார்கள்.

இச் சங்கங்களுக்கு அரசாங்கத்தார் செய்திருக்கும் சௌகரியங்கள் பல. பத்திர ஸ்டாம்பு செலவு, ரிஜிஸ்டர் கட்டணம், வருமான வரி இவைகளை வஜா செய்தும், அனியாயமான கோர்ட்டுச் செலவுகளில்லாமல் சங்கத்தின் சார்பான வியாஜ்ஜியங்களைச் சிறிதேனும் செலவன்னியில் மத்தியஸ்தர்களைக் கொண்டு சீக்கிரத்தில் தீர்ப்புச் செய்து, சர்க்காருக்குச் சேர வேண்டிய நில வரியைப் போல் அவைகளை வசூலித்துக் கொடுக்கச் சட்ட ரூபமாய் ஏற்பாடுகளும் செய்திருக்கிறார்கள். இதுவுந் தவிரச் சர்க்கார் வேறு சில சௌகரியங்களும் செய்து கொடுத்து, நாணயத்தை ஆதாரமாயில்லாத இதர பல் வேறு விதமான சங்கங்களையும் ஸ்தாபித்துக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் மேன்மேலும் சௌகரியங்கள் செய்யவும் கடமைப்பட் டிருக்கின்றார்கள்.

இந்தியாவில் ஐக்கிய இயக்கம் இவ்வளவு சீக்கிரத்தில் பரவியது அரசாங்கத்தார் உதவியாலும், ஜனங்களின் பேருதவியாலுமே யாகும். அநேக படித்த கனதனவான்கள், தங்கள் வாழ் நாட்களில் தேசத்தாருக்குத் தொண்டு செய்து பாமர ஜனங்களுக்கு எவ்வெவ் வகையிலும் ஒத்தாசை செய்து அவர்களை உயர்த்தக் கருதி நாடெங்கும் வேலை செய்து வருகிறார்கள்.

மிகவும் பிற்போக்கா யிருந்த அயர்லாந்து, டென்மார்க்குப் போன்ற தேசங்கள் கூட்டுறவு இயக்கத்தினால் வெகு விரைவில் தலை நிமிர்ந்து அனைவரும் புகழும்படியாய் வேலை செய்து வரும் இந்நாளில்,

# விவசாயம்.

திருவாளர் A. நடேசபிள்ளை அவர்கள்.

இவ் விந்தியா மற்ற தேசங்களைப் போலல்லாமல் நீர் வளம் நிலவளம் மலை வளங்களிற் சிறந்தது என்பது எவருக்கும் நன்றாகத் தெரிந்த விஷயம். இவ் விந்தியாவாசிகளில் 100-க்கு 71 பேர்கள் கிருஷி தொழிலால் ஜீவனஞ் செய்பவர்கள் என்று சென்ற 1921வரு சென்ஸஸ் கணக்கினால் தெரிகிறது. 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந் தொழுதுண்டு பின் செல்பவர்'' என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் திருவாய் மலர்ந் தருளியபடி எவருக்கும் தாழ்

உலகம் தோன்றின நாள் முதல் வெகு நேர்த்தியா யிருந்து வந்து தற்காலம் பல விதத்திலும் பல பிணிப்பட்டுப் பிற்போக்கா யிருக்கும் இப் பாரத பூமியில் எல்லோரும் ஒருங்கே சேர்ந்து ஐக்கிய ஸ்தாபனங்களின் மூலமாய் நம்முடைய பல வித குறைகளையும் தீர்த்து ஒற்றுமையா யிருந்து பண்டைச் சிறப்பை மறுபடியும் தேசத்தில் நிலை நாட்ட வேண்டி எல்லோரும் பாடுபடல் வேண்டும்.

"எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்''.

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தார்பின் நமக்கெது வேண்டும்''.

—பாரதி.

---



ந்து நடவாமல் மிகச் சந்தோஷமாகவும் சுயேச்சையாகவும் செய்யக்கூடியது இக் கிருஷித் தொழில் ஒன்றே. மிகுந்த செல்வத்தைக் கொடுக்கக்கூடியதும் இதுவே. அன்னிய நாட்டார் இத் தொழிலால் கோடிக் கணக்கான திரவியங்களைச் சம்பாதித்து குபேரனைப் போல் வாழ்கிறார்கள் அவர்கள் தற்காலம் உன்னத ஸ்திதியி லிருப்பதற்கு முக்கிய காரணங்கள் மூன்று. (1) கிருஷி, கைத்தொழில் சாஸ்திரங்களைப் பள்ளிக்கூடங்களில் மிகுதியாகக் கற்பித்தல். (2) கிருஷி தொழிற் கைத்தொழிற் சாலைகள் பற்பல விடங்களில் ஏற்படுத்தி நவீன நாகரீகப்படி அத் தொழில்களைச் செய்து பொது ஜனங்களுக்குக் காண்பித்தல். (3) கிருஷி கைத்தொழில்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியதற்காக அனேக விடங்களில் பாங்குகளை ஏற்படுத்தி மிகவும் சரசமான வட்டிக்குக் கடன் கொடுத்து ஜனங்களின் சௌகரியப்படி பல வருடங்களில் சிறுகச் சிறுக முதல் தொகைகளை வசூலித்தல்.

ஆகையால் நம் தேசத்தவர்கள் நன்னிலைமைக்கு வருவதற்குக் கிருஷி கைத்தொழிற் சாஸ்திரங்கள் ஆங்கில முதலிய அன்னிய பாஷைகளிலுள் ளனவற்றை இலேசான தமிழ் நடையில் மொழி பெயர்த்து நான்காவது ஸ்டாண்டர்டு வகுப்பு முதல் ஸ்கூல் பைனல் கிளாஸ் வரையிலுள்ள மாணுக்கர்கள் அவரவர்களின் புத்தி நுட்பங்களுக்குத் தக்கபடி வாசிக்கத் தக்கதாகப் பற்பல வகைப் புத்தகங்களை அச்சிட்டு அவைகளை நாம் நம் நாட்டுப் பள்ளிக்கூடங்களில் கட்டாயப் படிப்பாக்க முயல வேண்டும். வாரம் ஒன்றுக்கு எட்டு மணி நேரமாவது அவைகளை வாசிக்கச் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு தாலூக்காவிலும் ஒன்று அல்லது பல விடங்களில் கிருஷி சோதனைச் சாலைகள் ஏற்படுத்திப் பற்பல வகை நஞ்செய் புஞ்செய் தோட்டக்கால் பயிர்களை நவீன நாகரீகப்படிக்கும் சாஸ்திரப்படிக்கும் செய்து அதனால் கிடைக்கக் கூடிய இலாபங்களைப் பொது ஜனங்களுக்குக் காட்ட வேண்டும்.

நமது கவர்ன்மெண்டாரவர்கள் சமீப காலத்தில் ஆறு கோடி ரூபாய் மூலதனத்துடன் கிருஷி பாங்க் ஒன்று சென்னையில் ஏற்படு

த்தி யிருக்கிறார்கள். அது நம் தேசத்தவர்களின் தரித்திர நிலைமைக்குப் போதுமானதல்ல. ஒவ்வொரு தாலூக்காவிலும் பல விடங்களில் ரெவினியு இனிஸ்பெக்டர் ரேஞ்சு ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கிருஷி பாங்க் ஏற்படுத்த வேண்டும். அந்தந்த ரெவனியு இன்ஸ்பெக்டர் ரேஞ்சில் எவ்வளவு சர்க்கார் கிஸ்தி வசூலிக்கப்படுகிறதோ அதற்கு மூன்றிலொரு பங்குக்குக் குறையாத தொகை அந்த பாங்குக்கு மூலதனமாக வைக்க வேண்டும். அந்தந்த ரேஞ்சிலுள்ள தனவந்தர்கள் அவர்களின் தொகைகளை அந்தக் கிருஷி பாங்குகளில் வட்டிக்குப் போட்டால் அத்தொகைக்கு வருமான வரி கிடையாது என்ற சட்டம் ஏற்படுத்தச் செய்ய வேண்டும்.

விவசாயிகள், கிருஷி தொழில் செய்வதற்கு வருஷப் பிரதி வருஷம் எவ்வளவு கடன் வேண்டுமென்பதை அவர்கள் தாசில்தாருக்கு அந்தந்தக் கிராம முனிசீப் மூலமாக விண்ணப்பஞ் செய்து கொள்ளும்படிக்கும் தாசில்தார்கள் நேரிலாவது ரெவினியு இன்ஸ்பெக்டர்கள் மூலமாயாவது நில ஸ்வான்தார் கடன் கேட்கும் தொகை கிருஷித் தொழில் செய்வதற்கு அவசியமானதா வென்பதைத் தீர விசாரித்துத் தெரிந்து கொண்டு தணிந்த வட்டிக்கு அதாவது 100-க்கு ௵ 1-க்கு 7 அல்லது 7½-க்கு மேற்படாத வட்டிக்கு கிருஷி பாங்குகளில் கடன் கொடுக்கும்படிக்கும், சட்ட திட்டங்கள் ஏற்படுத்தச் செய்ய வேண்டும். இவ்விதம் கடன் கொடுபடும் தொகை அந்தக் கிருஷி தொழிலுக்கே செலவழிக்கப்பட்டதா வென்பதை ரெவினியு இன்ஸ்பெக்டர் முதலிய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மூலமாக விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்விதம் செலவாகாதிருந்தால், தகுந்த சிக்ஷை விதிகள் ஏற்படுத்த வேண்டும்.

இந்தக் கிருஷி பாங்குகளில் கொடுக்கும் கடன்களுக்கு வட்டி மட்டில் வருஷப் பிரதி வருஷம் சர்க்கார் கிஸ்தியுடன் சேர்த்து வசூலிக்கும்படிக்கும், முதல் தொகையை பட்டாதார்களின் சௌகரியப்படி பல கெடுக்களில் கொடுக்கும் படிக்கும் தஸ்தாவேஜுகள் எழுதி வாங்க வேண்டும். நஞ்செய் புஞ்செய் தோட்டக்கால் பயிர்கள் நவீன நாகரீகப்படிக்கும் சாஸ்திரப்படிக்கும் செய்ய வேண்டிய முறை துறைகளைச் சிறு சிறு புத்தகங்களாகவும், துண்டுப் பத்திரிகைகளாகவும்



கவர்ன்மெண்டாரவர்களின் செலவில் அச்சிட்டு அவைகளை ஒவ்வொரு கிராமத்துக்கும் அனுப்ப வேண்டும். அவைகளை அந்தந்தக் கிராமம் கர்ணம் கிராம முனிசீபுகள் பட்டாதார்களுக்கும் பயிரிடும் குடிகளுக்கும் வாசித்து விஷயங்களை எடுத்துச் சொல்ல வேண்டியதுடன், துண்டுப் பத்திரிகைகளை இனாமாகவும், புத்தகங்களை சரசமான விலைக்கும் கொடுத்து வரும்படிக்கும் சட்ட திட்டங்கள் ஏற்படச் செய்ய வேண்டும்.

நில ஸ்வான்தார்களும், குடிகளும் சர்க்கார் கிஸ்திக்கும் குடும்பச் செலவுகளுக்கும் தங்களின் மகசூல்களைத் தணிந்த விலைக்கு விற்று மிகுந்த கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள். அந்த மகசூல்களை இந்தக் கிருஷி பாங்குகளில் ஈடாக வைத்துக் கடன் வாங்கலாமென்றும், அவைகளைச் சிறுகச் சிறுக விற்று அக் கடன்களை அடைக்கலா மென்றும் சட்டங்களை இயற்றுவிக்க வேண்டும்.

இந்தியாவாசிகளுக்கும் மிகக் கேடான நிலைமையிலிருந்த ஜெர்மனி தேசத்தார் மேற் கண்ட ஏற்பாடுகளினால் தகுந்த நன்னிலைமைக்கு வந்திருப்பது இவ்வுலகறிந்த விஷயம்

மேலே சொன்ன சாஸ்திரக் கல்வி, கட்டாயப்படிப்பும், கிருஷியும் சோதனைச் சாலைகளும், கிருஷி பாங்குகளும் அவைகளுக்குரிய சட்டங்களும் தென்னிந்தியாவில் ஏற்படும் பட்சத்தில், நில ஸ்வான்தார்களும் குடிகளும் சாஸ்திரப்படி தக்க பயிர்களைச் செய்து ஏராளமான மகசூல்களை யுற்பத்தி செய்து தகுந்த விலைக்கு விற்று தக்க தனம் சம்பாதிப்பார்கள். நம்மிந்தியாவில் ௵ 1-க்கு நூறு கோடி ரூபாய்க்கு மேற்கொண்ட தொகைக்கு அன்னிய நாட்டுப் பருத்தி நூல் துணி, சக்கரை இவை இறக்குமதி செய்யப்படுவது நாளடைவில் நின்று விடும். நம் தேச விளை பொருள்களும் கைத் தொழிற் சாமான்களும் அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அபரிமிதமான லாபங்களை அடையலாம். நம் தேசம் சுயாட்சி பெறுவதற்கு இவ்வித ஏற்பாடுகள்தான் ஆணி வேராகு மென்பதை ஆழ்ந்து யோசித்து அதற்குரிய ஏற்பாடுகள் செய்பவர்கள்தான் சரியான தேச பக்தர்கள் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

# விவேகானந்த சுவாமிகள்.

ரா. நாராயணசுவாமி,
ஆசிரியர், "பாரதி."

## முகவுரை

மண் பெண் பொன் ஆகிய மூவாசைகளையும் முற்றத் துறந்து, உடல் பொருள் ஆவி மூன்றையும் தனது தாய் நாட்டிற்கு மட்டுமின்றி, உலகத்திற்கே நிவேதனம் செய்து அரிய தொண்டு செய்த உண்மைப் பாரதப் புதல்வரும், ஸ்ரீமத் ராமகிருஷ்ண பரம ஹம்ஸ தேவரது முதன்மை பெற்ற சீஷரும், அமெரிக்காவில் நடைபெற்ற சர்வ மத மகா நாட்டிற்கு விஜயம் செய்து "சகோதரர்களே, சகோதரிகளே" என்ற இரண்டு வார்த்தைகளால் ஒரே சமயத்திலேயே ஒருங்கே சகோதரத்வத்தையும் சமத்துவத்தையும் போதித்து, அவர்களெல்லோரையுமே கவர்ச்சித்த பிறகு, வேதாந்தத்தின் உண்மையான தத்துவங்களை அங்கு எல்லோரும் சம்மதம் சாமதம் என்று சொல்லும்படியாக எடுத்துக்காட்டி, இந்தியாவின் அரும் பெரும் பொக்கிஷமான ஆத்மீக நூற்களின் கருத்துக்களையெல்லாம் அநேக அயல் நாட்டார்களுக்கு விரித்துக் கூறி இந்தியாவை ஞான இந்தியா என்று உலகத்தார் மதித்துக் கௌரவப் படுத்தும்படியாகச் செய்த ஞான சூரியனும் அமெரிக்கா ஐரோப்பாக் கண்டங்களில் சிலரைச் சீஷராக்கி அவர்களைத் தன்னைப் பின்பற்றும்படியாகச் செய்து அயல் நாட்டிலிருந்து தாயகத்திற்குத் திரும்பியவுடன், அநாதிகாலம் முதற்கொண்டு எல்லாவற்றிலும் முதன்மைபெற்று விளங்கிவந்த பாரத பூமி ஏழ்மையான நிலையிற் கிடந்து தவிப்பதைக் கண்டு மனம் பொறாது, புராதனப் பெருமை கெட்டு, சுதந்திரம் இழந்து,



கல்வி யின்றி, செல்வமின்றி, உணவின்றி அடிமையிற் கிடந்து எத்தனையோ வகைகளில் எவ்வளவோ கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் இந்திய சகோதரர்களை நோக்கி, "எழுமின்! விழிமின்! கருதிய கருமம் கைகூடும் வரை உழைமின்! அறிமின்! என்று கண்ணீர் சொரிந்துகொண்டே தட்டி எழுப்பிய ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளது அன்பு ததும்பும் ஆவேச மிக்க அமிர்த மொழிகள் அப்பொழுதிலும் இப்பொழுது இலட்ச மடங்கு அதிக சக்தியுடன் மின்சார வேகத்தில் ஒவ்வொரு இந்தியனுடைய இருதயத்திலும் இந்தியனுடைய இரும்புபோன்ற இருதயத்திலும்கூட ஊடுருவிப் பாய்ந்து எத்தனை வகை வகையான நல்லுணர்ச்சிகளை உண்டாக்கிப் பொங்கித் ததும்பிக்கொண் டிருக்கின்றன? ஆகையாலே, அப் பெரும் வாலிப மகானைப்பற்றிச் சிறிது இங்கே ஆராய்வோமாக.

கல்கத்தாவில் அவர் ஒரு வக்கீலின் குமாரர். பி. ஏ. (B. A.) படித்துப் பட்டம் பெற்றவர். ஐரோப்பிய தத்துவ சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்தவர். பல மதங்களைப் பற்றி அதிகம் வாசித்து வந்தவர். கடவுளைக் கண்டறிய வேண்டுமென்று அடங்கா ஆவல் கொண்டவர். பெரிய சந்நியாசிகளையும் பெரிய பெரிய அறிஞர்களையும் கண்டால் "தாங்கள் கடவுளைப் பார்த்திருக்கிறீர்களா?" என்று அவர் கேள்வி கேட்டுத் தனது ஆத்மீக தாகம் அடங்காது கஷ்டப்பட்டவர். இதே கேள்வியை அன்று புதிதாகப் போய்க் கண்ட ஸ்ரீமத் இராமகிருஷ்ண தேவரைக் கேட்டவுடன் அவர் "ஆம்" என்று பதிற் கூறி விவேகானந்தருக்குத் தனது தொடு கையால் (ஸ்பரிஸத்தால்) ஆத்மானுபூதியை அளித்ததிலிருந்து துறவறம் பூண்டவர்.

எந்தச் சர்க்காராலும் உதவி செய்யப்படாமலும், மத ஸ்தாபனங்களால் அழைக்கப்படாமலும் ஆதரிக்கப்படாமலும் அமெரிக்காவில் கூடிய சர்வ மத மகா நாட்டிற்குத் தன்னந் தனியே சென்று இந்து மதத்தைப் பற்றி அங்குப் பேசி அமெரிக்காவில் இந்து மதத்தை மதிக்கும்படி செய்தவர். இவ்வாறு கௌரவம்

அடைந்த முதல் இந்தியர் இவரே. ஐரோப்பாவிலும் அபரிமிதமான பிரசங்கங்கள் செய்து வேதாந்தத்தை இவரே வெளிக்குக் காட்டியவர். அயல் நாடுகளிலும் உள் நாடுகளிலும் வேதாந்தத்தைப் பரவச் செய்வதற்கும் போதகர்களைத் தயார் செய்வதற்கும் இந்தியாவில் கஷ்ட நிவாரண வேலை செய்வதற்கும் கல்வியைப் பரவச் செய்வதற்கும் இவரால் ஏற்படுத்தப்பெற்ற ஸ்தாபனம் இப்பொழுது நன்கு வேலை செய்து கொண்டு வருகிறது. இந்தியர்களைக் கேவலமாய் மதித்திருந்த அமெரிக்கர்கள் விவேகானந்த சுவாமிகளால்தான் இந்தியர்களை மதிக்க ஆரம்பித்தார்கள். அமெரிக்கர்களிலும் ஆங்கிலேயர்களிலும் சிலர் சுவாமிகளுக்குச் சீடர்கள் ஆனார்களென்றால் சுவாமிகளின் பெருமையை எவ்வாறு கூறுவது? அமெரிக்காவில் ஸான் பிரான்ஸிஸ்கோ (San Francisco) என்ற நகரில் ஒரு ஹிந்துக் கோவிலைக் கட்டும்படியும் சில இடங்களில் ஆச்சிரமங்களை ஏற்படுத்தும்படியும் ஏற்பாடு செய்தார். இதர மதங்களைப் பெரிதும் மதித்து மரியாதை செய்தவர்.

கையில் காசைத் தொடாது ஒரே வஸ்திரத்துடன் இமய மலை முதல் கன்னியா குமரி முனை வரை அநேக இடங்களில் அலைந்து திரிந்து சஞ்சாரஞ் செய்து தேசத்தின் நிலைமையை உள்ளபடி நன்கு அறிந்தவர். நன்கு கற்றறிந்தவர். 19-ம் நூற்றாண்டின் உலகப் பெரியாரில் ஒருவர். நல்ல தீர்க்க தரிசி; உயரிய கர்ம யோகி; மேலான ஞான யோகி. புத்த பிரானது இருதயப் பான்மையையும் சங்கராச்சாரியாருடைய மூளைச் சக்தியையும் பெற்றவர். அடிமைத்தனத்தை வெறுத்த சுதந்தர புருடர். அன்னிய ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுதலை யடையப் பெரிதும் தாகமுடையவர். இந்திய வாலிபர்களை விழிக்கும்படி செய்து இந்தியாவில் வாலிப இயக்கத்திற்குப் புத்துயிர் கொடுத்தவர். சமூகக் கொடுமைகளையும் பூசாரித் தந்திரங்களையும் மூடப் பழக்க வழக்கங்களையும் வெறுத்த பெரிய சீர்திருத்தக்காரர். தேசியக் கல்வியில் ஆர்வ மிக்கவர். சத்தியத்தையே மதமாகக் கொண்டு, உலகத்தை முற்றிலும் தமது தேசமாகக் கொண்டபோதிலும், இந்தியாவையே பெரிதும் நேசித்த தேசாபி



மான மிக்க ஆத்மீக ஞானி. அவருடைய எண்ணங்களையெல்லாம் இந்தியாவின் புனர் உத்தாரண வேலை விஷயமே அதிகமாகக் கவர்ந்திருந்தது. இந்தியாவானது மீண்டுமோர் தடவை நூதன உயிர்பெற்றெழ வேண்டுமானால், ஜனத் திரள்களெல்லாம் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்றும் ஒவ்வொரு இந்தியரும் அன்ன விசாரமற்றுச் சமூக வாழ்வில் நன்றாய் இருக்க வேண்டும் என்றும் கண்டறிந்து அதனைக் கதறிக் கதறிப் போதித்தவர்.

ஊக்கமும் உற்சாகமும் உணர்ச்சியும் உண்டாக்கும் கடிதங்களை எழுதக் கூடியவர். அருமையான அழகான ஆவேசமான பிரசங்கி. மாதர் விடுதலையில் விருப்பமுள்ளவர். மகா ஞானியாகவும் பெரிய யோகியாகவும் அரிய தொண்டராகவும் சிறந்த பக்தராகவும் சரியான சீர்திருத்தக்காரராகவும் உத்தம மாணவராகவும் திறமையான ஆசிரியராகவும் அனுபவ மிக்க குருவாகவும் தேர்ந்த நிர்மாணியாயும் ஆத்மீகத் தலைவராகவும் ஏழைகள் நேயராகவும் விளங்கினார். ஆத்மீக அபி விருத்திக்கு நல்லாரோக்கியமும் நல்ல பலமும் அதிகம் வேண்டுமென்று கண்டு போதித்தவர். சங்கீதத்தில் மகா விருப்புற்றவர். இனிமையான சாரீரம் உடையவர். சங்கீதக் கலையில் மிகவும் பற்றுடையவர். கம்பீரமான தோற்றத்துடன் அழகானவர். இவர் இல்லாவிடில் இந்து மதத்தின் இன்றைய நாள் சரித்திரம் வேறு விதமாயிருக்கும்.

பரத கண்டத்தில் பிறந்த ஒவ்வொருவரும் பூஜித விவேகானந்த சுவாமிகளைப் பற்றி அநேக வழிகளில் அதிகமாய் அறிந்து கொள்ள வேண்டியது அத்யாவஸ்யம்.

"பாரதி"யில் சுவாமிகளைப் பற்றிப் பல தலைப்புகளின் கீழ் எழுதப்போகிறோம். விவேகானந்தத் திருநாமம் வாழ்க! வாழ்க!!

# ஆசிரியர் குறிப்புகள்.

## ஆசிரியர் அறிக்கை

அதிமதுரத் துண்டுகள் என்ற தலைப்பில் அடுத்த மாதம் எமது வியாசம் வெளி வரும். ஒவ்வொரு சந்தாதாரரும் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்.

## "பாரதி"யின் பிரதிநிதிகள்

"பாரதி"ப் பத்திரிகைக்குச் சந்தாதாரர்கள் சேர்க்கும்பொருட்டு நகரத்தார் நாடு, தமிழ் நாட்டின் பல ஜில்லாக்கள், மலேயா, இலங்கை முதலிய விடங்களுக்கு நமது பிரதிநிதிகள் செல்வதால், ஆங்காங்குள்ள நமது நண்பர்கள் அவர்களிடம் அநேக சந்தாதார்களைச் சேர்த்துக் கொடுத்து, "பாரதி"யை வளர்த்து எமது பொது நலத் தொண்டில் உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## நமது நாட்டில் இப்பொழுது தேசீய உணர்ச்சி

இந்தியாவில் தேசீயம் இன்று நூதன உயிர்பெற்று ஓங்கிப் பரவி வேகமாய், வளர்ந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு மனிதருக்கும் தினந்தோறும் அத்யாவஸ்யமான உப்பு எவ்வளவு அதிகம் இந்தியாவில் வேண்டப்படுகிறதென்பதையும் அற்பச் செலவில் செய்யும் உப்பிற்கு இந்திய மக்கள் அதிகமாக வரி கொடுக்கிறார்கள் என்பதையும் நன்கு பரிசீலனை செய்து அறிந்து உப்புச்செய்து தேசத்தார்களுக்கு உபகாரம் செய்ய மகாத்மா காந்தி அவர்கள் ஆரம்பித்துவிட்டார். தேச முற்றிலும் ஒற்றுமை உண்டாக நல்லதொரு பொன் போன்ற சந்தர்ப்பம் வந்திருக்கிறது. தேச மக்கள் இத்தருணத்தில் தான் அபார ஒற்றுமை அடைந்து, உறுதியுடன் உழைத்து தேச விடுதலை அடையவேண்டும். தேச பக்தி நிறைந்த வாலிபர்கள் துள்ளிக் குதித்துக் கொண்டு தேச சேவை செய்ய ஓடி வந்துகொண்டிருக்கிறார்கள். சில ஆண்டுகளாய் அயர்ந்திருந்த தேசீயம் மறுபடியும் புதிய சக்தி அடையும்படி செய்வது பாரத மக்கள் கடமையாகும்.



## மே. த. இராஜப் பிரதிநிதி அவர்களுக்கு நிருபம்

மேன்மை தங்கிய வைசிராய் அவர்களுக்கு மகாத்மா காந்தி அவர்கள் ஒரு கடிதம் எழுதி, ஒரு ஆங்கில வாலிபர் மூலம் அனுப்பியிருந்தார். அந் நிருபத்தில் ஆதியிலிருந்து அந்தம் வரைக்கும் உண்மையும் உருக்கமும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. ஒரு சித்திரக்காரன் போன்று காந்தி அடிகள் ஒரு திருமுகத்தில் தேசத்தின் நிலையை நன்கு விளக்கிக் காட்டி விட்டார். அஞ்சா நெஞ்சத்துடன் நேசப் பான்மையில் இரத்தினச் சுருக்கமாய் உள்ளதைக் கூறிவிட்டார். இக் கடிதத்தில் எல்லா விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. வருங்கால இந்திய மக்கள் இந்த லிகிதத்தை ஒரு பெரிய தேசீய சாசனமாக—சொத்தாகப் போற்றப் போகிறார்கள். தங்கத்தில் இரத்தினங்களால் ஆக்கப்பெற்ற எழுத்துக்களால் இக் கடிதம் அமையப் போகின்றது,

வாக்கியங்கள் தோறும் அன்பின் மணம் கமழும், சுதந்திரம் ஜ்வலிக்கும், வீரம் உதிக்கும், பணிவு ததும்பும். இந்த ஸ்ரீமுகம் வேண்டுமென்றே பிடிவாதம் செய்யும் பிரிட்டிஷ் சர்க்காரின் கல் மனதை எவ்வாறு உருக்க முடியும்? அடிகளாரின் அன்பார்ந்த வேண்டுகோள் உல்லங்கனம் செய்யப்பட்டபடியால் இந்தியாவில் அன்று முதல் அறப்போர் ஆரம்பமாகிவிட்டது.

## சர்தார் படேலின் சிறைப் பிரவேசம்

மகாத்மா சுதந்திரச் சங்கு எடுத்து அறப்போருக்கு அழைப்பதற்கு முன்னரே சர்க்காரின் தடை யுத்திரவை மீறினரென்று மகாத்மா அவர்களுக்கு வலது புஜமாக விளங்கும் பார்டோலி வீரர் சர்தார் படேல் அவர்கள் 3 மாதம் தண்டிக்கப்பட்டு சிறையில் தேச சுதந்திரத்திற்காகத் தவங் கிடக்கிறார். சுதந்திர தேவி அவருக்குச் சமீபத்தில் சுதந்திர இந்தியாவைக் காணும் வரத்தைக் கொடுக்கப் போகிறாள். இந் நாளும் சமீபித்துக்கொண் டிருக்கிறது.

அற்ப விஷயங்களைச் சொல்லி அபார தேசாபிமானிகளை அடைத்து வைப்பதால் அடிமைத்தனம் அழிந்து தேசமெங்கும் தேசீயம் காட்டுத் தீ மாதிரியாகப் பரவப் போகின்றது. சைனாவில் டாக்டர் சன்-யாட்-சேன், துருக்கியில் காஜி முஸ்தபா கமால், அயர்லாண்டில் டிவாலிரா, எகிப்தில் ஜகூல்பாட்சா, ருசியாவில் லெனின் முதலியவர்களை ஞாபகப்படுத்துகிறோம். ஒரு படேலுக்கு நூறு ஆயிரம் பதினாயிரம் படேல்கள் தோன்றிவிட்டார்கள். "வெற்றிப்படேல் சிறைசென்றதற்காக அளவற்ற ஆனந்தம் அடைகிறோம்.

அல்லது சாவு” என்று இப்பொழுது ஆரம்பித்திருக்கும் தர்மப் போர் வெற்றி அடைவதற்குச் சிறைச்சாலைத் தவச்சாலையாக மாற்றம் அடைய வேண்டி யிருக்கிறது. அடிமை நாட்டில் வெளியில் இருப்பதற்கும் சிறையில் இருப்பதற்கும் வித்தியாசமென்ன? இந்தியா தேசமே வீரர் படேல் அவர்களை வாழ்த்திச் சர்க்காரைக் கண்டனம் செய்துகொண் டிருக்கிறது.

## உலகப் பெரியார்

மேன்மைதங்கிய இராஜப் பிரதிநிதி யவர்கள் மகாத்மா அவர்களின் கடிதத்திற்கு இணங்காதது கண்டு தர்ம யுத்தம்—தேச விடுதலைப் போர்—தெய்வீகத் தன்மை பொருந்திய சமர்—கத்தியின்றி வேறெவ்வித ஆயுதமுமின்றி அன்பு வழிபற்றிப் போராடும் சத்தியாக்கிரகச் சண்டை—பாரத மாதாவினது சுதந்திர யுத்தம் 12–3–1930 யன்று ஆரம்பித்திருக்கிறது. அன்று இந்தியாவுக்குச் சுபதினமாகும்—உலக சுதந்திரப் போராட்டச் சரித்திரத்தில் அந் நாள் குறிக்கப்படும் அவ்வளவு புனித தினமாகும். உப்பு வரியை எதிர்த்து உப்பைச் சுயேட்சையாய்த் தயார் செய்யும் பொருட்டு இம் மாதம் 12 உயன்று காலையில் சபர்மதி சத்தியாக்கிரக ஆச்சிரமத்திலிருந்து தொண்டர்களுடன் புறப்பட்டுவிட்டார். வெற்றியடையாமல் திரும்புவதில்லை யென்று திடசித்தமா யிருக்கிறார். ராமச்சந்திரமூர்த்தி வனவாசத்திற்குப் புறப்பட்டதுபோல அடிகள் அவரது செந்தாமரை அடிகள் சிவந்து வலிக்க நாள் 1-க்கு ஏறக்குறைய 10 மைல தூரம் நடந்தே செல்கிறார். பல கிராமங்களில் தங்கித் தங்கி சென்றுகொண் டிருக்கிறார். அவர் செல்லு மிடங்களெல்லாம் அவரது ஆச்சிரமம் கூடவே செல்வதுபோற் தோன்றுகிறது. கடந்து செல்லும் ஒவ்வொரு கிராமத்திலும் குதூகலமான மனமுவந்த வரவேற்புகள் ஒரு பெரிய ராஜாதி ராஜனுக்கு செய்வதுபோல அவருக்கு நடந்துகொண் டிருக்கிறது.

காந்தி முனிவரைப் பெருங் கூட்டம் பின்பற்றிப் போய்க்கொண் டிருக்கிறது. இது பெருங் காட்சியாக இருக்கிறது. பல பத்திரிகா நிருபர்கள் பின்பற்றிக்கொண்டு செல்லுகிறார்கள். சில சினிமாப் படக் கம்பெனிகள் அடிகள் திருக் கூட்டத்தைப் பலவிதங்களாகப் படங்கள் பிடித்துக்கொண்டு பின் செல்லுகிறார்கள். எத்தனையோ கிராம உத்தியோகஸ்தர்கள் தங்கள் உத்தியோகங்களை ராஜிநாமா செய்துகொண் டிருக்கிறார்கள். இப் பெரும் வைபவத்தை எவ்வாறு கேவலம் வார்த்தைகளால் வர்ணிப்பது? உலகமே மௌனமாக ஆச்சரியத்துடன் நின்று இதைக் கவனித்துக்கொண் டிருக்கிறது. குஜராத் தேசத்தில் நடப்பதால் குஜராத்தே இதில் முதன்மை பெற்



றிருக்கு மென்பதில் சந்தேகமில்லை. நாடெங்கும் அடிகளுக்கு ஆதரவு அதிகமாகிக்கொண் டிருக்கிறது. அநேக பண உதவியாளர்களும் கணக்கற்ற தொண்டர்களும் நாடெங்கும் தயாராகிக்கொண் டிருக்கிறார்கள். சமீபத்தில் விடுதலை கிடைக்கப்போகிறது! அடிகளுக்கு ஜெயம் கிடைக்கட்டும்! உலகத்தில் சுதந்திரம் பெருகட்டும்! அவர் நெடுங்காலம் வாழ்க!

## பீஜீயில் தென்னிந்திய ஐக்கியச் சங்கம்

பீஜித் தீவில் நாடி என்ற நகரத்தில் வசிக்கும் தமிழச் சகோதரர்கள் தென்னிந்திய ஐக்கிய சங்கம் என்ற ஓர் நிலையத்தை ஸ்தாபித்துப் பொதுநல வேலைகளைச் செய்து வருகிறார்கள் என்று அறிந்து சந்தோஷப்படுகிறோம். இச் சங்க ஆதீனத்தின் கீழ் சில ஆயிரம் பவுன்கள் செலவு செய்து ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடம் சமீபகாலத்தில் ஏற்படுத்தி யிருப்பது தமிழ் மக்களுக்குச் சந்தோஷச் செய்தி யாகும். கடல் கடந்து நெடுந் தூரத்தில் வசிக்கும் இந்த தமிழச் சோதரர்களின் பாஷாபிமானத்தைப் பெரிதும் போற்றுகிறோம். தென்னிந்திய ஐக்கிய சங்கமும் அதனைச் சார்ந்த கல்விச் சாலையும் நிலைத்து நின்று பன் னெடுங்காலம் நிலவுமாறு இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

## ஸ்ரீமான் சென்குப்தா அவர்கள்

ஒத்துழையாமை காலத்தில் தீவிரமாக உழைத்துப் பங்காளத்தில் அரிய தொண்டு செய்தவரும், இப்பொழுது கல்கத்தா நகரின் மேயரு (தலைவர்) மான ஸ்ரீமான் சென்குப்தா அவர்கள் பெரிய உண்மை தேச பக்தரென்பதை அகில இந்தியாவே அறியும். 1928-ம் வருடத்தில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் சபையில் அவர் பேசிய ஆணித்தரமான வாக்குகள் பெரிதும் போற்றத்தக்கன. அவர் தேக சுகத்திற்காக சிங்கப்பூருக்குப் பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பும்பொழுது, இரங்கூன் தலைவர்களின் விருப்பப்படி அங்கு இறங்கிச் சில பிரசங்கங்கள் புரிந்தார். இப்பொழுது அங்கு பெரும் பேச்சாகவிருக்கும் பர்மாப் பிரிவினை விஷயமாகவும் பேசினார்.

பர்மா சர்க்கார் மீது துவேசம் உண்டாக்கக்கூடிய விதமாய் அவர் பேசியதாக ஓநாயும் ஆட்டுக்குட்டியும் என்ற கதைபோல அவர்மீது குற்றம் சாட்டி அவரைக் கல்கத்தாவிலிருந்து இரங்கூனுக்குக் கொண்டுபோய் 10 நாட்கள் வெறுங்காவல் தண்டனை விதித்திருக்கும் பர்மா அரசாங்கத்தின் அற்பத்தனத்தை எவ்வாறு கூறுவோம்? ராஜாங்க துவேசத்திற்கு எவ்வளவு பெரிய தண்டனை! எப்படியேனும் ஸ்ரீமான் குப்தா அவர்களைத் தண்டிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு செய்த வேலையாகும் இது. இந்தக் கேவலமான நடத்தைக்காகப் பர்மா சர்க்காரை இந்திய நாடெங்கும் கண்டனம் செய்துகொண் டிருக்கிறார்கள். சமீபத்தில் பாரதியார் பாடல் தடுப்பு விஷயமாய்ப் பர்மா சர்க்கார் கண்மூடித்தனமாய் நடந்துகொண்டதைத் தமிழர்கள் மறந்திருக்கவே மாட்டார்கள். தேசத்திற்காகச் சிறை சென்ற திரு திரு சென்குப்தா அவர்களைப் போற்றுகிறோம்.

இலங்கை இந்தியப் பொருள் உதவியைக் கொண்டே ஜெயிக்கப்பட்டது. அது இன்று இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டு கிரௌன் காலனி (Crown Colony) யாக (அரசருக்குச் சொந்தமாக) விளங்குகிறது. பர்மா நாடோ நமது சேனைகளாலும் திரவியத்தாலும் ஜெயிக்கப்பட்டது. அதை இந்தியாவிலிருந்து பிரிக்கப்பெரும் பிரயத்தினங்கள் செய்யப்படுகின்றன. மெசபடோமியா என்ற ஈராக் தேசத்தை ஜெயித்தவர்கள் இந்தியரே. ஆப்பிரிக்காவில் போயர் யுத்தத்தில் பிரிட்டிஷாரின் வெற்றிக்குக் காரணஸ்தர் யார்? இந்தியரே! அவ்விடங்களில் இந்தியருக்கு ஏதேனும் சுதந்திரம் உண்டா? அங்கு இந்தியர் படும் கஷ்டம் சொல்லி முடியாது. சென்ற ஐரோப்பிய பெரும் போரில் பிரிட்டிஷ் கொடி கடைசிவரையில் உயரப் பறந்துகொண்டிருப்பதற்குக் காரணர் இந்தியரென்பதை மறந்துவிட்ட ஆங்கிலேயரின் நன்றியை என்னென்போம்? உள்ளதைச் சொன்ன திரு. குப்தாமீது பர்மா அரசாங்கத்திற்கு வயிற்றெரிச்சல் வந்து கொதிப்பது நியாயந்தானே.

## ஸ்ரீமான் சுப்பையா பிள்ளை அவர்கள் மறைவு

தமிழ் வித்வானும் "வீர பத்தினி" நூலாசிரியரும் எமது ஆப்த நண்பருமான தஞ்சை ஜில்லா ஆலங்காடு ஸ்ரீமான் து. சுப்பையா பிள்ளையவர்கள் காலங் கடந்து விட்டாரென்ற செய்தியைக் கேட்டு அளவற்ற துக்கமடைகிறோம். இத் தமிழ்த் தொண்டரின் உயரிய சேவையைத் தமிழ் மாது இழந்து வருந்துகிறாள். இவர் இருந்திருப்பரேல் "பாரதி"யின் வாசகர்கள் இந்த அன்பருடைய இனிய கட்டுரைகளைப் படித்து மகிழ்வார்கள். நாம் ஒரு துணைவரை இழந்து தவிக்கின்றோம். யௌவன வயதில் மூன்று பெண் மகவுகளையும் யௌவன மனைவியையும் விட்டு ஆவி துறந்த அன்னாரது குடும்பத்தாரனைவருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவரது ஆத்மா சாந்தி அடைவதாக!

## தமிழர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

பண்டைத் தமிழர் வீரத்தைப்பற்றி வானளவு புகழ்ந்து பேசும் தமிழர்-புராதனத் தமிழரது கலை ஞானங்கள்-நாகரீகம் என்று அடிக்கடி பெருமை பாராட்டும் தமிழர் இப்பொழுது தங்களுடைய வீரத்தையும் தீரத்தையும் தியாகத்தையும் தேசாபிமானத்தையும் காட்டுவதற்கு மேலான சந்தர்ப்பம் வந்திருக்கிறது. தமிழ் நாட்டில் கட்சி துவேஷங்கள் ஜாதிச் சண்டைகள் கனல்விட்டு எரிந்துகொண்டிருக்கின்றன. போதாக் குறைக்கு இந்து முஸ்லீம் வேற்றுமையும் முளைக்க ஆரம்பித்திருக்கிறது.

தமிழச் சகோதரர்களே! தேசவிடுதலையின் பொருட்டு—இந்தியர்களின் க்ஷேமத்தின் பொருட்டு எல்லாவித வேற்றுமைகளையும் நிர்மூலம் செய்துவிட்டு ஓடிவந்து தேசீயத்தில் ஒன்று சேருங்கள். தேசீய வேலை செய்யுங்கள். தாமதம் வேண்டாம். தாமதமே வேற்றுமை; தாமதமே பலவீனம்; தாமதமே தோல்வி. இந்திய மாதா ஆபத்தில் சிக்கிக்கொண்டு உங்கள் அனைவரையும் அழைக்கிறாள். தீவிரமாய் வந்து அம்மையாளை விடுவியுங்கள்.

14652

வி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

கா. நமச்சிவாய முதலியார் பதிப்பித்த

## தொல்காப்பியம்

| | | | |
|---|---|---|---|
| பொருளதிகாரம், இளம்பூரணம்— அகத்திணையியல், புறத்திணையியல் ... | 3 | 0 | 0 |
| சொல்லதிகாரம், இளம்பூரணம் ... ... | 3 | 0 | 0 |
| எழுத்து, சொல், பொருள் (மூலம்) ... ... | 2 | 0 | 0 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் ... ... | (அச்சில்) | | |
| திருவாசகம் திருக்கோவையார் ... ... | 1 | 12 | 0 |
| தணிகை புராணம் ... ... ... | 5 | 0 | 0 |
| திருஞான சம்பந்தர் (வசனம்) ... ... | 0 | 10 | 0 |
| திருநாவுக்கரசர் (வசனம்) ... ... ... | (அச்சில்) | | |

கா. நமச்சிவாய முதலியார் எழுதிய

## இயற்கைப் பொருட் கதைகள்—

| | | | |
|---|---|---|---|
| (இதில் குளவி, சிலந்தி, வண்டு, பட்டாம் பூச்சி, வெட்டுக்கிளி, எறும்பு, ஊங்காரப் பறவை, தும்பி, தேனீ, நத்தை, ஆந்தை முதலியவை களின் விஷயங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன) | 0 | 8 | 0 |

## குமார வாசக புத்தகங்கள்—

| | | | |
|---|---|---|---|
| முதற் புத்தகம் முதற் பகுதி ... ... | 0 | 2 | 0 |
| முதற்-புத்தகம் இரண்டாம் பகுதி ... ... | 0 | 2 | 0 |
| இரண்டாம் புத்தகம் ... ... ... | 0 | 3 | 0 |
| மூன்றும் புத்தகம் ... ... ... | 0 | 4 | 0 |
| நான்காம் புத்தகம் ... ... ... | 0 | 5 | 0 |
| ஐந்தாம் புத்தகம் ... ... ... | 0 | 6 | 0 |

புஸ்தக வியாபாரம், சென்னை.

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

S. அனவரதவிநாயகம் பிள்ளை, எம். ஏ., எல். டி. எழுதிய

## வாசக பாடத் திரட்டு

இதனுள் ஐக்கிய நாணய சங்கம் (Co-operation), சாரணச் சிறுவர் இயக்கம் (Boy-Scout movement) முதலிய விஷயங்கள் புதிதாய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| முதற் புத்தகம் ... ... ... | 0 | 8 | 0 |
| இரண்டாம் புத்தகம் ... ... ... | 0 | 8 | 0 |
| மூன்றும் புத்தகம் ... ... ... | 0 | 8 | 0 |

ஷை போதகாசிரியர்

முன்னுரையும் அரும்பதவுரையும் எழுதிப் பதிப்பித்த

| | | | |
|---|---|---|---|
| பஞ்ச தந்திரம் ... ... ... ... | 0 | 10 | 0 |
| அவ்வையார் ... ... ... ... | 0 | 12 | 0 |
| மாணவர் தமிழ் அகராதி ... ... ... | 2 | 8 | 0 |
| கதாமஞ்சரி (முதல் பாகம்) ... ... | 0 | 4 | 0 |
| கதாமஞ்சரி (இரண்டாம் பாகம்) ... ... | 0 | 2 | 0 |

## NATURE STUDY READERS

பூ. மு. முருகேச முதலியார் எழுதிய

## இயற்கைப் பொருட் பாடம்

இவை சிறுவர்களுக்குப் பயன்படுமாறு அரிய விஷயங்களை எளிய நடையில் பெரிய எழுத்துக்களில் அழகிய படங்களும் சேர்த்து அச்சிடப்பட்டுள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (2-ஆம் வகுப்பு) ... | 0 | 2 | 6 |
| இரண்டாம் புத்தகம் | (3-ஆம் வகுப்பு) ... | 0 | 4 | 0 |
| மூன்றும் புத்தகம் | (4-ஆம் வகுப்பு) ... | 0 | 6 | 0 |
| நான்காம் புத்தகம் | (5-ஆம் வகுப்பு) ... | 0 | 7 | 0 |





ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

## CIVICS

## தேசபரிபாலனம்

நாம் இராஜாங்க விஷயமாகப் பற்பல உரிமைகளைப் பெற்று வரும் இக் காலத்தே நமது சிறுவர்களுக்கு தேச பரிபாலன சம்பந்தப்பட்ட அரிய செய்திகளைச் சிறிது சிறிதாகப் போதிக்க இயற்றியது.

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (4-ஆம் வகுப்பு) ... | 0 | 3 | 0 |
| இரண்டாம் புத்தகம் | (5-ஆம் வகுப்பு) ... | 0 | 5 | 0 |

## AGRICULTURE

## விவசாயம்

| | | | |
|---|---|---|---|
| *பயிர்த்தொழில் முதற் புத்தகம் ... ... | 0 | 3 | 0 |
| *பயிர்த்தொழில் இரண்டாம் புத்தகம் ... | 0 | 8 | 0 |

## *GOD-HEROES SERIES

விநாயக புராணம், கந்த புராணம், பாகவதம் என்னும் மூன்று பெரும் புராணங்களுட் கூறப்படும் முக்கிய சரிதங்களைச் சுருக்கி பல நீதிக் கதைகளுடன் முறையே கணபதி, குமரன், கோபாலன் என்னும் மூன்று சிறு புத்தகங்களாக எழுதப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| * கணபதி ... ... ... ... | 0 | 4 | 0 |
| * குமரன் ... ... ... ... | 0 | 3 | 0 |
| * கோபாலன் ... ... ... ... | 0 | 6 | 0 |
| * கோதண்டராமன் ... ... ... | 0 | 8 | 0 |
| * பார்வதி ... ... ... ... | 0 | 6 | 0 |

**கம்பராமாயணம்—**

| | | | | |
|---|---|---|---|---|
| பால காண்டம் | (சுருக்கம்) ... ... | 0 | 10 | 0 |
| அயோத்தியா காண்டம் | ,, ... ... | 0 | 14 | 0 |

*இக் குறியிட்டவைகள் தெலுங்கிலும் கிடைக்கும்

வி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

| | | | |
|---|---|---|---|
| ஆரணிய காண்டம் | ,, ... ... | 0 12 0 | |
| கிஷ்கிந்தா காண்டம் | ,, ... ... | (அச்சில்) | |

**பெரிய புராணம்**

| | | |
|---|---|---|
| சுருக்கம் (முதற் புத்தகம்) | ... ... | 0 12 0 |

**பெரிய புராணக் கதைகள்** (அச்சில்)

| | | |
|---|---|---|
| **கந்தபுராணச் சுருக்கம்** (முதற் புத்தகம்) | ... | 0 10 0 |
| திருஞானசம்பந்தர் | ... ... ... | 0 12 0 |
| திருநாவுக்கரசர் | ... ... ... | 0 10 0 |

பக்த சிரோமணிகள்

சரித்திரச் சுருக்கம்

| | | | | |
|---|---|---|---|---|
| திருநாவுக்கரசர் | ... ... ... | 0 | 2 | 0 |
| சுந்தரமூர்த்திகள் | ... ... ... | 0 | 2 | 0 |
| சம்பந்தர் | ... ... ... ... | 0 | 2 | 0 |
| மாணிக்கவாசகர் | ... ... ... | 0 | 2 | 6 |
| சேக்கிழார் | ... ... ... ... | 0 | 2 | 0 |
| மார்க்கண்டேயர் | ... ... ... | 0 | 2 | 6 |
| தாயுமானவர் | ... ... ... ... | 0 | 2 | 0 |
| திருவெண்காடர் | ... ... ... | 0 | 4 | 0 |
| நந்தனார் | ... ... ... ... | 0 | 4 | 0 |
| இராமானுஜர் | ... ... ... ... | 0 | 2 | 0 |
| ஆதி சங்கராச்சாரியார் | ... ... ... | 0 | 4 | 0 |
| திருமங்கை மன்னன் | ... ... ... | 0 | 2 | 0 |
| நம்மாள்வார் | ... ... ... ... | 0 | 2 | 0 |
| குலசேகராழ்வார் | ... ... ... | 0 | 2 | 0 |
| தொண்டரடிப்பொடி ஆள்வார் | ... ... | 0 | 2 | 0 |
| துருவ ப்ரஹ்லாதர் | ... ... ... | 0 | 4 | 0 |
| ஸ்ரீமந் நாதமுனிகள், ஸ்ரீ ஆளவந்தார் | ... ... ... | 0 | 2 | 0 |

# இங்கு

| | |
|---|---|
| விசிட்டிங் கார்டுகள் | காலெண்டர்கள் |
| விலாசங்கள் | ரசீதுப் புத்தகங்கள் |
| பில் பாரங்கள் | கெல்தி ரசீது ,, |
| நோட்டீஸ்கள் | உண்டியல் ,, |
| வால் போஸ்டர்கள் | கணக்கு ,, |
| விவாஹப் பத்திரிகைகள் | செக்ரூல் ,, |
| வரவேற்பு ,, | இதர ,, |
| உபசார ,, | பலவித பைல் ,, |
| அழைப்பு ,, | மாணவர் நோட்டு |

முதலியவைகளும், கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், கோவாப்ரேடிவ் பாங்குகள், ஜமீன்கள், எஸ்டேட்டுகள் ஆகியவற்றிற்கும் வேண்டிய விதம் விதமான பிரிண்டிங், ரூலிங் & பைண்டிங் வேலைகளைப் பலவித வர்ணங்களில் நேரான பார்வையில் கைதேர்ந்த வேலைக்காரர்களால் உறுதியாகவும் நேர்த்தியாகவும் உயர்தரமாகவும் குறித்த காலத்தில் சகாயமாகவும் செய்து கொடுக்கப்படும். எல்லாவித பேப்பர் தினுசுகளும் ஸ்டாக் செய்யப்பட்டிருக்கிறது. தபால் வழியாகவும், ரயில் மார்க்கமாகவும் அனுப்பி வைக்கப்படும்.

மாதிரியுடன் அட்வான்ஸையும் அனுப்பி, கடிதம் நன்கு தெரியும் வண்ணம் தெளிவாக எழுதி, சமீபத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷனையும் குறித்தனுப்புக.

வியாபாரிகள் தங்கள் சொந்த விற்பனைக்கு வேண்டிய ஆர்டர்கள் கொடுத்தால் அவர்கள் விலாசம் போட்டே செய்து கொடுக்கப்படும்.

மானேஜர், ஆனந்தா பிரஸ்,
உத்தமபாளையம், S. இந்தியா.

தேவை

# 'பாரதி'க்கு

சந்தா சேர்க்கவும், விளம்பரம் சேகரிப்பதற்கும்

**ஏஜண்டுகள் தேவை.**

மானேஜர், "பாரதி."

---

# ரூ. 500 இனும்!

எப்படி?

விபரம் தெரிய ½ அணு ஸ்டாம்பும் விலாசமும் அனுப்புங்கள்.

மானேஜர், தபாற் பெட்டி 99,
சென்னை.

---

# "லோகோபகாரி"

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினால் லோகோபகாரிக்குச் சந்தாதாரராய்ச் சேருங்கள், உலகத்துச் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளி வருகிறது. முப்பத்தைந்தாவதாண்டு நடக்கிறது.

பத்திராதிபர்: பரலி— சு. நெல்லையப்ப பிள்ளை,
லோகோபகாரி பத்திரிகாலயம்,
சிந்தாதிரிப் பேட்டை, சென்னை.

வருஷ சந்தா ரூபாய் நான்கு.



# "கலா நிலயம்"

## இது ஓர் இலக்கிய வாரப் பத்திரிகை.

கலையுணர்வும், கலா ஞானமும் பெறுவதற்கு இது ஒரு நல்ல கருவியென்றால் மிகையாகாது. இதில் இலக்கிய வளர்ச்சிக்குரிய கட்டுரைகளே மலிந்து வருகின்றன. கம்ப ராமாயணம், தமிழ்ப் பாடம், அகப்பொருள் வரலாறு, செந்தமிழ் நாவல், ஆங்கிலப் புலவர்களாகிய கார்லைல், ரஸ்கின், எமர்ஸன் முதலியோரின் கட்டுரை மொழி பெயர்ப்புகள், மற்றும் பல விஷயங்கள் அவ்வப்போது வெளிவரும்.

**சந்தா விபரம்.**

சந்தா உள்நாட்டிற்கு ரூ. 7-8-0. வெளிநாட்டிற்கு ரூ. 9-0-0 தனிப்பிரதி அணு 3. ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—மானேஜர்,
11, வெள்ளாளர்தெரு, புரசைபாக்கம், சென்னை.

---

விலை சரசம்! **ரங்கூன் புது வயிரம்** சரக்கு நயம்!



நிறம் ஜொலிப்பு கெட்டி உழைப்பு பார்வை மேன்மை எல்லாவற்றிலும் சிறந்தது. அரசத்திற்குத் தேயாதது உண்மை வயிரத்திற்கு ஒப்பானது பெருந்த விற்பனையாவது. காரட் 1-க்கு 4ரூ. முதல் 6ரூ. வரை யுள்ள தினுசுகளிருக்கிறது. மற்றும் இமிடேஷன் புஷ்பராகங்களும் ஏராளமாய்க் கிடைக்கும்.

விலாசம்:— அ. பொன்னுச்சாமி செட்டியார், சராப்புக்கடை,
பெரியகடை வீதி, திருச்சி.

---

# NEW BOOKS OF RESEARCH

**By. Prof. PURNALINGAM PILLAI, B. A., L. T.**

A FEW COPIES ON HAND.

**ENGLISH**

**Ravana the Great**
Sewed As. 12. Cloth R. 1.
**Critical Studies in Kural.**
Sewed R. 1-4. cloth R. 1-8
**Studies and Critiques in Modern English Literature** Re. 1.
**Stories from Goldsmith.**
Sewed As. 12 Limp Re. 1.
**Collectanea:**
Prose and Verse. As. 12.
(In print)

**TAMIL**

**Tappili, or The Faultless.**
(Essays) As. 10
**Marutthuvan Makal** or
**The Doctor's Daughter.**
(Novelette) As. 6.
**Katturai Kalanjiam.** (55 topics) As. 12.

Terms—11 copies for 10 purchased at a time. Liberal discount for large orders. No books on commission sale.

Apply to:— THE MANAGER, **The BIBLIOTHECA,**
Munnirpallam, Tinnevelly Dt., South India.

## உங்கள் விலாசம்

உயர்ந்த கடிதத்தில் "பாரதி"யின்
அளவில் 100 பிரதிகள் அடங்கிய
பேட் 1-க்கு ரிஜிஸ்டர் தபாற்
செலவுட்பட ரூ 1—8—0 தான்;
பேட் 2-க்கானல் ரூ 2—8—0.
உங்கள் ஆர்டரில் விலாசத்தைத்
தெளிவாக
தமிழா ஆங்கிலமா வென்பதையும்
எவ்விதக்
கலர் பேப்பரிலென்பதையும்
பணத்துடன் குறித்தனுப்புக.
மற்றத் தேவைகளுக்கும் கீழ்க்கண்ட
விலாசத்திற் கெழுதுக.

மானேஜர்,
ஆனந்தா பிரஸ்,
உத்தமபாளையம், S. I.

# T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி Ltd., போடிநாயக்கனூர்.

1913-ம் வருஷத்திய இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.

பங்கு 1-க்கு ரூ 3 வீதம்

900,000 பங்குகளின் பேரில்

2,700,000 ரூ மூலதனம்.

1. ஏல விவசாயிகளைத் தவிர வேறு எவரையும் பங்காளிகளாக ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

2. ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும், லாபத்தையும் பிரதானமாகக் கொண்டு பிரஸ்தாபக் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்று, ஏலச் சரக்குகளைக் கொள்முதல் செய்து லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அந்நிய தேசங்களுக் கனுப்பி வைத்தும் பாம்பை, கல்கத்தா, கராச்சி முதலிய துறை முகங்களில் சொந்தக் கடைகளை நிர்மாணித்தும் விற்றுமுதல் செய்து வருவதோடு சக்கர், முல்டான், டில்லி, லாகூர், அம்ரிட்ஸார், அலகாபாத், கான்பூர், ஆக்ரா, ஆதரிஸ், சென்னை முதலிய இடங்களில் விற்பனை ஏஜெண்டுகளைக் கொண்டும் விற்றுமுதல் செய்து வரப்படுகிறது.

3. நல்ல விலைக்கு விற்க விரும்பும் ஏல விவசாயிகளும், நல்ல ஏலச் சரக்கை வாங்க விரும்பும் வியாபாரிகளும் இக் கம்பெனியை ஆதரித்துத் தக்க லாபத்தையும் மிக்கப் புகழையு மடையும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

உ. ம. சே. முகையித்தீன்பிள்ளை ராவுத்தர்,
மானேஜிங் டைரெக்டர்,
T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி,
(லிமிடெட்.)
போடிநாயக்கனூர், மதுரை ஜில்லா.

**Wake up! Insure you must!!**

ஜெனரல் அஷ்யூரன்ஸ் சொஸைட்டி லிமிடெட், ஆஜ்மீர்.

இது மிக்க பழமையானதும், நம்பிக்கையுள்ளதும், அதிக லாபம் தரக்கூடியதும், ஏராளமான பாலிசிகளையுடைய ஸ்தாபனமும் ஆகும். வருஷம் 1-க்கு ரூ. 1000 மதிப்புள்ள பாலிசிக்கு லாபம் ரூ. 22—8—0 கொடுத்திருக்கும் முதன்மையான கம்பெனி இதுவே. இன்றே இன்ஷியூர் செய்யுங்கள்.

கம்பெனியின் விசேடங்கள்:—

ஐவேஜ் பூராவும் கவர்ன்மெண்டு உத்திரவாதம் பெற்றது. செலவோ குறைவு. லாபமோ அதிகம்.

சந்தாதார்களின் நன்மையைக் கருதி நடத்திவரும் கம்பெனி. இதில் ஒரு பாலிசி எடுத்தால் அது அழிவில்லாப் பொக்கிஷமாகும்.

கம்பெனியின் சட்ட திட்டங்கள் மிகவும் இலகுவானவை. அவைகளைப் பற்றித் தெரியவேண்டுமானால் அடியிற்கண்ட விலாசங்களுக்கு எழுதுங்கள்.

சீப் ஏஜண்டு:-

**S** வெங்கட்டராம அய்யர், B.A., L.T., புதுத் தெரு, மதுரை.

லோகல் ஏஜண்டுகள்:—

**M.** பரிமணம் பிள்ளை,
உத்தமபாளையம், P. O.

**R.** வெங்கட்டராமய்யர்,
மானேஜர், காளீஸ்வர ரைஸ் மில்ஸ்,
உத்தமபாளையம்.

# "பாரதி"

## ஓர் தேசீய மாஸிகை.

சந்தா விபரம்.

உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு ... 2—8—0
அல்லது 4 ஷிலிங்

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. எம் மாதத்திலிருந்து சந்தாதாரரானாலும் வருட ஆரம்பமாகிய ஜனவரி மாதத்திலிருந்தே பத்திரிகை அனுப்பப்படும்.

விலாசம்:—

மானேஜர், "பாரதி"
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

Edited and Published by R. NARAYANASWAMI.
Printed at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt.